விநாயகனே! வினை தீர்ப்பவனே!

விநாயகர் பாடல்கள்



கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்



விநாயகனே வினைதீர்ப்பவனே!

விநாயகனே
வினைதீர்ப்பவனே!



ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

நூல் விவரம்

- நூற்பெயர் :
  விநாயகனே வினைதீர்ப்பவனே!
- ஆசிரியர் :
  கலைமாமணி
  டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
- உரிமை :
  எஸ். அம்சவள்ளி
  (W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)
- அச்சிட்டோர் :
  பிராசஸ் இந்தியா
  294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
  இராயப்பேட்டை, சென்னை - 14.
- பதிப்பு : 2011
- பக்கம் : 208
- விலை : **130/-**
- நூலாக்கம் :
  டெலிபாய்ன்ட்
  திருவல்லிக்கேணி,
  சென்னை - 5.
- For Sales &
  Enquiries Contact : **S. AMSAVALLI**
  14, Amirtham Avenue, Bharani Street,
  Velacherry, Chennai - 600 042.
  Mobile : 9380297675, 9566042884
  email : ussankarram@gmail.com
  ussankarram@yahoo.com

- காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீடு : நெய்தல் பதிப்பகம்

எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5

Ph : 2848 3860
Mobile : 98415 37495
email : neithalp@yahoo.com



சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

– வாலி –

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது – நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்ச வல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்
இளம் புன்னகையை வைத்து
தன்வயம் எவரையும் ஈர்த்த
தண்முகம்;
நுவலும் பேச்சிலும்.
நோற்கும் பாட்டிலும்.
நுழைபுலம் துலங்க நிற்கும்
நுண்முகம்!

*   *   *

உருவம் குறில்;
உள்ளம் நெடில்; அவன்
உண்ணா
உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;
ஆறுமுகனையும்.
ஆனைமுகனையும்.
அதிகம் பாடியதாய்
ஆரைச் சொல்வது அவனை விடில்?

*   *   *

இவனால் தான்
இவன் பிறந்த
உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்
எழுந்தூர்ப்பேட்டை ஆனது;
இவன்
இயற்றிய
தனிப்பாடல்களாலும்;
திரைப்பாடல்களாலும்;
கானத்தமிழ்
கடல்கள் தாண்டி -
உலகத்தார்
உட்செவிக்குள் போனது!

*   *   *

வேங்கடவன்;
வேலவன்;
வேழமுகன்;
வாயு மகன்;
இன்னும்
இறையருள் பெற்ற.....

வேதாத்தரி;
விசிறி சாமியார்;

என
எந்த -
இறையும்;
இறையடியாரும் மிச்சமின்றி.....
இவனது -
பாடுபொருள் ஆயினர்; இவன்
பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

* * *

கண்ணதாசன் போல் - இந்தக்
கவிப்பெருந் தகையும்....

பெரியாரிடமிருந்து
பெருமாளிடம் வந்தவன்;
தான்பெற்ற இன்பம் - இந்தத்
தரணிபெற வேண்டி -

ஆன்ம
அனுபூதியை -
வையம் உய்யுமாறு
வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

* * *

சுருங்கச்
சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க - இடை
அறாது ஞானமழை பெய்தது!

* * *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

* * *

கோடம்பாக்கத்திலும் - அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் -
'சிவாஜி' யும் -

அகத்தியனாயும்; சோழ -
அரசை ஆண்ட ராஜராஜனாயும் -
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....

போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

* * *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

* * *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

* * *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....
அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ணத்தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

* * *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;
நல்ல பெயர்த்திகள்;

இவர்களின்
இதயங்களில் மட்டுமல்ல -
எம்மனோர்
எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -
வாழ்வாங்கு
வாழ -
கருத்துகளைக்
கற்கும்!

*   *   *

வாலி

கலைமாமணி
டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
ஒரு சிறு குறிப்பு

கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமூதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று. சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப்

பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக் களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாடுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

நெய்தல் பேசுகிறது....

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்ததொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ.வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு உ.பே.ச. - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
உலகம் பேசும் சண்முகம் - உ.பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்கும்தகடு
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

பொருளடக்கம்

விநாயகனே வினைத்தீர்ப்பவனே!
பாடல்கள் 17

மலேசியத்து விநாயகர் 193


விநாயகனே
வினைத்தீர்ப்பவனே!
பாடல்கள்



1. தத்துவ உருவம்

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம் - நல்ல
குணம்அதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால் - விவேக சிந்தாமணி

தத்துவ உருவமே முத்தமிழ்க் கணபதி
தனக்குமேல் தலைவன் இல்லாத குணநிதி
அற்புத வடிவம் அமைந்த அருள்நதி
ஆக்கல் அளித்தல் அழித்தல் அவர் விதி

(தத்துவ)

முக்கண் சந்திர சூரியர் அக்கினி
முகமும் நாபியும் ப்ரம்மனும் விஷ்ணுவும்
ஐங்கரம் ஐந்தொழில் ஆற்றலைக் காட்டிடும்
யானை வயிற்றினில் அண்டங்கள் அடங்கிடும்

(தத்துவ)

வினைஎனும் வெப்பத்தை இருசெவி விசிறிடும்
வேண்டிய யாவையும் தாள்மலர் தந்திடும்
உமையவள் சக்தியே இடப்புறம் ஒளிவிடும்
ஓம் எனும் ப்ரணவம் உலகெலாம் வலம்வரும்

(தத்துவ)

2. வினைதீர்க்கும் விநாயகன்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. - கபிலதேவ நாயனார்

விநாயகனே வினை தீர்ப்பவனே
வேழ முகத்தோனே ஞால முதல்வனே (விநாயகனே)

குணா நிதியே குருவே சரணம்
குறைகள் களைய இதுவே தருணம் (விநாயகனே)

உமாபதியே உலகம் என்றாய்
ஒரு சுற்றினிலே வலமும் வந்தாய்
கணநாதனே மாங்கனியை உண்டாய்
கதிர்வேலவனின் கருத்தில் நின்றாய் (விநாயகனே)

3. முன்னே நினைக

ஓரானைக் கன்றை உமையாள் திருமகனை
பேரானைக் கற்பகத்தைப் பேணினால் - வாராத
புத்திவரும் வித்தைவரும் புத்திரசம் பத்துவரும்
சக்திதரும் சித்திதரும் தான்

சுழிபோட்டுச் செயல்எதுவும் தொடங்கு - பிள்ளையார்
சுழிபோட்டுச் செயல் எதுவும் தொடங்கு - அதன்
துணையாலே சுகம் கூடும் தொடர்ந்து - அதன்
துணையாலே சுகம் கூடும் தொடர்ந்து - பிள்ளையார்
(சுழிபோட்டு)

அழியாத பெரும் செல்வம் அவனே- தில்லை
ஆனந்தக் கூத்தனின் மகனே - தில்லை
ஆனந்தக் கூத்தனின் மகனே - பிள்ளையார்
(சுழிபோட்டு)

வழியின்றி வேலனவன் திகைத்தான் - குற
வள்ளியவள் கைப்பிடிக்கத் துடித்தான்
மறந்துவிட்ட அண்ணனையே நினைத்தான் - மறு
கணத்தினிலே மகிழ்ச்சியிலே திளைத்தான் - பிள்ளையார்
(சுழிபோட்டு)

கேட்டதெல்லாம் கொடுக்கவரும் பிள்ளை - அவன்
கீர்த்திசொல்ல வார்த்தைகளே இல்லை
ஆட்டம் என்ன பாட்டமென்ன அனைத்தும் - அவன்
நாட்டம் இன்றி எவ்வாறு நடக்கும் - அவன்
நாட்டம் இன்றி எவ்வாறு நடக்கும் - பிள்ளையார்
(சுழிபோட்டு)

துும்பிக்கை நம்பிக்கை கொடுக்கும் - வரும்
துயர்யாவும் முன்நின்று தடுக்கும்
அஞ்சேல் என்றொருபாதம் எடுக்கும் - அவன்
அசைந்துவர அருள்மணிகள் ஒலிக்கும் - அவன்
அசைந்துவர அருள்மணிகள் ஒலிக்கும் - பிள்ளையார்

(சுழிபோட்டு)



4. குழந்தை கணபதி

ஒருமணிக் கொருமணி எதிரெதிர் ஒலித்திட
ஓங்காரம் ரீங்காரம் சங்கீதம் இசைத்திட
வான்வெளியில் தோன்றுதொரு யானை உருவம் - அதன்
வண்ணஉடல் பார்க்க ஒரு குழந்தை வடிவம் - சிறு
குழந்தை வடிவம் - பால் - வடியும் பருவம்
(ஒருமணிக்கொருமணி)

சிவமணிக் குபதேசம் செய்த ஒரு செம்பொன் மணி
முருகனின் முன்னவன் இவன்தானோ
முத்தமிழ் சொன்னவன் இவன்தானோ
சீரார்ந்த மதுரையிலே செங்கோல் செலுத்திவரும்
தேவியவள் மடியினிலே வளர்ந்தானோ - முகம்
மலர்ந்தானோ - நடை - பயின்றானோ
(ஒரு மணிக்கொருமணி)

வணங்கிடும் அடியவரை வாழ்த்தியே வரம் அருளும்
தூக்கிய துதிக்கை ஒன்று
வந்தவினைப் பந்தத்தின் வாட்டத்தை ஓட்டவரும்
தேட்டமிகு செவி இரண்டு
பரம்பொருள் வதனம் அதில் அமைந்ததைப் போலவே
பார்த்திடும் விழிகள் மூன்று
கரங்களோ நான்கு கனியொன்று கைக்கொண்டு
காப்பவன் தொழில்கள் ஐந்து - உயர்
கதிசேர வழிகள் என்று - அவன்
கமலமலர்த் தாள்கள் உண்டு (ஒருமணிக்கொருமணி)

5. துதிக்கையே துணை

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு - ஔவையார்

வாக்குதரும் நல்வாழ்வு தரும்
வளமும் நலமும் வழங்க வரும்
செல்வாக்கு தரும் நல்வாழ்வு தரும் (வாக்குதரும்)

தூக்கிய துதிக்கையே துணை நமக்கு
தொழுது துதிப்பவர்க்கு பயம் எதற்கு (வாக்குதரும்)

கேட்ட வரம்தரவே ஓடிவரும்
கிண்கிணிச் சதங்கை கொஞ்ச ஆடிவரும்
நாட்டம் வைத்தார் மனத்தை நாடி வரும்
நம்பிக்கை நாள்தோறும் கூடிவரும் (வாக்குதரும்)

வயலூர் முருகனுக்கு மூத்தவனே
வல்லபை கணபதியே முக்கணனே
புவனேஸ்வரி பெற்ற புண்ணியனே
பிரணவ மந்திரத்துப் பெரியவனே
யானை முகத்தவனே ஐங்கரனே
அழகுக் குழந்தைஎன நின்றவனே
ஞான ஒளிவீசும் நாயகனே
ஓம் வடிவான விநாயகனே (வாக்குதரும்)

6. சிந்தை அமர் முந்தைமுதல்

முன்னை முழுமுதலே மூத்த கணபதியே
முருகனுடன் பிறந்த திருஉருவே குருவே - குருவே

(முன்னை முழுமுதலே)

அன்னை தந்தை நீயே அம்மையப்பன் சேயே
என்னில் நீ இருந்து இசைமழை பொழிவாயே

(முன்னை முழுமுதலே)

உன்னை நினைக்காமல் ஒரு செயலும் இல்லை
ஓம்எனும் ஞானத்தாய் பெற்ற முதற்பிள்ளை
கண்ணுதலே நினது கருணைக்கு ஏது எல்லை
எண்ணிஎண்ணித் துதிப்பார் இல்லத்தில் என்ன இல்லை

(முன்னை முழுமுதலே)

7. வெற்றிமுகம் தரும் வேழமுகம்

வெற்றி முகம் தரும் வேழமுகம் வரும்
வேண்டிநின்றார் துயர்
விரைவினிலே விலகும் நலம் பெருகும் (வெற்றி முகம்)

நெற்றியில் பொட்டினில் குட்டிடுக - அவன்
நீண்ட துதிக்கை வாழ்த்து தரும்
கற்றதெல்லாம் ஒரு கைஅளவு - அவன்
கடைக்கண் காட்டுவது கடல் அளவு (வெற்றிமுகம்)

தத்துவ ப்ரணவம் திருஉருவம் - அவன்
மத்தள வயிற்றினில் அனைத்துலகும்
பற்றுக கணபதி பாதங்கள் - அவன்
நர்த்தனத்தில் வாழும் உயிர்க்குலங்கள் (வெற்றிமுகம்)

8. முன் நிற்பவன்

ஆனைமுகத்தான் அரன் ஐந்து முகத்தான் மகன்
ஆறுமுகத்தான் உடன் அவதரித்தான் அவன்

(ஆனைமுகத்தான்)

ஞானம் அளிப்பான் என்றும் நலம் அளிப்பான் தன்னை
நம்பியவர்க்கெல்லாம் கைகொடுப்பான் உடன்

(ஆனைமுகத்தான்)

ஓம்எனும் ப்ரணவ நாதமே அவன் தொடக்கம்
உலகம் எல்லாம் அவன் வயிற்றினிலே அடக்கம்
கானல்நீர் வாழ்க்கை கடலதனைக் கடக்கும்
தோணியாக வந்தே துதிக்கையால் அணைக்கும்

(ஆனைமுகத்தான்)

வெள்ளை உள்ளம் என்னும் வீட்டினில் குடியிருப்பான்
வீதிதோறும் நின்றே வேண்டும் வரம் அளிப்பான்
அள்ளி எடுத்த பிடி மண்ணிலும் அவன் இருப்பான்
ஐங்கரத்தான் அவன்தான் அனைத்திற்கும் முன்நிற்பான்

(ஆனைமுகத்தான்)

9. காக்கும் கடவுள்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே

- குருபாததாசர்

காக்கும் கடவுள் கணேசனை நினை
கவலைகள் அகல அவன் அருளே துணை

(காக்கும்)

யார்க்கும் எதற்கும் அவனே முதற்பொருள்
அன்பெனும் பிடியுள் அகப்படும் கருப்பொருள்
ஊர்க்கும் உலகிற்கும் ஒளிதரும் உரிப்பொருள்
உள்ளத்தில் அமர்ந்திருக்கும் ஓங்காரத் தனிப்பொருள்

(காக்கும்)

நாதமும் போதமும் ஞானமும் ஆனவன்
நம்பிக்கை வைப்பவர்கள் நாவிலே தேனவன்
ஓம்எனும் ஒலியதே உருவமாய் வளர்பவன்
உமையவள் மடியிலே குழந்தையாய்த் திகழ்பவன்

(காக்கும்)

10. முத்திக் குவித்து

வேலனுக்கு மூத்தவனே விக்ந விநாயகனே
வினைகளை வேரறுக்கும் துணைவனும் நீதானே

(வேலனுக்கு)

மூலப் பரம்பொருளே மூஷிக வாகனனே
முத்திக்கு வித்தாகும் சித்தி விநாயகனே

(வேலனுக்கு)

நாளும் உனை நினைவேன் நாவாரப் புகழ்வேன்
நல்லதெல்லாம் தருவாய் வல்லபையின் கணவா
தாளும் ஐங்கரமும் தயவும் இருக்கையிலே
சஞ்சலமும் வருமோ சங்கரனின் புதல்வா

(வேலனுக்கு)

தும்பிக்கையே எனக்கு நம்பிக்கை நலம் அருளும்
தொழுதிடும் திருவடிகள் துயர்கள்எலாம் களையும்
தஞ்சம் என்றால் மகனே அஞ்சலென்பாய் நீயே
சகல உயிர்களுக்கும் தாயே கணபதியே

(வேலனுக்கு)



11. முதற்பிள்ளை

முதற்பிள்ளை சிவனுக்கு மூத்தபிள்ளை - எதிலும்
முன்னின்று காப்பதிலே அவர்க்கோர் ஈடில்லை

(முதற்பிள்ளை)

துதிக்கை யானைமுகத் தோற்றமோ ஓம் உருவம்
எதற்கும் தொடக்கம்என இருக்கும் எழில் வடிவம்

(முதற்பிள்ளை)

அகங்காரம் உடைந்தால்தான் அமிர்தம் கிடைக்கும்என
சிதறுகின்ற தேங்காய் சிந்தனையில் நிறுத்தும்
அண்டங்கள் அவர்கையில் அண்டத்தில் அவர்என்றே
அந்த மோதகம் எனும் தின்பண்டம் உணர்த்தும்

(முதற்பிள்ளை)

மூலாதார சக்தி மூளையில் பாய்வதற்கு
தோப்புக்கரணப் பயிற்சி சூட்சுமமாய் உதவும்
பாதத்தாலே தூக்கி மேலமர்த்தும் வேழம்
போல அவர்பாதம் புகலிடமாய் அமையும்

(முதற்பிள்ளை)

12. ஓம் எனும் ப்ரணவம்

ஓம்எனும் ப்ரணவ உருஅமைந்தாய்
உலகெலாம் ஒளிதரும் திரு நிறைந்தாய் - கஜமுகனே

(ஓம் எனும்)

ஞான விநாயகா வரம்தருவாய்
நாவினில் நல்லிசை நலம் அருள்வாய் - கஜமுகனே

(ஓம் எனும்)

முன்னவா மூத்தவா முழுமுதலே
மூண்டிடும் வினைகளைத் தீர்த்தருளே
அண்ணலே நின்மலர் அடிபணிந்தேன்
அநுதினம் பாடியே மனம் மகிழ்ந்தேன் - கஜமுகனே

(ஓம் எனும்)



13. தத்துவனின் நர்த்தனம்

ஞால முதல்வனே நாயகனே - நலம்
நல்கிடும் சித்தி விநாயகனே - நாதனே

(ஞால முதல்வனே)

வேழ முகத்தவனே வித்தகனே - வினை
வேரறுக்க வரும் உத்தமனே

(ஞால முதல்வனே)

மூலப் பரம்பொருளே முக்கணனே - சிவ
முத்துக் குமரனுக்கு மூத்தவனே
நாதத்திலே எழுந்த தத்துவனே - என்
நாவினிலே ஆடும் நர்த்தனனே - நாதனே

(ஞால முதல்வனே)



14. கணபதியே வருக!

கணபதியே வருவாய் அருள்வாய்

(கணபதியே)

மனம் மொழி மெய்யாலே தினம் உனைத் துதிக்க
மங்கள இசை என்றன் நாவினில் உதிக்க

(கணபதியே)

ஏழு சுரங்களில் இன்னிசை பாட
எங்குமே இன்பம் பொங்கியே ஓட
தாளமும் பாவமும் ததும்பிக் கூத்தாட
தரணியில் யாவரும் புகழ்ந்து கொண்டாட

(கணபதியே)

தூக்கிய துதிக்கை வாழ்த்துக்கள் அளிக்க
தொனியும் மணிஎனக் கணீரென் றொலிக்க
ஊக்குக நல்லிசை உள்ளம் களிக்க
உண்மை ஞானம் செல்வம் கொழிக்க

(கணபதியே)

15. விநாயக சதுர்த்தி விழா

ஆவணி மாதம் திங்கட்கிழமை விசாக நட்சத்திரம்
சிம்ம லக்கினம் சதுர்த்தி திதியில் தேவன் அவதாரம்
வாழை மரங்கள் மாவிலை பந்தல்கள் தோரணம் கட்டிடுக
யானை முகத்தோனை வாழ்த்தி வரவேற்று முரசு கொட்டிடுக

(ஆவணி மாதம்)

மோதகம் அவல்பொறி அப்பம் அதிரசம்
முக்கனிகள் படைத்து
யாவரும் கூடியே ஏழிசை பாடியே
வாயாரத் துதித்து
வேண்டும் வரங்களைத் தாளனக் கூறியே
தேரினிலே வைத்து
மூன்றாம் நாளில் ஆற்றுத் தண்ணீரில்
விடுத்து விடைகொடுத்து
கணபதி வாழ்க என்போம் - அவன்
கழலடி தொழுது நிற்போம்

(ஆவணி மாதம்)

எதற்கும் முதல்வன் உமையின் புதல்வன் இவன்தான் தலைவன்
இவனை நினைத்து செயலைத் தொடங்க தடைகள் விலகும்
கணக்கு வழக்கு கல்வி செல்வம் கைகூடி வரவே
மனத்தில் வைத்து போற்றிப் புகழ மங்களம் பெருகும்
கணபதி வாழ்க என்போம் - அவன்
கழலடி தொழுது நிற்போம்

(ஆவணி மாதம்)

16. வெற்றி மேல் வெற்றி

நீ இன்றி எது நடக்கும் நினைத்தவுடன் அது நடக்கும்
வேழ முகம் வாழ்வளிக்கும் வெற்றி மேல் வெற்றி வரும்
பாடுகின்ற பாமணக்கும் பக்திசெய்வார் புகழ்நிலைக்கும்
நாளும் பூ மணக்கும் நவசக்தி நாயகனே
சித்தி விநாயகனே

(நீ இன்றி)

உள்ளமெனும் கூடத்தில் ஓங்காரத் தறி அமைத்தேன்
கள்ள மிலா அன்பென்னும் கயிறு கொண்டு கட்டி வைத்தேன்
வெள்ள மதம் பொழிகின்றன பிள்ளைக்குப் பாட்டிசைத்தேன்
செல்லமாய் நான் அழைத்தேன் தின்பண்டம் பல கொடுத்தேன்
நீ சுவைக்க நான் களித்தேன்

(நீ இன்றி)

உன்னைப் போல் ஒரு குழந்தை உலகத்தில் யாருண்டு
அன்னை தந்தை அகிலமென்றே அறிவித்தாய் கனிகொண்டு
முன்னவனாய் முன் நின்று முடித்துவைக்கும் திறன் கண்டு
கண்மணியைக் கைதொழுதால் கைநிறைய கற்கண்டு
காணலாம் கண் கொண்டு

(நீ இன்றி)

எழுகோடி மந்திரங்கள் விழி அசைவில் வெளிப்படுமே
எங்கெங்கும் உன்நாமம் ஏழிசையாய் ஒலித்திடுமே
பதினாறு பேறுகளும் வழங்கவரும் கற்பகமே
மயிலையிலே விளையாடும் மரகதமே அற்புதமே
மாணிக்கப் பெட்டகமே

(நீ இன்றி)

17. கொம்மடிக்கோட்டை கன்னி விநாயகர்

விருத்தம்

ஓம் எனும் ப்ரணவம் உன்னில் தொடங்கிடும்
வான வெளியினில் வலம் வரும்
ஞான முனிவர் வாலைகுரு ஸ்வாமிகள்
மேனியில் தவழ்ந்தே ஒளிவிடும் - என்
நாவினில் நடந்தே கவிதரும் - இசைக் கவிதரும்
நலம் தரும்..............

பாடல்

ஓம் எனும் ப்ரணவம் உன்னில் தொடங்கிடும்
வான வெளியில் வலம் வரும்
ஞான முனிவர் வாலை குரு ஸ்வாமிகள்
மேனியில் தவழ்ந்தே ஒளிவிடும் - என்
நாவினில் நடந்தே கவிதரும் - இசைக் கவிதரும்
நலம் தரும்................

(ஓம் எனும் ப்ரணவம்)

ஆசான் சந்நிதி அதனின் வலப்புறம்
பேசாது பேசுகின்ற நாயகா - விநாயகா
பாசாங்குசம் தரித்தாய் தீவினையை எரித்தாய்
மோதகத்தை எடுத்தாய் தும்பிக்கையால் கொடுத்தாய்
தந்தத்தில் ஒன்றை ஒடித்து - தமிழ்
சந்தக்கவி பல தொடுக்க
இந்தா என்றே அளித்தாய் - என்
இசைக்குத் தலையை அசைத்தாய்

விநாயகா - மூல - விநாயகா
கொம்மடிக் கோட்டையில் கோயில் கொண்டருளும்
கோல விநாயகா - மூல விநாயகா

(ஓம் எனும் ப்ரணவம்)

சுற்று வளாகம் சுற்றி வருகையில்
கற்பகம் உனைக் கண்டேன் நாயகா - விநாயகா

பொற்பதங்கள் பணிந்தேன் போற்றி என்றே மொழிந்தேன்
சித்திரம் நீ சிரித்தாய் அற்புதங்கள் உணர்ந்தேன்



18. உலகெங்கும் நீ

விருத்தம்

உலகெங்கும் உன்நாமம் பல ஆகுமே - உன்
திருமேனி ஒன்றென்று தெளிவாகுமே
எளியோர்கள் பணக்காரர் எல்லோர்க்குமே - சரி
சமமாக வழிகாட்டும் கணநாதனே

பாடல்

உலகெங்கும் உன்நாமம் பல ஆகுமே - உன்
திருமேனி ஒன்றென்று தெளிவாகுமே
எளியோர்கள் செல்வந்தர் எல்லோர்க்குமே - சரி
சமமாக வழிகாட்டும் கணநாதனே (உலகெங்கும்)

அருகோடு எருக்கம்பூ அணியாகுமே - அவல்
பொறியோடு சிறுவெல்லம் உணவாகுமே
நதி ஓரம் தெருக்கோடி நடைபாதையில் - உன்
சிறுகோயில் மணிஓசை தினம் கேட்குமே (உலகெங்கும்)

நறுமஞ்சள் பிடிமண்ணில் உருவாக்கலாம் - ஒரு
பசுஞ் சாணம் அதில்கூட உனைப் பார்க்கலாம்
மலைஉச்சி பாதாளம் எதுவாயினும் - என்
மகராஜன் திருக்காட்சி தரிசிக்கலாம் (உலகெங்கும்)

மதம் யாவும் உனைப் போற்ற ஜெகம் ஆள்கிறாய் - பெரு
மத யானை வடிவோடு வினை தீர்க்கிறாய்
வழிபாடு செய்வோர்க்கு வளம் சேர்க்கிறாய் - கரு
முதலாக முடிவாக எனைக் காக்கிறாய் (உலகெங்கும்)

19. பிள்ளை - யார்

பிள்ளை - யார்? பிள்ளை - யார்!
பிள்ளை - யார்? பிள்ளையார்
தொல்லைகள் நீக்கி துணையாக வருவார்

(பிள்ளையார்)

ஆதிக்கும் ஆதி அகண்ட ஜோதி
ஓம்எனும் நாத ப்ரணவ ஸ்வரூபி
நாதன் இல்லாமல் நாமிங்கு இல்லை
ஆபத்தில் காப்பது யார்? அந்தப் பிள்ளை

(பிள்ளை - யார்)

மோதகம் எதற்கு ஆனந்தம் கிடைக்க
ஏடுகள் நமது வாழ்வினைக் கணிக்க
நான்கு கரங்கள் நலங்கள் கொடுக்க
நீண்ட துதிக்கை துன்பம் துடைக்க

(பிள்ளை - யார்)

கணபதி என்றால் காரியம் பலிக்கும்
வணக்கம் சொன்னதும் நினைத்தது நடக்கும்
எழுகோடி மந்திரமும் வயிற்றுள் அடங்கும்
எல்லா தெய்வமும் அவருள் ஒடுங்கும்

(பிள்ளை - யார்)

20. பிரபஞ்ச கானம்

விருத்தம்

முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும்
பனிரெண்டு ருத்திரர் களும்
அஷ்டதிக் பாலகரும் மூவரும் முருகனும்
எப்போதும் துதித்திருப்பார்

மூவுலகும் ஏவல் செய நீ அவற்றைக் காவல்செய
கோளங்கள் கூத்தாடுதே
ஞாலம் உன் புகழ் பாடுதே - இந்த
ஞாலம் உன் புகழ் பாடுதே

ப்ரபஞ்ச முழுதும் ப்ரணவ நாதம்
பிள்ளைநீ பாடும் இனியசங் கீதம்
ஒலியாய் ஒளியாய் நிறைபவன் நீயே
உயிராய் உணர்வாய் இயங்குகின் றாயே (ப்ரபஞ்ச)

எதற்கும் தொடக்கம் பிள்ளையார் சுழியே
எல்லாம் நடப்பது நீ வகுத்த வழியே
எல்லையில் லாத இன்ப நதியே
இல்லையென் னாத ஸ்ரீகண பதியே (ப்ரபஞ்ச)

இச்சையும் செயலும் சித்தி புத்தி
இரண்டிற்கும் இடையே ஞான சக்தி
விக்கினம் அகற்றும் விநாயக போற்றி
சச்சிதா னந்தத் தலைவா போற்றி (ப்ரபஞ்ச)

21. மணி ஓசை

மாறி மாறி ஒலிக்கும் - அந்த
மணி ஓசை அழைக்கும்
யானை மேனி அசையும் - அதில்
தாளம் மேளம் இசையும்

(மாறி மாறி)

வருக என்னும் செவிகள் - அள்ளிப்
பருகு கின்ற விழிகள்
அருள் தரும் அந்தத் துதிக்கை - அதில்
அமுத கலசம் இருக்கை

(மாறி மாறி)

எழுத உதவும் தந்தம் - அது
படைக்கும் கவிதைச் சந்தம்
நடனம் ஆடும் பாதம் - அங்கு
எழு சுரங்களின் நாதம்

பாசம் நம்மை இழுக்கும் - அந்த
அங்குசம் வினைகள் தடுக்கும்
மோதகம் தரும் இன்பம் - கண
நாதன் வாழ்க என்போம்
கணேசன் வாழ்க என்போம்

(மாறி மாறி)

22. விசித்ர விநாயகன்

பார்வதி தேவியின் பவித்ர புத்திரன்
பார்வைக்கு இவனோர் சித்திர விசித்திரன்
யானை முகத்தோன் ஐந்து கரத்தோன்
யாவர்க்கும் மூத்தோன் முன்னின்று காப்போன்

(பார்வதி)

யோகியர் இதயம் கோயிலாய்க் கொண்டோன்
மூலா தார சக்தியாய் நின்றோன்
ஈஸ்வரன் நேசன் இவனே ஈசன்
எல்லா உலகையும் இயக்கும் கணேசன்

(பார்வதி)

கேட்டதைக் கொடுப்பதால் வக்ர துண்டன்
கெட்டதைத் தடுப்பதால் விக்ன விநாயகன்

வாட்டம் இல்லாத வாழ்வை அளிப்பவன்
போற்றிப் பாடினால் கேட்டுக் களிப்பவன்

(பார்வதி)

23. திருவிழாக் கோலம்

விழாக் கொண்டாடுவோம் - கணபதி
விழாக் கொண்டாடுவோம்

ஆவணி மாதம் வளர்பிறைக் காலம்
விநாயக சதுர்த்தி
ஊரெங்கும் பூஜை திருவிழாக் கோலம்
எத்தனை மகிழ்ச்சி
யானை முகத்தான் மேனி அழகினை
கண்ணில் நிறுத்தி
பூமியில் நேரில் காணவே எண்ணி
மண்ணில் பொருத்தி (விழாக் கொண்டாடுவோம்)

வாரணம் அவனை வரவேற் றிடவே
தோரணம் கட்டி
வாசலில் விதவித வண்ணம் மின்னும்
கோலங்கள் தீட்டி
மோதகம் அப்பம் அவல்பொறி கடலை
முக்கனி படைத்து
யாவரும் கூடி கீதங்கள் பாடி
தேரினில் வைத்து (விழாக் கொண்டாடுவோம்)

நாயகன் வந்தான் நன்மைகள் தந்தான்
வாழ்கென வாழ்த்தி
மூன்றாம் நாளில் ஆற்றுத் தண்ணீரில்
மூழ்கெனச் சேர்த்தி
தோற்றம் வாழ்க்கை நிறைவு என்னும்
ஆட்டம் உணர்த்தி
மாற்றம் இல்லாத மூலப் பொருளை
மனத்தினில் போற்றி (விழாக் கொண்டாடுவோம்)

24. வரம் தரும் வள்ளல்

கொடுப்பதற் கென்றே நீண்ட கரம் - வினை
தடுப்பதற் கென்றே யானைமுகம்
அடக்குகிறாய் பேரண்ட மெல்லாம் - பெரு
வயிற்றினிலே ஒரு கணத்தினிலே (கொடுப்பதற்கென்றே)

எங்கிருந் தாலும் கண்டு கொள்ளும் - சிறு
கண்களைக் கொண்டாய் கணபதியே
எந்தக் குறை எனினும் கேட்பதற்கே - பெரும்
செவிகளை ஆட்டும் குணநிதியே (கொடுப்பதற்கென்றே)

சூரிய சந்திரர் அக்கினியாம் - அவர்
மூவரும் கண்களில் ஒளிநிரப்ப
ஜோதி வடிவம் என்பதை - உன்
சுந்தர மேனி வெளிப்படுத்த
வேறொருவர் ஈடு இல்லையென்றே - அந்த
விநாயகன் எனும் பெயர் சொல்லிடுதே
மாறா இளமைக் கோலமதை - உன்
மழலைப் பாதம் காட்டிடுதே

அளவில் ஆற்றல் உடையவன் என்பதை
அங்குச பாசம் குறித்திடுதே
அரவம் என்னும் மாயையும் நினது
அங்கத்தில் அணியாய் நிலைத்திடுதே
அணுவிள் யாவும் அடங்கும் என்பதை
எலிவா ஹனம் அது உணர்த்திடுதே
இரவும் பகலும் ஒன்றே என்றே
இனிய தோற்றம் உரைத்திடுதே (கொடுப்பதற்கென்றே)

25. ஷோடச உபசாரம்

விரும்பும் வரம் தருபவனே எழுந்தருள்க
நவரத்ன ஆசனத்தில் அமர்ந்திடுக
புனிதநதி தீர்த்தங்கள் ஏற்றிடுக
அபிஷேகம் செய்வதற்கு இசைந்திடுக

(விரும்பும் வரம்)

அருகம்புல் மலர்மாலை அணிமணிகள்
திருமார்பை பூணூலும் அலங்கரிக்க
வில்வ இலை தும்பை மலர்அர்ச்சனைகள்
வேத ஒலி மந்திரங்கள் பாட்டிசைக்க

(விரும்பும் வரம்)

மணக்கின்ற தூபங்கள் காட்டுகிறேன்
நெய்தீபம் கற்பூரம் ஏற்றுகிறேன்
இனிக்கின்ற மோதகங்கள் ஊட்டுகிறேன்
என்றென்றும் உன்பாதம் போற்றுகிறேன்

(விரும்பும் வரம்)

உதய கால இளங்கதிரோன் நிறம் கொண்டாய்
அபய வரதம் அங்குசபாசம் கரம் கொண்டாய்
யானை முகம் மூன்று கண்ணும் மலர்ந்திடுக
த்யானத்தில் ஹ்ருதயத்தில் வந்திடுக

(விரும்பும் வரம்)

26. பேறு தருவான்

விநாயகனே......... ஞான விநாயகனே

பதினாறு பேறும்
தரவல்ல தேவன்
பதினாறு நாமம்
படைத்திட்ட பாலன்
உலகாளும் நாதன்
ஓங்கார ரூபன்
வினையாவும் போக்கும்

(பதினாறு)

நிலவோடு கங்கை கொன்றைப் பூ மாலை
சடைமேலே சூடும் தாண்டவம் ஆடும்
பிறைநெற்றி முக்கண் நாகங்கள் சுற்றும்
சிவன்போலே இவனும் திருமுகம் காட்டும்
தரிசனம் காட்டும்

(பதினாறு)

பாசாங்கு சங்கள் ஏந்தும் கரங்கள்
பார்வதி மகனென பல்லாண்டு பாடும்
கங்கைக்கும் மைந்தன் கணநா யகன்தான்
காப்பாற்றும் தெய்வம் கணநாதன் அவன்தான்
கணபதி தானே!

(பதினாறு)

27. நல்லவன் - வல்லவன்

இந்தப்பிள்ளை நல்லபிள்ளை
இனிக்கின்ற வெல்லப் பிள்ளை
அன்பருக்குச் செல்லப்பிள்ளை
யானைமுகம் கொண்ட பிள்ளை (இந்தப் பிள்ளை)

கமண்டலக் காவிரியை
காக உருவெடுத்து
உருண்டிடச் செய்த பிள்ளை
ஊர் செழிக்க வந்த பிள்ளை

குட்ட வந்தஅகத்தியரை
குட்டிக் கொள்ளச் செய்த பிள்ளை
வெற்றியைத் தேடித்தரும்
வீரப்பிள்ளை சூரப்பிள்ளை (இந்தப் பிள்ளை)

கவனமாய் பூஜைசெய்தால் கைலாயம் சேர்த்து வைப்பேன்
அவசரம் வேண்டாமென்றே ஔவைக்குச் சொன்ன பிள்ளை
சேந்தனை சிறைமீட்டு திருமுறை வெளிப்படுத்தி
அரக்கரை தேய்த்தழித்து அமரரைக் காத்தபிள்ளை

(இந்தப் பிள்ளை)

28. மந்திர ரூபன்

ஏழு கோடி மந்தி ரங்கள் சங்கமம்
எட்டு கோடி அவ தார தத்துவம்
ஓங் கார சங் கீத உற்சவம்
தீ.... ராத வினை தீர்க்கும் அற்புதம்
சித்தி புத்தி நாயகனே சரணம்
சிவசக்தி பாலகனே சரணம்
சரணம் சரணம் சரணம்

(ஏழு கோடி)

வேதங்கள் பாராட்டும் சுரர் பதியே
வெள்ளை நிற வடிவான கணபதியே
ஏழைகளின் தோழன்நீ ஹேரம்பா
ஐந்து முகம் கொண்டவனே அபயம் தா
முந்தி முந்தி நாயகனே சரணம்
முக்கண்ணார் தன் மகனே சரணம்
சரணம் சரணம் சரணம்

(ஏழு கோடி)

சங்கரர் போற்றுகின்ற மங்களனே
சகல சௌபாக்யம் தருபவனே
சிங்க வாஹனம் அமரும் சுந்தரனே
சிந்தா மணி ஏந்தி வந்தவனே
எத்திக்கும் நின்றவனே சரணம்
ஏகாந்த மானவனே சரணம்
சரணம் சரணம் சரணம்

(ஏழு கோடி)

29. பிள்ளையாரே வருக! தேரேறி வருக!

தேரேறி வரவேணும் பிள்ளையாரே
தரிசனம் தரவேணும் பிள்ளையாரே
ஊர்வலமாய் அழைத்துச் செல்வோம் பிள்ளையாரே
மூன்றுநாள் பூஜைசெய்வோம் பிள்ளையாரே

வாழை மரங்கள் நட்டு வைத்தோம்
மாவிலை தோரணம் கட்டி வைத்தோம்
வாசலில் கோலங்கள் இட்டுவைத்தோம்
மோதகம் வெண்பொங்கல் புட்டு வைத்தோம் (தேரேறி)

ஆவணி மாசம் சதுர்த்தி திதி நீ பொறந்த நாளு
ஆனை முகத்தொடு அவதரித்த அதிசயத்திரு நாளு
திங்கட்கிழமை சிம்மலக்கினம் விசாகத்திலே ஜனனம்
எங்க குறைகள் பிணிகள் நீக்கி மங்களம் யாவும் தரணும்

தேங்காய் பழங்கள் தட்டு வைத்தோம்
தித்திக்கும் பட்சணம் லட்டு வைத்தோம்
காரக் கொழுக்கட்டை சுட்டு வைத்தோம்
கடலை அவல் பொறி கொட்டி வைத்தோம் (தேரேறி)

உந்தன் சுழியில் எங்க விதியைக் கண்டு கொண்டோம் ஐயா
ஒன்னெ நெனச்சு செய்யும் காரியம் வெற்றி என்பது பொய்யா
எந்தத் தடையும் வந்திடாம எங்களைக் காக்கணும் ஈசா
தும்பிக்கையை நம்பியிருக்கோம் கருணைவடிவே கணேசா

சாதி மதத்தை கடந்து விட்டாய்
ஏழை பணக்காரன் பேதம் விட்டாய்
ஊரெலாம் போற்ற வளர்ந்து விட்டாய்
ஒலகம் முழுதும் நிறைந்து விட்டாய் (தேரேறி)

30. எளியவன்

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந் தருள் செயும்
குழந்தை விநாயகனே - எங்கப்பனே
குறைகளை தீர்ப்பவனே
ஆற்றங் கரையினில் அரச மரத்தடி
அமர்ந்திடும் பாலகனே - எங்கப்பனே
அமைதியின் காவலனே (கூப்பிட்ட)

சந்தனம் என்றாலும் சாணந்தான் என்றாலும்
வந்து நீ குடியிருப்பாய் - பிடி
மஞ்சளில் கொலு விருப்பாய்
ஐம் பொன்னில் மரத்தினில் பளிங்கினில் கல்லினில்
மண்ணிலும் வீற்றிருப்பாய் - எருக்க (ம்) பூ
மலரையும் ஏற்றிருப்பாய் (கூப்பிட்ட)

சந்தியில் சந்தினில் மாடத்தில் கூடத்தில்
எங்கெங்கும் நீ இருப்பாய் - ஏழையின்
நண்பனாய் நலம் கொடுப்பாய்
அன்பொடு தந்திடும் அவல் பொறி கொழுக்கட்டை
உண்டு நீ தலை யசைப்பாய் - அடியார்
உளத்தினில் நீ சிரிப்பாய் (கூப்பிட்ட)

31. நலம் அளிப்பவன்

தும்பைப் பூக்கொண்டு
தும்பிக்கை யான் பாதம்
நம்பிக்கையோடு நாம் தொழுவோம்
நலம் யாவும் தருவான் கணபதி....

(தும்பைப் பூ)

சென்ற இடத்திலெல்லாம் ஜெயம் தருவான்
சீர் தரு வான் நல்ல பேர் தருவான்
அன்புவைத் தோர்க்கெல்லாம் துணைவரு வான்
அருள்தரு வான் பெரும் பொருள்தரு வான்
நலம் யாவும் தருவான் கணபதி .....

(தும்பைப் பூ)

சொல்தரு வான் கதிர் நெல்தரு வான்
தூய மனம் தருவான் நோய்களை வான்
அல்லல் அகற்றிடுவான் ஆதரிப்பான்
நல்லோர் பாராட்டும் புகழ்தரு வான்
நலம் யாவும் தருவான் கணபதி ....

(தும்பைப் பூ)

32. தத்துவன்

ஓமெனும் மூல நாதமே யானை
உருவம் எடுத்ததம்மா
வா என் அருகினில் வந்திடு என்றே
துதிக்கையால் அழைக்கு தம்மா - அம்மா (ஓமெனும்)

காலை மடக்கி படிபோ லாக்கி
மேலே ஏற்றிடுமே
தாளை வணங்குவார் வாழ்வை உயர்த்திடும்
தந்திரம் காட்டிடும் அம்மம்மா (ஓமெனும்)

வினையின் வெப்பம் அணுக விடாமல்
விசிறும் பெரும் செவிகள்
எழுதும் கோலே வாளாய் மாறும்
என்றிடும் தந்தங்கள்
எதையும் அறியும் சிறுகண் நடுவில்
சுடரும் பெருஞானம்
இடையில் நாகம் நெளியும் கோலம்
குண்டலித் தவ யோகம் (ஓமெனும்)

ஆக்கும் அழிக்கும் பாசம் அங்குசம் காக்கும் அபயக்கரம்
தூக்கும் துதிக்கை மறைக்கவும் செய்யும் மோதகம் அருள்புரியும்
நோக்கும் அண்டம் அனைத்தும் தொந்தி வயிற்றில் அடங்கிடுமே
தாக்கும் தீவினை போக்கும் கால்கள் தாண்டவம் ஆடிடுமே

(ஓமெனும்)

33. ஆதி பகவன்

நீயே முதல்வன் ஆதிபகவன்
நினைத்ததெல் லாம்தரும் சிவகுமாரன்
வேழ முகத்தோன் விக்னவி நாயகன்
ஞாலம் காக்கும் நாத ப்ரம்மம்

(நீயே முதல்வன்)

தடைகளை உடைக்கும் தனிப்பெருந் தலைவன்
சரணடைந் தோர்க்குத் தண்ணளி யாளன்
முருகனின் அண்ணன் முக்கனிப் பிரியன்
மோதகக் கையன் வேத சாரம்

(நீயே முதல்வன்)

எந்தச் சடங்கும் நீ இன்றி இல்லை
முந்திடும் தெய்வம் அன்பின் எல்லை
நொந்தவர்க் கெல்லாம் நீதான் காவல்
தொந்தி கணபதி பாதம் சரணம்

(நீயே முதல்வன்)

34. அமைப்பும் அழகும்

கலை மகளும் திருமகளும்
கணபதி உன் இருமருங்கும்
அமர்ந்திருக்கும் காரணம்தான் யாது
கல்விக்கும் செல்வத்திற்கும்
அதிபதிநான் என்றேநீ
சொல்லாமல் சொல்லவோ கூறு
பதில் கூறு (கலைமகளும்)

பெரு ஞானம் பெறுவதற்கு
தலைபெருத்துத் தோன்றிடுதோ
ஒரு யானைத் தலைகொண்டாய் தேவா
நிறை கேள்வி வேண்டுமென
செவியிரண்டும் விசிறிஎன
அசைந்தசைந்து அழகூட்டும் நாதா
கணநாதா (கலைமகளும்)

நெடுமரத்தை வீழ்த்திவிடும்
குண்டூசி அதை எடுக்கும்
அருமைமிகு தும்பிக்கை ஏனோ
பருப் பொருளும் நுண்பொருளும்
பகுத்தறிந்து வாழ்கஎன
உரைப்பதற்கோ உருவாச்சு ஈசா
கணேசா (கலைமகளும்)

இரண்டிரண்டாய்க் காண்பதெலாம்
ஆராய்ந்தால் ஒன்றென்றே
ஒருதந்தம் ஒடித்தாயோ ஐயா
அநுபவங்கள் அத்தனையும்

அசைபோட அமைதியுற

பெரு வயிற்றின் கதை இதுவோ சொல்வாய்

கணசா (கலைமகளும்)

ஆசையெல்லாம் அடக்கிவிட்டால்

ஆண்டவனே ஆனந்தம்

பேரெலி முன் தின்பண்டம் காட்டும்

பாசத்தை வெட்டிவிடும்

அங்குசம் அபயகரம்

சாதனைசெய் மோதகம் என நாட்டும்

வழிகாட்டும் (கலைமகளும்)



35. எளிமையின் திருஉரு

ஒருபிடி மண்எடுத்து - அதை
உருண்டையாய்த் திரட்டி வைத்து
வருக நீ என அழைத்தால் - உடனே
வந்தே நீ அமர்ந்திருப்பாய்
எருக்கம் பூவே போதும் - வெறும்
அறுகம் புல்லே மாலை
எளிமையின் திரு உருவே - ஐயா
எங்கள் குறை கேட்டிடுவாய்
- பிள்ளையாரே (ஒரு பிடி)

மண்டபம் எதற்கையா - ஒரு
மரத்தடி போதும் என்பாய்
சுண்டலை விரும்பிடுவாய் - அவல்பொறி
கொழுக்கட்டை திருப்தி என்பாய்
மாடி வீடுகளில் - அறுசுவை
விருந்து படைத்திடுவாய்
ஏழைக் குடிசைகளில் - தருகின்ற
கூழையும் ஏற்றிடுவாய்
-பிள்ளையாரே (ஒரு பிடி)

சாணத்தில் வந்திருப்பாய் - மஞ்சள்
சந்தனத்தில் தங்கிடுவாய்
ஆழத்தில் அமர்ந்திருப்பாய் - மலை உச்சி
அங்கேயும் வீற்றிருப்பாய்
மாடத்தில் கூடத்தினில் - முச்சந்தி
மாளிகை வாசலினில்
ஆறு குளக்கரையில் - அங்கு மிங்கும்
எங்கெங்கும் நீ இருப்பாய்
- பிள்ளையாரே (ஒரு பிடி)

36. விநாயக சதுர்த்தி விழா

நீ பிறந்த நாள் அதுதான் ஆவணி சதுர்த்தி
தீவினைகள் தீர்க்கவந்த விநாயக மூர்த்தி
வாழை மரம் கட்டி வைத்தோம்
வாசலிலே கோலம் இட்டோம்
தோரணங்கள் தொங்க விட்டோம்
தோப்புக் கரணம் போடுகிறோம்
எங்கள் வீட்டில் தங்கி இருந்து
மங்களங்கள் தந்திட வேண்டும்
வாரும் பிள்ளையாரே
வாரும் பிள்ளையாரே (நீ பிறந்தநாள்)

மோதகம் வெண் பொங்கல் முக்கனிகள் பாயாஸம்
தேங்காய் லட்டுடனே தித்திக்கும் தின்பண்டம்
காரக் கொழுக்கட்டை கடலைச் சுண்டல் அவல் பொறி
விளாம்பழம் கரும்புடனே விருந்து வைத்தே உனை
அழைத்தோம்
எங்கள் வீட்டில் தங்கி இருந்து
மங்களங்கள் தந்திட வேண்டும்
வாரும் பிள்ளையாரே
வாரும் பிள்ளையாரே (நீ பிறந்த நாள்)

சிம்ம லக்கினத்தில் விசாக விண்மீனில்
திங்கட் கிழமையினில் தங்கம் நீ அவதரித்தாய்
எந்தத் தடையுமில்லை எங்கள் குறை தீர்க்க வந்தாய்
தும்பிக்கை தூக்கி வந்தாய் நம்பிக்கை ஊட்ட வந்தாய்
எங்கள் வீட்டில் தங்கி இருந்து
மங்களங்கள் தந்திட வேண்டும்

வாரும் பிள்ளையாரே
வாரும் பிள்ளையாரே

(நீ பிறந்த நாள்)

தேரிலே உனை வைத்து ஊர்வலம் செல்வோமே
நாதஸ்வர மேளம் வைத்து நாதன் புகழ் சொல்வோம்
மூன்று நாள் உன்னுடனே ஆடிப்பாடி மகிழ்வோமே
நீரிலே வழியனுப்பி காலமெலாம் தொழுவோமே

கங்கை மைந்தா சங்கரி பாலா
மங்களங்கள் தந்திட வேண்டும்
வாரும் பிள்ளையாரே
வாரும் பிள்ளையாரே

(நீ பிறந்த நாள்)

37. நர்த்தன கணபதி

தந்ததிமி தந்ததிமி வந்தது யாரு
தாம் தரிகிட தாம் தரிகிட இந்தப் பிள்ளை - யாரு?

தந்ததிமி தந்ததிமி வந்தது யாரு
தாம்தரிகிட தோம்தரிகிட எங்க பிள்ளையாரு (தந்ததிமி)

நெஞ்சினிலே உன்நடனம் நடக்குது பாரு
நிற்காமல் என்றென்றும் தொடருது பாரு
நின்றுவிட்டால் வாழ்வேது நீயே கூறு
நித்தம் உந்தன் நர்த்தனந்தான் முடிவும் ஏது (தந்ததிமி)

கோள்கள் எல்லாம் ஆடுவதும் உன்னால் தானே
கூத்தாடும் பெருமானே சக்தியின் மகனே
பாடுகின்ற பாடல்தன் சந்தம் நீயே
ஆடுகின்ற ஆடலுக்கும் அந்தம் நீயே (தந்ததிமி)

நாதம் கீதம் தாளம் மேளம்
ஆடும் அபிநயம் அற்புதம்
பாதம் வாழ்க பரதம் வாழ்க
நாளும் நாளும் ஜெயம் ஜெயம்

கணபதி ராஜா கைகொடு கானம் பாட சொல்கொடு
உலகம் வாழ ஆடிடு அபயம் வரதம் தந்திடு

38. ஒன்று முதல் ஒன்பது வரை

தந்தம் ஒன்று செவிகள் இரண்டு
கண்கள் மூன்று தொங்கும் நால்வாய்
ஐந்து கரமும் ஐந்தொழில் ஆற்றும்
ஆறுமுகனின் அண்ணா வருக
கணபதி என்னும் கனியே வருக
கற்பகமே நவ மணியே வருக (தந்தம் ஒன்று)

ஏழு கோடி மந்திரம் யாவும்
பேழை வயிற்றில் வந்து அடங்கும்
எட்டுத் திக்கும் உன் நர்த்தனம் கண்டு
பட்டுப் பாதம் தொட்டு வணங்கும்
கணபதி என்னும் கனியே வருக
கற்பகமே நவ மணியே வருக (தந்தம் ஒன்று)

ஒன்பது வாசல் கோட்டையி னுள்ளே
குண்டலி சக்தி எழும்பும் வாசல்
நின்றது நீயே வந்திடு வாயே
சென்று உச்சியில் தங்கிடு வாயே
கணபதி என்னும் கனியே வருக
கற்பகமே நவ மணியே வருக (தந்தம் ஒன்று)

39. விடை தரும் விழாக்கோலம்

அதோ வருகுது ஆயிரம் பூரதம்
கணபதி ராஜா ஊர்வலம்
இதோ இங்கே பொங்கும் கடலலை
மக்கள் வெள்ளம் சங்கமம்

அப்பம் அதிரசம் கற்கண்டு சீனி
அவல்பொறி கடலை மோதகம்
முக்கனி மாதுளை கரும்புடன் இளநீர்
தந்தோம் கண்டோம் கணநாதம்
ஆவது யாவும் ஆவணி மாதம்
அவன் அவதாரமே

விழா நேரம் வந்தது உன்னை நாடினோம்
விநாயகா உன் வருகை நோக்கி கூடினோம்
சதா உந்தன் பூஜை நடந்தது பாடினோம்
மங்கள மூர்த்தி வந்தாயே / சந்தோஷத்தை தந்தாயே

(அதோ வருகுது)

கோடி சூர்ய ப்ரஹாசா / வாவா வல்லபை கணேசா
பார்வதி புத்ரா வா வா வா / பரம பவித்ரா வா

*

ஏக தந்தா விநாயகா / லம்போதரா நீ வா வா வா
வக்ர துண்டா வரம்தரவா / விக்னகாரக வா வா வா

*

வல்லால கணபதி வா வா வா / ஹேரம்ப கணபதி வா வா வா
டுண்டி கணபதி வா வா வா / சண்ட கணபதி வா வா வா

*

ஞானேஸ கணபதி வா வா வா / யோஹேஸ கணபதி வா வா வா
குணேஸ கணபதி வா வா வா / புத்தீஸ கணபதி வா வா வா

*

பாலச் சந்த்ரா வா வா வா / சூர்ய கர்ணா வா வா வா
பூர்ணானந்தா வா வா வா / பொன்னும் பொருளும் அள்ளித்தா

*

ஸித்தி கணபதி வா வா வா / லக்ஷ்மி கணபதி வா வா வா

சங்கரி தந்த மைந்தா எங்கள் சாமி பிள்ளை யாரப்பா
ஐங்காரம் கொண்டு அகிலம் காக்கும் யானை முகத்தோய் வா அப்பா
என்றும் எங்கும் உன் துணை வேண்டும் அருள்வாய் நீ அப்பா
மங்காத செல்வம் மாறாத வாக்கு சந்தானம் சௌபாக்யம் தந்திடப்பா

கௌரி நந்தன கணநாதா
காக்கும் தெய்வமே விநாயகா

(அதோ வருகுது)

துர்கா கணபதி வா வா வா / சத்ய கணபதி வா வா வா
ஆக்ஞா கணபதி வா வா வா / க்ருஷ்ண கணபதி வா வா வா

*

வரத விநாயகா வா வா வா / சுவேத விநாயகா வா வா வா
விகட விநாயகா வா வா வா / ஞான விநாயகா வா வா வா

*

சாரதா கணேச வா வா வா / சந்தன கணேச வா வா வா
ஹரித்ரா கணேச வா வா வா / மந்த்ர கணேச வா வா வா

*

கற்பக கணபதி வா வா வா / கஜகர்ண கணபதி வா வா வா
நர்த்தன கணபதி வா வா வா / நவநீத கணபதி வா வா வா

*

பால விநாயகா வா வா வா / தருண விநாயக வா வா வா
விருத்த விநாயக வா வா வா / வெற்றி விநாயக வா வா வா
சிந்தா மணியே வா வா வா / ஜெகத் ரட்சகா வா வா வா

*

வாழை மஞ்சள் தோரணங்கள் வழி நெடுகப் பாரப்பா
பாட்டு கூத்து மேளம் தாளம் வாண வேடிக்கை காணப்ப
மூன்று நாட்கள் விருந்து படைத்தோம் நன்றி சொல்கின்றோம்
முப்போதும் உந்தன் பொற்பாதம் வேண்டும் எப்போதும் தப்பாது
- காத்திடப்பா

நடை விரித்தோம் நாயகா கடலில் சேர்ப்போம் விநாயகா
விடை கொடுத்தோம் நாயகா / மீண்டும் வருவாய் விநாயகா

(அதோ வருகுது)

40. முந்தி முந்தி விநாயகனே

நெத்தியிலே குட்டிக் கொண்டேன்
நெனச்சதெ தருவாய்
தோப்புக்கரணம் போடுகின்றேன்
கேட்டதைத் தருவாய்
கண்ணெத் தொறந்து பாரய்யா
கவலை எல்லாம் தீரய்யா (நெற்றியிலே)

குத்தம் கொறை இருந்தாலும்
பொறுத்துக் கொள்ளுவாய்
குணநிதியே கணபதியே
திருத்திச் செல்லுவாய்
எப்படி நான் வாழ்வதுன்னு
எடுத்துச் சொல்லுவாய்
எந்நாளும் பக்கத்திலே
இருத்திக் கொள்ளுவாய்
ஒன்னெ நம்பி நாங்கய்யா
தும்பிக்கையைத் தாங்கய்யா (நெற்றியிலே)

ஆத்தங்கரை ஓரத்திலே
பாக்கவந் தேனே
அரசமர நெழலினிலே
ஒன்னெக் கண்டேனே
வெள்ளெருக்கம் பூவைக் கூட
வெறுக்க மாட்டாயே
கம்மங் கூழைத் தந்தாலும்
மறுக்க மாட்டாயே
சந்நிதிக்கு வந்தோமே
எங்களையே தந்தோமே (நெற்றியிலே)

சாணத்திலும் புடுச்சி வைக்கும்
சாமி நீ தானே
மானத்தைக் காக்கவரும்
மகராசனே
மாடத்திலும் கூடத்திலும் / தீபம் நீ தானே
கோயிலிலும் குடிசெயிலும்
வாழும் சீமானே
ஏழை செல்வர் எல்லோரும்
ஒன் முன்னாலே ஒன்னே தான் (நெற்றியிலே)

எம் மதமும் சம்மதமே
என்னும் நாயகனே
எப்போதும் அருள் கொடுக்கும்
விக்னவி நாயகனே
உலகமெலாம் பவனிவரும்
கடவுள் நீ தானே
ஓம் நாத உருவான
யானை முகத் தோனே
முந்தி முந்தி விநாயகனே
முக்கண்ணார் தன் மகனே (நெற்றியிலே)

41. வெற்றி அருள்பவன்

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
கொடுக்க வல்லவன் விநாயக மூர்த்தி
அடுத்த துன்பங்கள் அனைத்தையும் போக்கி
அணைத்துக் காப்பது அவனருட் சக்தி

(எடுத்த)

உலகம் யாவும் ஓம்எனும் நாதம்
உணர வைப்பது கணபதி பாதம்
எழுதும்கோல் அவன் வலது தந்தம்
எல்லையில் லாதது அவன்தரும் பந்தம்

(எடுத்த)

தெய்வங்கள் போற்றிடும் தேவாதி தேவன்
செல்வங்கள் சேர்ப்பவன் ஸ்ரீ கண நாதன்
ஐங்கரம் கொண்டவன் யானை முகத்தான்
அவன்தான் ஆதி மூலமாய் நிலைத்தான்

(எடுத்த)

42. செல்வ விநாயகர்

அனகா புத்தூர் வேம்படி அமர்ந்த அருள்மிகு செல்வ
விநாயகா போற்றி
யானைப் பாகனின் அங்குச பாசம் தானே ஏந்திய
தலைவா போற்றி

புவன வனத்தில் ஓடும் புலன்களை
அடக்கி ஆளும் ஐங்கரத் தோனே
போதம் ஏற்று ஞானம் ஊட்டும்
மோதகம் ஏந்திய கணநா யகனே

அன்னை தந்தை பாதங்கள் கழுவும்
கலசத் துள்ள கங்கா தீர்த்தம்
அக்கரை சேர்க்க வாஎன அழைக்கும்
விசிறிச் செவிகள் வினைகளை நீக்கும்

ஒற்றைக் கொம்பும் ஒடிந்த கொம்பும்
சிவனும் சக்தியும் நீஎன உணர்த்தும்
ஓம்எனும் ப்ரணவம் உன்றன் வடிவம்
ஆகும் என்பதை அருள்உரு காட்டும்
சுந்தர முனிவர் வந்தனை செய்யும்
கந்தப் பெருமான் அண்ணனே சரணம்
தும்பிக்கை தூக்கி நம்பிக்கை நல்கும்
அன்பு கணபதி என்றும் சரணம்

சரணம் சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் கணபதி சரணம்

43. தும்பிக்கையே நம்பிக்கை

தும்பிக்கை கொண்டஉன் அன்பு முகம் கண்டு
நம்பிக்கை பிறக்கிறது - வரும்
துன்பங்கள் பறக்கிறது - உன்
தோற்றத்தில் பிரபஞ்ச மாற்றங்கள் யாவுமே
காட்டப் படுகிறது - உயிர்
ஊட்டப் பெறுகிறது (தும்பிக்கை)

தொந்தி வயிற்றினில் தங்கியே உலகங்கள்
சுற்றி வருகிறது - நல்
வெற்றி தருகிறது
ஐங்கரம் ஐந்தொழில் ஆற்றியே யாரையும்
ஆட்டிப் படைக்கிறது - உன்
ஆட்சி நடக்கிறது (தும்பிக்கை)

வந்துநின் சந்நிதி வாசலில் நின்றவர்
வரங்கள் பெறுகின்றார் - பல
நலங்கள் உறுகின்றார்
தந்தம் உடைத்தொரு சரித்திரம் எழுதுவாய்
தருவாய் மோதகமே - மயிலை
சக்தி விநாயகனே - நவ
சக்தி விநாயகனே (தும்பிக்கை)

திருச்சிராப் பள்ளியில் உச்சி மலையில் உன்
சிரிப்பு தவழ்கிறது
செட்டி நாட்டில் உள்ள பிள்ளையார் பட்டியில்
திருநாமம் மலர்கிறது
விருத்தா சலத்தினில் ஆழத்தில் அமர்ந்து நீ
ஆதாரம் ஆகின்றாய்
துதிப்பவர் நெஞ்சினில் மூல சக்தியாய்
நர்த்தனம் ஆடுகின்றாய் - ஓம்
நாதத்தில் கூடுகின்றாய் (தும்பிக்கை)

44. வல்லபை கணவன்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
சிந்தை இனித்திடும் செந்தமிழ்த் தேனினை
வந்தனை செய்திடுவாய் - உன்
வாழ்வில் உயர்ந்திடுவாய் (ஐந்து கரத்தனை)

சக்தி மகன்தனை சத்திய வடிவினை
சண்முகன் தமயனை தத்துவப் பொருளினை
பற்றிப் படர்ந்திடுவாய் - நீ
வெற்றி அடைந்திடுவாய் (ஐந்து கரணை)

ஞானப் புதல்வனை ஞால முதல்வனை
நல்லன செய்திடும் வல்லபை கணவனை
ஓம்எனச் சொல்லிடுவாய் - துயர்
யாவையும் தள்ளிடுவாய் (ஐந்து கரத்தனை)

தேவர்கள் மூவர்கள் யாவரும் போற்றிடும்
தெய்வத்தின் தெய்வத்தை திருவருட் செல்வத்தை
தேடித் தொடர்ந்திடுவாய் - புகழ்
பாடி மகிழ்ந்திடுவாய் (ஐந்து கரத்தனை)



45. பஞ்சபூதங்களின் அதிபதி

பஞ்ச பூங்களின் அதிபதி - உன்
பாதங்கள் தொழுதோம் கணபதி
குணநிதி - அருள்நதி

(பஞ்ச பூதங்களின்)

நெஞ்சினில் என்றும் நீயே நிலைத்தாய்
நிலவிடும் உலகங்கள் யாவும் படைத்தாய்
ஐந்து கரத்தொடு தாய்போல் அணைத்தாய்
அன்பு மனத்தொடு நாளும் வளர்த்தாய்
வாழ்வு கொடுத்தாய் வேழ முகத்தாய்

(பஞ்ச பூதங்களின்)

வான வெளியினில் வழங்கிடும் நாதம்
ஓம்எனும் உன்னுரு உணர்த்திடும் வேதம்
பார்வதி மடியினில் தவழ்ந்திடும் பிள்ளை
பழங்களும் பாலும் பருகிடும் கிள்ளை
மலர்ந்திடும் முலலை பாசத்தின் எல்லை

(பஞ்ச பூதங்களின்)



46. முதல் வழிபாடு

விழித்ததும் துதிக்கின்றேன் விநாயகனே - கண்
விழித்ததும் துதிக்கின்றேன்
விடிகின்ற பொழுதினிலே வழிகாட்டு நீ என்றே

(விழித்ததும்)

விண்ணவர் தொழுகின்ற முன்னவனே என்
கண்களைத் திறஎன்றே
கணபதியே துணை என்றே

(விரித்ததும்)

அன்னம் அளிப்பவன் நீ அபயம் கொடுப்பவன் நீ
எண்ணியதைஎல்லாம் ஈடேறச் செய்பவன் நீ
எண்ணும் எழுத்தும் நீ இதயத் துடிப்பும் நீ
என்னை விட்டுப் பிரியா திருந்திடு என்றே

(விழித்ததும்)

47. ப்ரம்மத்திற்கும் ப்ரம்மம்

ப்ரம்மத்திற்கும் ப்ரம்மம் கணேசம் - அந்தப்
பிள்ளையையே த்யானம்செய்யும் மஹேஸம்
ப்ரபஞ்ச நாட்டியத்தின் ஆதாரம் - அது
பிறழாமல் ஆட்டுவிக்கும் பாதாரம்

(ப்ரம்மத்திற்கும்)

உமையவள் உருட்டிவைத்த வடிவாகும்
ஓம்எனும் நாதத்தின் ஒளிரூபம்
இமையவர் கணங்களுக்கு முதலாகும்
எல்லோரும் சென்றடையும் முடிவாகும்

(ப்ரம்மத்திற்கும்)

காலைஇளம் சூரியனின் பிரஹாஸம்
கட்டழகை காண்பவர்க்கோ உல்லாஸம்
யானைவரும் முன்னாலே ஓசைவரும்
ஞானம்பெற தன்னாலே ஆசைவரும்

(ப்ரம்மத்திற்கு)



48. முழுமுதற் கடவுள்

முதல் ஒலி நீயே முதல் ஒளி நீயே
முதல் பொருள் நீயே உலகத் தாயே
கணபதி என்றே பெயர்கொண்டாயே
காக்கும் தெய்வமாய் முன் நின்றாயே

(முதல் ஒலி)

அகரமும் உகரமும் மகரமும் சேர்ந்து
அடிப்படை நாதமாய் ஒலித்திட முனைந்து
ஓமெனும் வடிவம் உருக்கொள எழுந்து
யானை முகத்துடன் அருள்தரு வாயே

(முதல் ஒலி)

பரசிவம் அசைந்தது பார்த்தது உன்னை
பக்கம் வருகென அழைத்தாள் அன்னை
சிவசக்தி நடுவில் சிரிக்கின் றாயே
உயிர்க்குலம் தழைக்க உதவுகின் றாயே

நுணுகிக் குறுகும் அணு எலி வாகனம்
பெரிதாய் விரியும் புவனமே வேழம்
உன்றன் கோலம் உணர்ந்திடும் உண்மை
உணர்ந்தபின் சேரும் பிறவிக்கு நன்மை

(முதல் ஒலி)

49. அருமருந்து

வேழ முகத்தின் மத்தகத்தில் விளங்கும் செந்தூரம்
ஆணவத்தை அழிப்பதற்கு அருமருந்தாகும்
ஏழு இசையும் தோன்றும் மூலம் ஓம் எனும் நாதம்
என்றும் எங்கும் நிறைந்து நிற்கும் விஸ்வரூபம் - உன்
விஸ்வரூபம்

(வேழ முகத்தின்)

ஒற்றைக் கொம்பு உடைய கரமோ சிருஷ்டியைச் செய்யும்
மோதகத்தை ஏந்தும் கரமோ ஞானத்தை நல்கும்
அங்குசம் தீமையை அழித்திடும்
பாசம் அருகில் அழைத்திடும்
அமுதக் கிண்ணம் தாங்கும் துதிக்கை
வாழ்த்துக்கள் அளிக்கும் - பல
வளங்களை வழங்கும்

(வேழ முகத்தின்)

நீல வண்ண யானை வடிவம் நிம்மதி சேர்க்கும்
நெடிய இரண்டு கரிய விழிகள் பாலினை வார்க்கும்
வாழை, மாம்பழம், பலாச்சுளை எனும் முக்கனி கிடைக்கும்
ஆடும் கணபதி அழகுத் திருவடி / ஆனந்தம் கொடுக்கும்
பேரானந்தம் கொடுக்கும்

(வேழ முகத்தின்)

50. விநாயக சதுர்த்தி

இது ஆவணி மாதம் வளர்பிறைக் காலம்
நான்காம் நாள் சதுர்த்தி
அந்த யானை முகத்தான் அவதரித்தானே
தீமைகளை அகற்றி - ஒரு
திருநாள் சதுர்த்தி
விநாயக சதுர்த்தி

மாவிலை தோரணம் வாழை மரங்கள்
மங்கள மேளம் முழங்கட்டும்
வாசலில் கோலங்கள் வழியெல்லாம் வண்ணங்கள்
வரவேற்பு வளையங்கள் விளங்கட்டும்
மங்கல மங்கையர் அங்கம் குலுங்கிட
கும்மி கோலாட்டம் நடக்கட்டும்
வருகிறார் பிள்ளையார் வருகஎன
மகிழ்ச்சியில் யாவரும் திளைத்திட - ஒரு
திருநாள் சதுர்த்தி
விநாயக சதுர்த்தி

மோதகம், பானகம், வடை, பால், இளநீர்
அவல், பொறி, நாவல், கனிகொண்டு
மூன்றுநாள் விருந்து ஏற்றிடு வந்து
வேண்டி நிற்போம் வினை தீர் என்று
ஓதுவோம் வேதம் பாடுவோம் கீதம்
மூல முதல்வன் பதம் தொழுவோம்
சந்தோஷம் தருக என ஆடி
சக்தியவள் புத்திரனை நாடும் - ஒரு
திருநாள் சதுர்த்தி
விநாயக சதுர்த்தி

51. எளியவன்

சந்தனம் என்றாலும் சாணம் என்றாலும்
சம்மதம் உனக்கு கணேசா
மஞ்சள் என்றாலும் மண்தான் என்றாலும்
வந்திருப் பாயே கணேசா
பிள்ளையா ரப்பா பெரியப்பா - வந்து
பேசும் தெய்வம் நீயப்பா

(சந்தனம்)

எருக்கம் பூவும் அருகம் புல்லும் - நீ
தரிக்கும் மாலை ஆகுமப்பா
எள், அவல், கடலை, எதுதந்த போதும்
ஏற்றிடும் குணவான் நீயப்பா
பிள்ளையா ரப்பா பெரியப்பா - நீ
அள்ளக் குறையா நிதியப்பா

(சந்தனம்)

அப்பன் என்றாலும் சுப்பன் என்றாலும்
தப்புச் செய்தால் நீ விட மாட்டாய்
ஆபத்துக்காலத்தில் காப்பதற் கென்றே நீ
அப்படிச் செய்வாய் விளையாட்டாய்

ஆற்றங் கரைமணல் அரசமரத்தடி
நாற்புறம் எங்குமே நீ இருப்பாய்
வீட்டு மாடத்திலும் வீதி முனையிலும்
வீற்றிருந் தெங்களைக் காத்திடுவாய்
பிள்ளையா ரப்பா பெரியப்பா - அன்பு
வள்ளல் உனைப்போல யாரப்பா

(சந்தனம்)

52. புகழ்பாட அநுகூலம்

வினை தீர்க்கும் ஒரு தெய்வம் விநாயகனே - அந்தக்
கணநாதன் புகழ்பாட அநுகூலமே

(வினைதீர்க்கும்)

நமைமோதும் வினையாவும் பறந்தோடுமே
நலம் யாவும் கைகூடும் வளம் சேருமே

(வினைதீர்க்கும்)

சிவபாலன் ஓங்கார ரீங்காரமே
தினம்ஓதும் நால்வேதம் சங்கீதமே
அவன்தானே அனைத்திற்கும் ஆதாரமே
உணர்ந்தார்க்கு என்றென்றும் ஆனந்தமே

(வினைதீர்க்கும்)

53. ஸ்ரீ ஹேரம் கணபதி

மோஹன முத்து நிறம்
நீலம் செம்பவளம்
வைரம் சொர்ணமயம்
வண்ண ஐந்து முகம்
அழகு வேழ முகம்
அழகு வேழ முகம்
நாடி வருபவர்க்கு
கோடி கோடி என
வாரி வழங்கும் மனம்
வள்ளல் அவனின் குணம்
ஹேரம்ப நாதன் திறம் - சிவ
பார்வதி பாலன் வரம் (மோஹன முத்து நிறம்)

மொத்தம் பத்து கரம்
மோதகம் தந்தம் சிரம்
அட்ச மாலை, உளி
அங்குசம் வரம் அபயம்
முத்கரம் முச்சூலம்
முடிமேல் பிறை தவழும்
அற்புதத் திருக்கோலம்
ஆனந்த ஊர் கோலம் - நம்
ஆசைகள் நிறைவேறும் (மோஹன முத்து நிறம்)

நாபியில் நான் முகனும்
மாலவன் முகத்தினிலும்
விழியில் சிவபரனும்
உதித்தனர் இவனிடமே

இடப்புறம் சக்திமயம்
வலப்புறம் கதிரவனாம்
பூதங்கள் ஐந்தும் இவன்
ஏவல்கள் கேட்பனவாம் - சிம்ம
வாஹனம் சீறி வரும் (மோஹன)

நான் மறை பாதங்களே
தீவினை தூளாகும்
தாமரைத் திருமகளின்
தயவை இவன் தருவான்
ஆதி.... சங்கரரும்
போஜனும் துதி செய்த
ஹேரம்ப கணபதியே
வேண்டும் வரம் தருக - ஒளி
விளக்கை ஏற்றிடுக

வேண்டும் வரம் தருக - ஒளி
விளக்கை ஏற்றிடுக

54. விக்ன விநாயகன்

வழிபடும் அடியவா
இடர்கெட துயர்அற
வரம்தரும் வள்ளல் அவன் - பகை
மிதி பட பொடிபட
தகிதிமி நடமிடும்
திறமிகு தெய்வமவன்
விக்ன விநாயகன் பாதம் வணக்கம்
வேழ முகத்தோன் தாள்மலர் வணக்கம் (வழிபடும்)

நிரந்தரம் சுகம்தரும் நலம்தரும் வளம்தரும்
நீள்கரம் வாழ்வுதரும் - நம்
கணபதி புகழ்சொல கவலைகள் அகன்றிடும்
அமைதி தேடிவரும்
விக்ன விநாயகன் பாதம் வணக்கம்
வேழ முகத்தோன் தாள்மலர் வணக்கம் (வழிபடும்)

எனதெனும் திமிரதை இடக்கரம் அடக்கிடும்
அங்குசம் அதைச் செய்யும் - உன்
சரணமே சரண் எனின் பாசம் அழைத்திடும்
வலக்கரம் அபயம் தரும்
விக்ன விநாயகன் பாதம் வணக்கம்
வேழ முகத்தோன் தாள்மலர் வணக்கம் (வழிபடும்)

இருவினை விலகிட பெருஞ்செவி அசைந்திடும்
விழிகள் வெற்றிதரும்
குரு அவன் அருள் பெறின் குறை எலாம் நீங்கிடும்
இகபரம் இனிதாகும்
விக்ன விநாயகன் பாதம் வணக்கம்
வேழ முகத்தோன் தாள்மலர் வணக்கம் (வழிபடும்)

55. மூலாதார மூர்த்தி

ஆறு ஆதாரங்கள் அவற்றுள் முதலதாம்
மூலாதாரம் நீ
அகரமென அறிவாகி உலகெங்கும் வியாபித்து
பல உருவம் கொண்டவன் நீ
ஓம் எனும் நாதமே வேழமுகம் கொண்டதோ
யானை நடை போடுவாய் நீ
ஊனுக்குள் உயிராகி உயிருக்குள் ஒளியாகி
ஒன்றிக் கலந்தவன் நீ (ஆறு ஆதாரங்கள்)

பால கணபதி தருண கணபதி
பக்தி கணபதி நீ
வீர கணபதி சக்தி கணபதி
துவிஜ கணபதி நீ....
ஹேரம்ப கணபதி லக்ஷ்மி கணபதி
விஜய கணபதி நீ
ஏகதந்த கணபதி ஏகாட்சர கணபதி
தீரயட்சர கணபதி நீ (ஆறு ஆதாரங்கள்)

சித்தி கணபதி உச்சிஷ்ட கணபதி
விக்ன கணபதி நீ
க்ஷிப்ர கணபதி ஊர்த்துவ கணபதி
நிருத்த கணபதி நீ
க்ஷிப்ர ப்ரஸாத கணபதி, உத்தண்ட
சிருஸ்டி கணபதி நீ
ஹரித்ரா கணபதி ரணமோசன கணபதி
வரந்தரும் கணபதி நீ
துண்டி கணபதி துவிமுக கணபதி

திரிமுகம் சிங்க முகம்
துர்கா கணபதி யோக கணபதி
சங்கட ஹரன் நீயே
மஹா கணபதி முப்பத்திரண்டு
புவனம் முழுதாள் வாய்
மஹிமைகள் பாடிடும் அடியவர் குறைதீர்த்து
மங்களம் பெருக வருவாய்
சங்கடம் தீர்க்க வருவாய்
சௌபாக்யம் தர வருவாய்

ஜெய ஜெய கணபதி சித்தி கணபதி
ஜெய ஜெய கணபதி சித்தி கணபதி

56. தோற்றம், மந்திரம், செயல்

பால கணபதி பக்தி கணபதி
சக்தி கணபதி சித்தி கணபதி
விக்ன கணபதி வீர கணபதி
துவிஜ கணபதி தருண கணபதி

உச்சிஷ்ட கணபதி மகா கணபதி
நிருத்த கணபதி ஹேரம்ப கணபதி
க்ஷிப்ர கணபதி லக்ஷ்மி கணபதி
வர கணபதி விஜய கணபதி
ஏகாட்சர கணபதி திரயட்சர கணபதி
ஹரித்ரா கணபதி ஊர்த்துவ கணபதி
துவிமுக கணபதி சிங்கமுக கணபதி
சிருஷ்டி கணபதி துர்கா கணபதி
க்ஷிப்ர ப்ரஸாத் கணபதி ருணமோசன கணபதி
திரிமுக கணபதி சங்கடஹர கணபதி
ஏக தந்த கணபதி யோக கணபதி
துண்டி கண்பதி உத்தண்ட கணபதி

பாடல்

முப்பத் திரண்டு தோற்றம் கொண்டவா
முன்னவா மூத்தவா யானை முகத்தவா
எப்பக்கம் திரும்பினும் நீ தானே கஜமுகா
ஏழைக்கும் செல்வர்க்கும் வாழ்வு தருபவா

ஓம் சுமுகாய நம :
ஓம் ஏகதந்தாய நம :
ஓம் கபிலாய நம :
ஓம் கஜகர்ண காய நம :

ஓம் லம்போதராய நம :
ஓம் விகடாய நம :
ஓம் விக்ன ராஜாய நம :
ஓம் கணாதி பதயே நம :
ஓம் தூம கேதுவே நம :
ஓம் கணாத்ய க்ஷாய நம :
ஓம் பாலச்சந்த்ராய நம :
ஓம் கஜாநநாய நம :
ஓம் வக்ர துண்டாய நம :
ஓம் சூாப்பகர்ணாய நம :
ஓம் ஹேரம்பாய நம :
ஓம் ஸ்கந்த பூர்வ ஜாய நம :

பதினாறு நாமங்கள் சொல்லித் துதிப்பவர்
பாவங்கள் போக்கும் ஞால முதல்வர்
பாரதம் எழுதிட நேரில் வந்தவா
வலப்புறத் தந்தமே எழுத்தாணி என்றவா

பிள்ளையார் பட்டியிலே பெரும் புகழ் பெற்றவா
சிதம்பரத் தலத்திலே நரமுகம் கொண்டவா
சுசீந்திரம் கோயிலில் சாட்சி சொன்னவா
திருவலஞ் சுழியிலே வெள்ளை விநாயகா

திருச்சி மலைக்கோட்டை உச்சிக்குச் சென்றவா
திருவா ரூரிலே மாற்று உரைத்தவா
திரு நாரை யூரிலே பொல்லாத பிள்ளையே
தேவ னூரிலே பொய்யா விநாயகா

திருவலஞ் சுழியிலே வலம் வந்த கணபதி
கும்ப கோணத்தில் கரும்பு கணபதி
திருச்செங் காட்டாங்குடி வாதாபி கணபதி
மதுரைக் கோயிலில் முக்குறுணி கணபதி

சீர்கா ழியிலே ஆபத்துக் காத்தவா
திருமயி லையிலே நவசக்தி நாயகா
ஊர்தோறும் ஒவ்வொரு ஆடல் புரிந்தவா
உன் பேரைச் சொன்னாலே இன்னல் களைபவா

57. கணபதியின் வடிவங்கள்

மூன்று கனியுடன் செங்கரும் பேந்திய
காலைக் கதிரொளி பால கணபதி
நாவல் விளாம்பழும் நெற்கதிர் ஏந்திய
வாலிப னாக தருண கணபதி

வசந்த காலத்தில் நிலவொளி வீசும்
தேங்காய் ஏந்திய பக்த கணபதி
பதினாறு கைகளில் பலப்பல ஆயுதம்
வெற்றி தருகின்ற வீர கணபதி

பச்சை நிறம் கொண்ட சக்தி தேவியுடன்
இச்சையோ டமர்ந்த சக்தி கணபதி
கையில் கமண்டலம் ஏடு தடிகொண்ட
வெள்ளை நிறமேனி துவிஜ கணபதி

பத்மா சனம் அமர்ந்து வீணை மீட்டுகின்ற
கருநீல வண்ண உச்சிஷ்ட கணபதி
பரசு எள்ளுருண்டை மாம்பழம் ஏந்தியே
பசும்பொன் நிறம் காட்டும் சித்தி கணபதி

தர்ப்பைப்புல் ஏந்திய விக்ன கணபதி
கற்பகக் கொடியுடை க்ஷிப்ர கணபதி
ஐந்து தலை கொண்ட ஹேரம்ப கணபதி
பைங்கிளி கொஞ்சும் லக்ஷ்மி கணபதி

பிறைமுடி சடையர் மஹா கணபதி
எலிவா ஹனத்தில் விஜய கணபதி
நர்த்தனம் ஆடும் நிருத்த கணபதி
தங்கத் திருமேனி ஊர்த்துவ கணபதி

ஓம் எனும் ப்ரணவ ஏகாட்சர கணபதி
வேண்டும் வரம் கொடுக்கும் வர கணபதி
மாம்பழம் ஏந்திய த்ரயாட்சர கணபதி
யோஹ க்ஷிப்ர ப்ரஸாத கணபதி

மங்கள மஞ்சள் ஹரித்ரா கணபதி
நீல வண்ண ஏகதந்த கணபதி
படைக்கும் திறமிகு சிருஷ்டி கணபதி
குங்கும நிறம் கொண்ட உத்தண்ட கணபதி

கடன் தொல்லை அகற்றும் ரண மோசன கணபதி
காசி செந்தூர் வாழ் துண்டி கணபதி
இரட்டை முகம் கொண்ட துவி முக கணபதி
மும் முகம் படைத்த திரிமுக கணபதி

சிக்கல்கள் நீக்கிடும் சிங்கமுக கணபதி
த்யானத்தில் ஆழ்ந்த யோக கணபதி
சிவப்புடை அணிந்த துர்கா கணபதி
செந்தா மரைசேர் சங்கடஹர கணபதி

துக்கத்தை நீக்கி சுகத்தினை சேர்க்கும்
முப்பத் திரண்டு விநாயக மூர்த்தி
தும்பிக்கை காட்டி நம்பிக்கை ஊட்டும்
ஐங்கரன் பாதம் வணங்கிடு வோமே

ஓம் ஓம் ஓம்

58. கவசம்

திருமயிலையின் நவசக்தி கணபதி சிரசினைக் காக்க
தென் மதுரையின் முக்குறுணி கணேசன் முகத்தினைக் காக்க
திருச்சி மலையின் உச்சிப் பிள்ளையார் செவிகளைக் காக்க
சிதம்பரத்தின் நரவிநாயகன் விழிகளைக் காக்க

திருவலஞ்சுழி கணநாயகன் நெற்றியைக் காக்க
செங்காட்டங்குடி வாதாபி கணபதி கன்னங்கள் காக்க
புருவம் இரண்டும் புதுவை மணக்குள விநாயகன் காக்க
விருத்தாசலம் ஆழப்பிள்ளை நாசியைக் காக்க

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் வாயினைக் காக்க
ஜெயங்கொண்டம் ஆபத்துக் காத்தான் கழுத்தினைக் காக்க
திரு ஆரூர் மாற்றுரைத்தான் மார்பினைக் காக்க
திருவலத்தினில் பழம் பெற்றவன் வயிற்றினைக் காக்க

கும்பகோணம் கரும்பாயிரம் கரங்களைக் காக்க
வேலூரின் செல்வகணபதி இடையினைக் காக்க
கன்னிமூலை சபரி கணபதி கால்களைக் காக்க
பிள்ளையார்பட்டி பிள்ளையார் என் வாழ்வினைக் காக்க

விநாயகன் காக்க
வினைகள நீக்க
கணபதி காக்க
நலமெலாம் சேர்க்க

59. காக்கும் கவசம்

திருச்சி மலையின் உச்சித்தெய்வம் சிரசினைக் காக்க
சிதம்பத்தின் நரவிநாயகன் திருமுகன் காக்க
திருக்கடவூர் கள்ள வாரணம் உள்ளதைக் காக்க
திருச்செங்காட்டங்குடி வாதாபி இரு செவிகளைக் காக்க - பேர்
அருள் நிலை சேர்க்க

புருவம் மதுரை முக்குறுணி பிள்ளையார் காக்க
புதுவை மணக்குள விநாயகன் என் விழிகளைக் காக்க
விருத்தாசலம் ஆழப்பிள்ளை நாசியைக் காக்க
திருநாரையூர் பொல்லாப்பிள்ளை வாய்தனைக் காக்க - என்
வார்த்தையைக் காக்க

பிள்ளையார்ப் பட்டிப் பிள்ளையார் என் பல்லினைக் காக்க
நவசக்தி மயிலை நாயகன் என்றன் நாவினைக் காக்க
கன்னி மூலை சபரி கணபதி கன்னத்தைக் காக்க
ஜயங்கொண்டம் ஆபத்துக் காத்தான் கழுத்தினைக் காக்க - நல்
வளத்தினைச் சேர்க்க

மாற்றுரைத்த திரு ஆரூரான் மார்பினைக் காக்க
வேலூரான் செல்வ கணபதி வயிற்றினைக் காக்க
திருவலஞ்சுழி வெள்ளைப் பிள்ளை நாபியைக் காக்க
கும்பகோணம் கரும்பாயிரம் கரங்களைக் காக்க - பல
நலங்களைச் சேர்க்க

முச்சந்தியில் அமரும் தேவன் இடையினைக் காக்க
மூன்றுலகையும் ஆளும் பாலன் ரகசியம் காக்க
காலங்களை நடத்தும் கணபதி கால்களைக் காக்க
பாதங்களை வாழ்வுப் பாதையை ஹேரம்பன் காக்க - அந்த
ஏகதந்தன் காக்க

விநாயகன் காக்க - நல்
வெற்றியைச் சேர்க்க

60. கணபதி திருத்தலங்கள்

திருச்சி மலையின் உச்சியில் உந்தன் தெரிசனம் கண்டேன்
சிதம்ப ரத்தில் நரமுகம் காட்டும் புதுமையினை கண்டேன்
திருவலஞ் சுழியில் வெள்ளை வண்ண அழகினை நான் பார்த்தேன்
திருவா ரூரில் மாற்றுரைத்த செய்தியை நான் கேட்டேன்

ஒன்பது சக்திகள் இணைந்த உருவில் மயிலையில் நீ அமர்ந்தாய்
கும்ப கோணத்தில் கணபதி நீயோ கரும்பாக இனித்தாய்
சீர்கா ழியிலே ஆபத்துக் காக்கும் தெய்வமாய் நீ இருந்தாய்
சுசீந்திரத்தில் சாட்சி உரைத்திட ஓடோடி வந்தாய்

திருநாரையூரில் பொல்லாத பிள்ளை என்றே பேரெடுத்தாய்
செங்காட் டங்குடி வாதாபி கணபதி என்றே சீர்கொடுத்தாய்
விருத்தா சலத்தில் ஆழத்துப் பிள்ளை நீ ஆன்மீகம் வளர்த்தாய்
புதுவை மணக்குள நாயக! பாரதி கவிதையில் இடம் பிடித்தாய்

பிள்ளையாப் பட்டி பிள்ளையார் என்றே பெரும்புகழ் நீ படைத்தாய்
வேலூர் செல்வ கணபதி ஐயா விரும்பியதைக் கொடுத்தாய்
தென் மதுரையின் முக்குறுணி தேவா! நின் திருவருள் வேண்டுகிறேன்
கன்னி மூலை சபரி கணபதி காத்திட வேண்டுகிறேன்

திருவருள் வேண்டுகிறேன்

61. பிள்ளையார் திருக்கோயில்கள்

நீ இல்லாத இடமில்லை - உன் பேர்
சொல்லாத நாளில்லை
எங்கேயும் இருப்பாய் எப்போதும் இருப்பாய்
எதிலும் முதல்வன் நீ தானே முன் நிற்பாய்
விநாயகனே....
வினை தீர்ப்பவனே...

(நீ இல்லாத)

திருச்சி மலையின் உச்சியிலே உன் தரிசனம் கண்டேனய்யா
விருத்தாசலத்தில் ஆழத்துப் பிள்ளையாய் விளங்குகின்றாய் ஐயா
திருவா வடுதுறை துணை விநாயகா துணை வருவாய் ஐயா
திருவை யாற்றின் ஆதி நாயகா நலம் தருவாய் ஐயா

திருக்கடவூரில் கள்ள வாரணா இருளினை ஓட்டிடுவாய்
திருவலஞ்சுழியின் வெள்ளை வாரணா விதியையும் மாற்றிடுவாய்
திருமறைக் காட்டின் சிந்தாமணியே திருவிளக்கேற்றிடுவாய்
திருச் சிற்றம்பலக் கற்பகமே நல்ல வழிதனைக் காட்டிடுவாய்

திருவாரூரில் மாற்று ரைத்தவா தெளிவைத் தந்திடவா
புதுவை மணக்குள கணபதியே நீ விழியில் ஒளியைத்தா
திருநாரை யூரின் பொல்லாப் பிள்ளையே அமுது உண்டிடவா
வேலூரில் வாழும் செல்வ விநாயகா நேரில் பேசிடவா

வாதாபி கணபதி என்றிங்கு வந்த வல்லபையின் கணவா
ஆபத்துக் காத்து ஜெயங் கொண்டபுரத்தில் அமர்ந்தவனே தலைவா
மாங்கனி பெறவே வலம் வந்த நாதா திருவலம் விநாயகா
ஆயிரம் கரும்பை அருந்திய புதல்வா குடந்தையில்வாழ் முதல்வா

கேரள புரத்தில் வண்ணங்கள் மாறும் அதிசயம் சொல்லிடவா
சுசீந்திரத்தில் விஸ்வரூபமோ நீலகண்ட விநாயகா
திரு நள்ளாற்றின் சொர்ண விநாயகா பொன் மாரிபொழிந்திடுவா
பிள்ளையார்ப்பட்டி பிள்ளையாரே நீ நல்ல தெல்லாம் தருவாய்

சைனா, ஜப்பான், ஆப்கா னிஸ்தான் ஜாவாத் தீவிலும் நீயே
நேபாளம், திபேத்து, பர்மா காம்போஜம் மங்கோலியாவிலும் நீயே
சைவம், வைணவம் சமணம் பௌத்தம் எல்லா மதங்களும் போற்றும்
சமரச தெய்வம் தனிப்பெருந்தெய்வம் கண நாயகனெனும் நீயே

ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் அதிசயம் உன்செயல் விசித்திரமே
உலகெங்கும் உன்னைப் பலப்பல உருவினில் வழிபடல் அதிசயமே
எல்லையில் லாதஉன் மாயா லீலைகள் சொல்லி முடிந்திடுமோ
இதயத்தில் வந்துநீ அமர்ந்து விட்டாய் இனி ஒரு குறை
நேர்ந்துடுமோ

(நீ இல்லாத)

குரு முதலே வணக்கம் - எங்கள்
கணபதியே வணக்கம்



62. விக்னேஸ்வரன்

ஸரிகம பதநி... அருள் நீ...

ஸப்தஸ்வரம் ஓம் நாதமோ
ப்ரணவ வடிவே நீ தானோ
நடை அழகே ஒரு நாட்டியமோ
கணபதியே வருவாயே
ஸப்தஸ்வரம் ஓம் நாதமோ
விக்னேஸ்வரா விநாயகா

அசையும் தும்பிக்கையினை வீசி
அன்பினாலே தந்தாய் ஆசி
ஆனந்த ஞானப் பழமாம் முருகன்
உலகைச் சுற்றி உலவும் நேரம்
மாம்பழத்தைக் கவர்ந்தாயே
ஸப்தஸ்வரம் ஓம் நாதமோ
விக்னேஸ்வரா விநாயகா

வள்ளி கல்யாணம் நின்னாலே நடக்க
யானையாகவே வந்தாய் நீ
முழுமுதலே என உருகும் போது
முன்னின்று காக்கும் அச்சம் போக்கும்
அண்ணலே நீ வருவாயே
ஸப்தஸ்வரம் ஓம் நாதமோ
விக்னேஸ்வரா விநாயகா

63. ஸ்ரீ பட்டீஸ்வரம் துர்காம்பிகை ஆக்ஞா கணபதி

ஆக்ஞா கணபதியே ஆணையிடு - உன்
அற்புதம் அதைப் பாட சொற்கள் கொடு (ஆக்ஞா கணபதியே)

கோவிந்த தீட்சிதரின் குரு நீயே
ஞான வாவிக்கரை அமர்ந்தாயே (ஆக்ஞா கணபதியே)

அரசனின் ஆணவம் கிண்ணம் இடற
அபிஷேகப் பாலதுவும் கீழ் சிதற
குளத்து நீர்கொண்டு நீராட்ட
கணத்தில் நீ அதனை பாலாக்க
தான் செய்த தவறுக்கு
கோன் மனம் வருந்திட
மானியம் பெற்றனை
மானம் காத்தனை
பக்தனை சித்தனாய் முக்தனாய் மாற்றினை
(ஆக்ஞா கணபதியே)

பட்டீஸ்வரம் துர்க்கையைப் பாடிட வந்தேன் நான்
கட்டுக்கள் அகற்றிடு மெட்டுக்கள் கொடுத்திடு
கொட்டிக் கொடுக்கின்ற கோடீஸ்வரன் நீயே
குருபக வானின் குளம் சீர் செய்தாயே
எடைக்கு எடையாய் தொடுத்த துலாபாரம்
கிடைத்தது தங்கம் படைத்தார் மண்டபம்
பக்தனின் சித்தம் எத்தகையது என
பாருக்குக் காட்டிய பேரின்ப நாயக
ஞானவிநாயகா
மறக்க முடியுமோ மஹாமகம் திருப்பணி செய்வித்த பெருங்குணம்
(ஆக்ஞா கணபதியே)

64. கணந்தோறும் கணபதி

ஒவ்வொரு கணமும் உன்னால் நகரும்
உயிர்க்கணம் யாவும் உன்னால் வளரும்
கணபதி எனும் பெயர் எத்தனை பொருத்தம்
உனதருள் இன்றி எதுதான் நடக்கும் (ஒவ்வொரு)

புள்ளிஆர் சுழியே பிள்ளையார் சுழியாம்
பிள்ளையார் சுழியே நல்லதோர் வழியாம்
புள்ளியே தொடக்கம் புள்ளியில் அடக்கம்
பிள்ளையார் இன்றி எதுதான் நடக்கும் (ஒவ்வொரு)

ஓமெனும் முதல் ஒலி வேழம் ஒலிக்கும்
கடுகையும் மலையையும் துதிக்கை எடுக்கும்
யானையின் குணத்துடன் செயல்களை நடத்தும்
விநாயகன் இன்றி எதுதான் நடக்கும் (ஒவ்வொரு)

ஆனந்தம் தானே அனைவர்க்கும் வேண்டும்
வா, வந்து சுவை என மோதகம் தூண்டும்
ஆரம்பம் எதற்கும் ஆசிகள் அளிக்கும்
ஹேரம்பன் இன்றி எதுதான் நடக்கும் (ஒவ்வொரு)

65. கொலு அமர்கோலம்

கரும்புச் சாற்றுக் கடலிலே
கற்பக விருட்ச நிழலிலே
ரத்ன மண்டபம் நடுவிலே
ஸிம்ம ஆஸனம் அதனிலே
நவ... சக்திகள் சூழவே
வல்லபை தேவி அருகிலே
மஹா... கணபதி அமர்ந்துளார்
கொலுவைக் காண வருகவே - அவர்
அழகைக் காண வருகவே (கரும்புச் சாற்றுக் கடலிலே)

பூத நாதன் முருக சரவணன்
சிவனும் சக்தியும் போற்றவே
பாசம் அங்குசம் பாணம் வில்லொடு
பத்ம பாதம் காட்டுவார்
சந்த்ர சூரியர் ப்ரம்மன் விஷ்ணு
இந்தி ராதி தேவர்கள்
மந்த்ரம் ஓதி மலர்கள் தூவி
வாழ்த்து பாடுவார்
தங்கமயமாய் தங்க கணபதி
மங்களங்கள் அருளுவார்

கொலுவைக் காண வருகவே - அவர்
அழகைக் காண வருகவே (கரும்புச் சாற்றுக் கடலிலே)

கும்ப முனியும் வ்யாஸ ரிஷியும்
தமிழும் வேதமும் சாற்றுவார்
கங்கை கௌரி வாணி லக்ஷ்மி
பொன்... ஊஞ்சல் ஆட்டுவார்

ஏழு மாதர் கவரி வீச
பாலும் பழமும் பருகுவார்
வேழ முகமும் தும்பிக்கையும்
ஆசி கூறுமே

எட்டு செல்வமும் கொட்டித் தருவார்
சொர்க்க போகம் அருளுவார்
கொலுவைக் காண வருகவே - அவர்
அழகைக் காண வருகவே (கரும்புச் சாற்றுக் கடலிலே)



66. காமதேனுவோ

காம தேனு யானை வடிவில் தோன்று கின்றதோ
காணாது ஏங்கினேன்
கணந்தோறும் வேண்டினேன்
கற்பகமே அற்புதமே கணபதியே கண்டுகொண்டேனே
(காமதேனு)

புவனங்கள் எல்லாம் உந்தன் பாத தூளியே
புரியாத நாடகந்தான் இந்த வாழ்க்கையே
உந்தன் த்யானமே
உண்மை ஞானமே
விநாயகா என்றாலே
வினைகள் யாவும் விலகுமே
(காமதேனு)

அங்குசத்தால் ஆணவத்தை நீ அடக்குவாய்
பாசம் வீசி நேசம் கொள்ள பாதை காட்டுவாய்
தும்பிக் கையினால்
துன்பம் துடைப்பாய்
ஆனந்தம் மோதகந்தான்
அபய வரதம் அருளுவாய்
(காமதேனு)

67. ஓமெனும் ஒலி

ஓமெனும் ஒலியினிலே உனது
கானம் கேட்குதய்யா
ஆனந்த ராகம் அது - ஐயா
தேனும் தெவிட்டுதய்யா
வானத்து நிலவு பூமியில் உலவும்
அழக துவோ - ஒரு
யானைக் குழந்தை ஆடும் கோலம் (ஓமெனும்)

தண்டைக் கிண்கிணி நெஞ்சில் மின்மினி
தாளம் தவறா ஆட்டமே
எங்கே உந்தன் இனிய மோதகம்
தந்தால் நானும் ஆடுவேன்

ஜெய் ஜெய் கணேச ஜெய் ஜெய் கணேச
ஜெய் ஜெய் கணேச ஓடி வா
ஜெய் ஜெய் கணேச ஜெய் ஜெய் கணேச
ஜெய் ஜெய் கணேச ஆடி வா

முன்னவனாக தோன்றிய பிள்ளை
முதற்பிள்ளை நீ தானே
முக்கண்ணன் பார்க்க சக்தியும் நோக்க
அக்கணம் அவதரித்தாய்
கோளம் / அனைத்தையும் ஆட்டுகிறாய் (ஓமெனும்)

தொந்தி சரிய துதிக்கை வளைய
சந்தம் தவறா ஆட்டமே
அங்கம் நெளிய அசைந்து அசைந்து
ஆடும் உன்னைப் பாடுவேன்

ஜெய் ஜெய் கணேச ஜெய் ஜெய் கணேச
ஜெய் ஜெய் கணேச ஓடிவா
ஜெய் ஜெய் கணேச ஜெய் ஜெய் கணேச
ஜெய் ஜெய் கணேச ஆடி வா

அறுமுகன் எங்கே ஐயப்பன் எங்கே
நீ மட்டும் வந்தாயோ
திருமுகம் காட்டிச் சிரிக்கின்ற காட்சி
தேகம் சிலிர்க்குதய்யா - ஐயா
யாவும் மறக்குதய்யா (ஓமெனும்)

கண்ணே மணியே கனியே அமுதே
பண்ணின் சுவையே ஓடிவா
உன்னில் என்னை என்னில் உன்னை
பின்னிப் பிணைக்க ஆடிவா

ஜெய் ஜெய் கணேச ஜெய் ஜெய் கணேச
ஜெய் ஜெய் கணேச ஓடி வா
ஜெய் ஜெய் கணேச ஜெய்ஜெய் கணேச
ஜெய் ஜெய் கணேச ஆடிவா



68. வாழ்வு தரும் வேழ முகம்

நீ இல்லாமல் வாழ்வு ஏது ஓம் கணபதி
ஓயாது ஏங்குவேன்
சாயாது தாங்குவாய்
தாயாக தேவா நீ பாதுகாக்கிறாய்

(நீ இல்லாமல்)

யாரோடும் சொந்தம் கொண்டும் மாறிப் போகுதே
நீர் மேலே எழுதிவைத்த கதையாகுதே
ஏது நேரினும்
நீ இருக்கிறாய்
அஞ்சாதே என்பாயே
யானை முகந்தான் தோன்றுமே

(நீ இல்லாமல்)

மணியோசை கேட்கும் போது ஓம் நாதமே
அசைந்து வரும் திருப்பாதம் அழகு நடனமே
விழி நோக்குதே
வினை நீக்குதே
மடி ஏற்றி வழிகாட்டி
ஞான பானம் ஊட்டுதே

(நீ இல்லாமல்)

69. கடவுளில் முதல்வன்

கணநாதனே சரணம் - பூத
கணங்களின் தலைவனே
கடவுளில் முதல்வனே

(கண நாதனே)

துணை என அமைவதுன் இணையிலா வருகை
மனம் மொழி மெய்களால் தினமும் என் தொழுகை
அழகிய தொடை மடக்கி அமர்ந்ததுன் இருக்கை
சுவை மோதகம் தரும் தும்பிக்கை நம்பிக்கை

(கணநாதனே)

ஓசை ஒளி அனைத்தும் உன்னிடத்தில் தொடக்கம்
உலகங்கள் பலப்பலவும் உன் வயிற்றில் அடக்கம்
பாசமும் அங்குசமும் தீவினைகள் தடுக்கும்
தந்தம் ஏந்தும் கரம் தலை எழுத்தை மாற்றும்

(கண நாதனே)

70. சதுர்த்தி விழா

தமிழர் கணக்கில் தொடங்கும் மாதம்
ஆவணி மாதம்
முதற் கடவுள் பிள்ளையாரும்
பிறந்த மாதம்
சிம்மலக்கினம் விசாக நட்சத்திரம்
சதுர்த்தியில் தோற்றம்
தீரா வினையும் தீர்ந்து போக
வந்தது மாற்றம்

வாழை மரங்கள் தோரணம் கட்டி
வாழ்த்து சொல்லிடுவோம்
கோலம் தீட்டி கும்மிகள் கொட்டி
வரவேற் றிடுவோம்
கணபதி வருக - நம்
குலநிதி வருக

முக்கனியோடு சக்கரைப் பொங்கல் அப்பம் பொறிகடலை
மோதகம் பானகம் வேண்டிய தின்பண்டம் சாமிக்கு நாம்
படைப்போம்
அக்கறையோடு மூன்று நாட்கள் பூஜைகள் செய்வோம்
ஆற்று நீரில் அவரை அமர்த்தி வழி அனுப்பிடுவோம்
கணபதி வாழ்க - நல்ல
குணநிதி வாழ்க (தமிழர்)

மேள தாளம் நாதசுரங்கள்
முரசு கொட்டிடுவோம்
தேவதேவன் பாதம் பாடி
நடனம் ஆடிடுவோம்

ஊர்கோலம் வாண வேடிக்கை
உல்லாசம் கொள்வோம்
தேரிழுப்போம் தெப்பத்தில் வைப்போம்
ஆரத்தி காட்டிடுவோம்
கணபதி வாழ்க - நம்
கலைநிதி வாழ்க

71. நடன கணபதி

தூக்கிய துதிக்கை வாழ்த்துக்கள் அளிக்க
பாதச் சிலம்பொலி கல்லென ஒலிக்க
ஆடி வருகின்ற அழகென்ன தேவா
ஆறு முகனின் அண்ணனே வா வா
விக்ன விநாயக பாதம் நமஸ்தே
சக்தி கணபதி பாதம் நமஸ்தே (தூக்கிய)

ஐந்து புலன்களை அடக்கிடு என்றே
அறிந்து கொள்ளவோ ஐங்கரம் கொண்டாய்
ஆறா தாரம் கடந்த ஆனந்தம்
மோதகம் என்றே காட்டுகின்றாய்
விக்ன விநாயக பாதம் நமஸ்தே
சக்தி கணபதி பாதம் நமஸ்தே (தூக்கிய)

பற்றற் றிருவென பாசாங் குசங்கள்
கற்றுத் தரவோ நின்கரம் விளங்கும்
சுற்றும் கோளங்கள் தொந்தி வயிற்றில்
சூட்சுமக் கயிறு யானை முகத்தில்
விக்ன விநாயக பாதம் நமஸ்தே
சக்தி கணபதி பாதம் நமஸ்தே (தூக்கிய)

72. ஓம் ஸ்வரூபம்

ஓம்......... ஓம்........ ஓம்............

எங்கும் இருப்பது எப்போதும் இருப்பது
எல்லாம் ஆனது ஓம்
மங்களம் பொழிவது மகிழ்ச்சியைத் தருவது
மனதில் நிறைவது ஓம்

ஓம்..... ஓம் .... ஓம்

ஓம் எனும் நாதமே ஒளிவடி வானது
யானையைப் போன்றது அருள்உரு எடுத்தது
தீவினை நீக்கிட தேடியே வந்தது
தூக்கிய துதிக்கை வாழ்த்துக்கள் தந்தது

ஓம்..... ஓம்..... ஓம்

எண்ணும் எண்ணத்தில் முன்னே நின்றது
எழுதும் எழுத்திலும் சுழியாய் வந்தது
அன்னையைப் போலது ஆறுதல் தந்தது
அஞ்சேல் என்றது அருள்தந்து காத்தது (எங்கும்)

73. நர்த்தன விநாயகா

கோடி ரதம் ஆடிவரும் பேரழகு கோலம்
நூறாயிரம் மயில்கள் தோகைவிரி ஜாலம்
கால்தாவும் கைமாறும் இடைசுழலும் வேகம்
கணபதி உன் அபிநயங்கள் சுகமான ராகம்

(கோடி ரதம்)

பத்து விரல் மோதிரங்கள் எத்திக்கும் சுடரும்
பாதச் சிலம்போசை நாதங்கள் அதிரும்
தத்தி வரும் அலைபோல சதிராடும் நளினம்
நர்த்தன கணபதி உன் ஆனந்த நடனம்

(கோடி ரதம்)

ஒரு கை பாசத்தை வீசுகிற பாங்கு
மறுகையில் அங்குசம் அகற்றுவாய் தீங்கு
கவி எழுதும் தந்தம் நவமணிக் கூர்வாள்
இனியசுவை மோதகம் இன்பமெலாம் தருவாய்

(கோடி ரதம்)

74. கணநாதா - ஓம் - கணநாதா

ஓம் எனும் ப்ரணவம் ஆன கணேசன்
உலகங்கள் அனைத்தையும் ஆளும் கணேசன்
தேன் என தித்திக்கும் தெய்வம் கணேசன்
தேவரெலாம் தொழும் செல்வம் கணேசன்

வேழம் என வரும் பாலன் கணேசன்
வேண்டும் வரம் தரும் சீலன் கணேசன்
ஆலமரநிழல் தேடும் கணேசன்
நீர் நிலை கரைகளில் நிற்கும் கணேசன்

ஓவிய மண்டபம் தோன்றும் கணேசன்
பார்வதி தேவியின் காவல் கணேசன்
சீறிடும் சிங்கம் ஏறும் கணேசன்
சிவனையும் திகைத்திடச் செய்யும் கணேசன்

ஐந்து முகம் கொண்ட அழகன் கணேசன்
ஆறுமுகன் அவன் அண்ணன் கணேசன்
எந்த ஓர் செயலுக்கும் தொடக்கம் கணேசன்
அண்டங்கள் தொந்தியில் அடக்கும் கணேசன்

முன்னவன் மூத்தவன் மூலம் கணேசன்
மோதகம் ஏந்திடும் தேவன் கணேசன்
அன்னையை தந்தையை போற்றும் கணேசன்
என்னையும் உன்னையும் காக்கும் கணேசன்

அசுரரைத் தேய்த்திடும் யானை கணேசன்
அடியவர் உளம் மகிழ் ஞான கணேசன்
விசிறிபோல் செவிகளை ஆட்டும் கணேசன்
வினை எனும் வெப்பத்தை ஓட்டும் கணேசன்

எருக்கம் பூவையும் ஏற்கும் கணேசன்
ஏழையர் வீட்டிலும் இருக்கும் கணேசன்
துதிக்கையைத் தூக்கியே வாழ்த்தும் கணேசன்
துதிப்பவர் துன்பத்தை துரத்தும் கணேசன்

எதிரெதிர் மணிஒலி இசைக்கும் கணேசன்
தெனையும் தன்வசம் இழுக்கும் கணேசன்
அதிரசம் பழரசம் அருந்தும் கணேசன்
ஆடலும் பாடலும் விரும்பும் கணேசன்

கங்கையின் மைந்தனாய் வந்த கணேசன்
காவிரி பொங்கிட கண்ட கணேசன்
எங்கெங்கும் தோன்றிடும் ஈசன் கணேசன்
என்றென்றும் பக்தரின் நேசன் கணேசன்

அருகினில் வருகென அழைக்கும் கணேசன்
பதமலர் பற்றெனப் பகரும் கணேசன்
முதுகினில் ஏறென மொழியும் கணேசன்
தலைமேல் தாங்கும் தயாளன் கணேசன்

அன்பெனும் பிடியுள் அடங்கும் கணேசன்
ஆரம்பம் தொடர்வது முடிவு கணேசன்
நன்றையும் தீதையும் நடத்தும் கணேசன்
நாடக நாயகன் நடன கணேசன்

ஊனையும் உயிரையும் உருக்கும் கணேசன்
உள்ளொளி ஓங்கிட உணர்த்தும் கணேசன்
வானையும் மண்ணையும் இணைக்கும் கணேசன்
ஆனந்தப் பேரின்பம் அளிக்கும் கணேசன்

75. ஓங்கார ரீங்காரம்

ஓங்காரமே அது கணநாதமே
விநாயகன் திருநாமம் வினைதீர்க்கும் (ஓங்காரம்)
நாம் காணும் இந்த ப்ரஞ்சமே - அது
வேழமுகம் தந்த ப்ரஸாதமே
நீங்காத அவனை நினைப்பவர்க்கு - என்றும்
நிலையான சகல செளபாக்யமே
(ஓங்காரமே)

ஐங்கரத்தான் தருவான் அநுக்ரஹமே - ஓர்
ஆபத்தில் காக்கும் அவன் அபயகரமே
தும்பிக்கை ஏந்தும் மணிக்கலசமே - இனி
இன்பங்கள் எல்லாமே நமது வசமே
(ஓங்காரமே)

வினைகளை இருசெவிகள் விசிறிவிடும்
விழிகளின் அருட்பார்வை வெற்றிதரும்
பாவம் பொடிப் பொடியாய்ப் பறந்துவிடும்
பாதம் படிப் படியாய் ஏற்றி விடும்
(ஓங்காரமே)

76. பால விநாயகர்

வா......... வா ஓடி வா
பார்வதி பா...... லகா
பால விநாயகா (வா.. வா.....)

பூ மலர் மாலை தோளினில் ஆட
புன்னகை மின்னல்கள் கண்களில் கூ.....ட
வாழை, மா, பலா, கரும்பினை நீ நாட
வழங்கிடுவேன் வாராய் என்னுடன் விளையாட
(வா..... வா....)

உதிக்கின்ற செங்கதிர் உன்மேனி வண்ணம்
உன் பக்கம் நானிருந்தால் வெற்றி மிகத் திண்ணம்
விதிக்கும் விதி நீ வினை நீக்கும் கணபதி
துதிக்கை தூக்குக மனமார வாழ்த்துக
(வா..... வா......)



77. விக்ன விநாயகன்

வெற்றியைத் தந்திடும் வேழ முகத்தோனே
விக்ன விநாயகனே - உனைப்
பற்றித் தொழுபவர் வாழ்வினை என்றென்றும்
பாது காப்பவனே
விக்ன விநாயகனே - நவ
சக்தி விநாயகனே

(வெற்றியை)

அப்பம் அதிரஸம் கடலை பொறி தேங்காய்
முக்கனி கேட்பவனே
ஆனந்த மோதகம் ஏந்திய கை காட்டி
அக்கரை சேர்ப்பவனே
அங்குசத் தாலெங்கள் அல்லல்கள் நீக்கியே
அன்பினைக் கோப்பவனே
பாசத்தை வீசிளம் பாவத்தைப் போக்கியே
ஆபத்தில் காப்பவனே
விக்ன விநாயகனே - நவ - சக்தி விநாயகனே

(வெற்றியை)

செங்கதிர் போன்றொரு குங்குமத் தோற்றத்தை
சிந்தையில் சேர்ப்பவனே
சின்ன விழிப் பார்வை தன்னிலோர் காந்தத்தை
அள்ளித் தெளிப்பவனே
நம்பிக்கை நல்லொளி தும்பிக்கை காட்டி
கும்பிட வைப்பவனே
சங்கரி மைந்தனே சண்முகன் தமையனே
சக்தி விநாயகனே - நவ - சக்தி விநாயகனே
விக்ன விநாயகனே - நவ - சக்தி விநாயகனே

(வெற்றியை)

78. பிள்ளையார் சதுர்த்தி விழா

முதன் முதலா .... க
பிறந்த பிள்ளை ......
மூத்த பிள்ளை......
பிறந்த நாள் - இந்த
உலகிற்கெல்லாம் உவகை ஊட்டும் உயர்ந்தநாள்- மிக சிறந்த நாள்
(முதன் முதலாக)

பிள்ளை என்ற சொல்லுக்குப் பெருமை
பிள்ளை யார் இன்று பிறந்தநாள்
இல்லை என்றே சொல்லுவதில்லை
வள்ளல் வந்து பிறந்த நாள் (முதன் முதலாக)

சிங்கக் குட்டியின் ஜென்மலக்னம்
சிம்மம் சதுர்த்தி தங்கும் நாள்
தங்கப் பிறைநாள் திங்கள் கிழமை
மங்கள விசாகம் மின்னும் நாள்
ஆவதெல்லாம் அழகாய் ஆகிடும் ஆவணி மாதம் வாருங்களே
ஆனந்தக் கூத்து ஆடும் அழகன் அவனை வந்து பாருங்களே

காவிரி தந்த கணபதி அவனைக் காண வந்தாள் கங்கையே
சீர் கொணர்ந்தாள் சிவனின் தங்கை திருமகள் என்னும் மங்கையே
பால் வழிந்திட பார்வதி தேவி பார்த்துப் பார்த்துப் பூரித்தாள்
தேவர்கள் திருமால் நான்முகன் சங்கரன் பூ மழை பொழிந்தே
சேவித்தார்

தேவனை இன்று தேரினில் வைத்து
ஊர்வலம் செல்வோம் வாருங்களே
நாதஸ்வரங்கள் மத்தள மேளம்

வாண வேடிக்கை பாருங்களே
முக்கனி அப்பம் சர்க்கரைப் பொங்கல்
மோதகம் கொழுக்கட்டை தாருங்களே
மூன்று நாளும் திருநாளாக
யாவரும் ஒன்று சேருங்களே

கண நாதா ஜெய் கண நாதா



79. முழுதுமான பூரணம்

விநாயகா உன் அடைக்கலம் - என
வேண்டுவோர்க்குப் படைக்கலம்
கணபதி அவன் அருள்மனம் - அது
கடலைப் போல பெருகிடும் (விநாயகா)

மோதகம் இன்ப சாகரம் - அவன்
முழுது மான பூரணம்
தந்தமும் ஒரு கவிசொலும் - அது
தந்திடும் மகா பாரதம் (விநாயகா)

வேழம் போன்ற திருமுகம் - அது
விலங்கின் நிலைக்கு அறிமுகம்
பூதம் போன்ற பேருடல் - அது
ஆண வத்தின் இருப்பிடம்
மாந்தன் போன்ற நடை, உடை, ஒரு
தேவ னாக அமர்ந்தனன்
யாவும் தன்னில் காட்டினான்
ஞான பானம் ஊட்டினான் (விநாயகா)

கடுகும் மலையும் கைவசம்
துதிக்கை எதையும் தூக்கிடும்
படைத்தல் காத்தல் அழித்திடல்
மறைத்தல் அருளல் ஐங்கரம்
ஏழு கோடி மந்திரம்
தோன்றும் பெரிய தொந்தியாம்
யாவும் அங்கு சங்கமம்
பாதம் வழங்கும் மங்களம் (விநாயகா)

80. சாதக மோதகம்

முத்துக் கணேசன் அவன் மோதகம் - அது
எப்போ துமே நமக்கு சாதகம்
லட்டுடன் அப்பம் அதிரஸம் - அவன்
இச்சை கொண்டது எல்லாம் இனித்திடும்

(முத்துக் கணேசன்)

சுழி போட்டு எதையுமே தொடங்கிடு - ஐயா
தோப்புக் கரணங்கள் போட்டிடு
வழி காட்ட வந்திடுவான் குணநிதி - நல்ல
வாழ்வுதரும் தெய்வம் நம் கணபதி

(முத்துக் கணேசன்)

காலையில் அவன் பேரைச் சொல்லிடு - உன்
கவலைகள் யாவையும் தள்ளிடு
நாளைய பொழுதின் நம்பிக்கை - அதை
நடத்தியே வைத்திடும் தும்பிக்கை

பேர்பெறச் செய்திடும் பிள்ளையார்? அந்த
பார்வதி பாலகன் பிள்ளையார்
சீர்பெறச் செய்வதும் பிள்ளையார் - எதிலும்
ஜெயம் பெறச் செய்வதும் பிள்ளையார்

பிள்ளையார் - நம் - பிள்ளையார்

81. புள்ளியும் கோடும்

ஓமெனும் நாதம் நான்மறை வேதம்
ஏழிசை சங்கீதம்
யானை முகமும் அசையும் கரமும்
தோன்றும் திசையாவும் (ஓமெனும்)

புள்ளியும் கோடும் பிள்ளையார் சுழியே
எல்லாம் அவன் வழியே - இங்கே
எதுவும் அவன் செயலே
எல்லை இல்லாதவன் - கேட்டால்
இல்லை சொல்லாதவன் - அவன்தான்
விக்ன விநாயகன் (ஓமெனும்)

பெரிதினும் பெரிதாய் அணுவிலும் அணுவாய்
இருப்பவன் அவனேதான் - வாழ்வை
வகுப்பவன் அவனே தான்
எலிவா ஹனமும் யானை உருவமும்
அமைந்தது அதனால் தான் - உலகை
ஆட்டுது துதிக்கை தான் (ஓமெனும்)

சூரிய சந்திரர் அக்கினி மூவரும்
மூன்று விழியாகும் - பார்த்தால்
பாவம் பழிதீரும்
கணபதி பொற்பாதம் - என்றும்
தருவது சுக போகம் - அதுவே
சாஸ்வதமும் ஆகும் (ஓமெனும்)

82. கணபதியே சரணம்

தேனும் பாலும் மாம்பழச் சாறும்
மோதகம் பொறி அவலும் நீ உண்ணத் தருவோம்
வாராய் நீ வருவாயே இதுநல்ல தருணம்
பூஜைக்கு எழுந்தருள்க கணபதியே சரணம் (தேனும்)

யானை முகன் நீயே துணை ஆராதனை ஏற்க
தீராவினை தீரும் இனி ஐயாகண் பார்க்க
ஓராயிரம் நாமாவளி பாராயணம் கேட்க
வாழ்க என தும்பிக்கை நம்பிக்கை சேர்க்க (தேனும்)

ஆவணி மாதம் வளர்பிறைக் காலம்
சதுர்த்தித் திருநாளில் சந்தோஷம் சேரும்
அருகம்புல் தும்பைப் பூ வில்வதளம் சார்த்தி
அர்ச்சனைகள் செய்தோமே திருப்பாதம் போற்றி (தேனும்)

ஒரு கொம்பது விதிமாற்றிடும் புதுவாழ்வினை எழுதும்
இரு காதுகள் துயர்யாவுமே தொலைந்தோடிட விசிறும்
முக் கண்ணது திக்கற்றவர் பக்கத்தினில் நிற்கும்
முன்னே வரும் மணியோசையில் தன்னால் சுகம் விளையும்
(தேனும்)

நெற்றியில் குட்டிட புத்தியும் வளரும்
தோப்புக் கரணம் போட சக்தி பிறக்கும்
தேங்காயை உடைத்தாலே அகங்காரம் அகலும்
நீங்காத செல்வங்கள் நிம்மதியும் கிடைக்கும் (தேனும்)

83. சப்தஸ்வர சங்கீதம்

சப்த ஸ்வரங்களின் சங்கீதம் - உன்
நர்த்த னத்தினில் உருவாகும்
எட்டுத் திக்கிலும் ஓம் நாதம் - ஒரு
யானை போன்ற நின் வடிவாகும் (சப்த)

சித்தி கணபதி திருநாமம் - என்றும்
தித்தித் திருக்கும் தேனாகும்
சக்தி பார்வதி மகனாகும் - நின்
தங்கத் தாள்களே சரணாகும் (சப்த)

வித்தை வேண்டுவோர் துதிபாடும் - முழு
வெற்றி வேண்டுவோர் தினம் தேடும்
முத்துக் குமரனின் மனம் நாடும் - அருள்
வித்தகன் வரின் செயல்கூடும் (சப்த)

விநாயகனே வினை தீர்ப்பவனே
விண்ணும் மண்ணும் காப்பவனே
துணையாய் வருவது தும்பிக்கை
தொழுதால் பெறுவது நம்பிக்கை (சப்த)

84. இல்லாத இடமில்லை

நீ இல்லாத இடமில்லை
உனை நினைக்காத செயல் இல்லை
உலகம் முழுதும் நின் வழிபாடு
எல்லோர்க் கும்நீ உடன்பாடு
தொழுவோம் உன்னை அன்போடு

விநாயகனே வினை தீர்ப்பவனே
கஜானனனே எமைக் காப்பவனே (நீ இல்லாத)

சாணமும் மஞ்சளும் சம்மதமே - நின்
சந்நிதி வாசல் எங்கணுமே
ஏழையும் செல்வரும் சரிசமமே - ஓர்
எருக்கம் பூவையும் ஏற்றிடுமே
எதையும் நின் உளம் ஏற்றிடுமே

விநாயகனே வினை தீர்ப்பவனே
கஜானனனே எமைக் காப்பவனே (நீ இல்லாத)

தந்தையைப் போலே முக்கண்கள்
சந்திரன் கங்கை தலைமேலே
தாயின் அங்குச பாசங்கள்
நீயும் கைகளில் ஏந்தினையே
பாம்பையும் நகையாய் அணிந்தனையே

விநாயகனே வினை தீர்ப்பவனே
கஜானனனே எமைக் காப்பவனே (நீ இல்லாத)

85. அற்புதக் கற்பகம்

அற்புதப் பூங் கற்பகம் - ஓர்
யானை வடிவில் வந்தது
நற்புதம் அதன் பொற்பாதம் - நான்
கேட்டதெல்லாம் தந்தது (அற்புத)

அல்லல்களை அகற்றிட - அந்த
வல்லபையுடன் வந்தது
வள்ளலே என்றதும் - பொருள்
அள்ளி அள்ளித் தந்தது (அற்புத)

ஒற்றைக் கொம்பு இரு பெருஞ்செவி
மூன்று கண்கள் முகத்திலே
நால்வாய் எனும் துதிக்கையோடு
ஐந்து கரங்கள் அசைந்தது
ஆறுமுகன் அண்ணன் நான்
ஏழுலகும் என் வசம்
எட்டு சித்தி தருபவன்
பற்றுக என்றே உரைத்தது (அற்புத)

கணபதியே என்றதும் என்
கவலையெல்லாம் பறந்தது
விநாயகனே என்றதும் என்
வினை யாவும் தீர்ந்தது
முன்னவா என்றதும் கண்
முன்னே வந்து நின்றது
என்னவா என்றதும் அது
என்னை ஆட கொண்டது (அற்புத)

86. சித்திர மண்டபத்தில்

மந்திர சித்திர மண்டபத்தில்
வந்து அமர்ந்திருக்கும் பிள்ளையாரே
தொந்தி வயிறுடைய பிள்ளையாரே
தோப்புக் கரண மிட்டோம் பிள்ளையாரே - எமைக்
காப்பது உன் பாரம் பிள்ளையாரே - கரை
சேர்ப்பது உன் பாரம் பிள்ளையாரே
பிள்ளையாரே உனை வெல்ல யாரே
பிள்ளையாரே உனக்கில்லை ஈடே (மந்திர)

அங்கிங் கெனாதபடி எங்கும் நீ...
ஆதி முதலான தெய்வம் நீ....
ஆற்றங் கரையினிலும் தோப்புத் துரவினிலும்
வீதி முனையினிலும் வீட்டு மாடத்திலும்
மாட்டுச் சாணத்திலும் மஞ்சள் உருண்டையிலும்
ஏட்டுச் சுவடியிலும் ஏழை மனசினிலும்

தோற்றம் காட்டுகின்ற பிள்ளையாரே - எங்கள்
வாட்டம் நீக்குகின்ற பிள்ளையாரே
பிள்ளையாரே உனைவெல்லயாரே
பிள்ளை யாரே உனக்கில்லை ஈடே (மந்திர)

எருகம் பூ எனினும் ஏற்றுக் கொள்வாய்
அருகம் புல் எனினும் வரவேற்பாய்
வேதம் படித்தாலும் கீதம் இசைத்தாலும்
சாதம் படைத்தாலும் அவல் பொறி வைத்தாலும்
கூரை வேய்ந்தாலும் கோயில் அமைத்தாலும்
கோபம் சிறிதுமின்றி யானைத் தலை அசைப்பாய்

அன்பு போதுமெனும் பிள்ளையாரே - எங்கள்
ஆசை நிறைவேற்றும் பிள்ளையாரே
பிள்ளையாரே உனை வெல்ல யாரே
பிள்ளையாரே உனக் கில்லை ஈடே

87. நாக பூஷணன்

கல்வி தருவான் செல்வம் தருவான்
கலைகள் வழங்கிடுவான்
கற்றறிந்தார் சபையின் நடுவே
தலை நிமிர்ந்திடச் செய்குவான்
நல்ல மனமும் வல்ல உடலும்
நலமும் வளமும் அருளுவான்
நாக பூஷணன் விக்ன விநாயகன்
தாள் மலர் நமைக் காக்குமே (கல்வி தருவான்)

ஒற்றைத் தந்தம் இரண்டு நீளசெவி
மூன்று கண்கள் நாலுவாய்
ஐங்கரன் அவன் அறுமுகன் உடன்
அவதரித்தவன் அங்குசன்
ஏழுலகமும் வயிற்றில் அடக்குவான்
ஞானியர்க்கே எட்டுவான்
ஏடு கொண்டே எழுதுவான்தலை
எழுத்தையும் அவன் மாற்றுவான் (கல்வி தருவான்)

ஔவை பாடும் அகவல் கேட்டு
யானை முகத்தை ஆட்டுவான்
அவனை எண்ணித் தொடங்கும் செயல்கள்
எதிலும் வெற்றி நாட்டுவான்
தொல்லை யாவும் இல்லை யாக்கும்
தூயவன் கண நாயகன்
துதிக்கைக் கற்பகம் தாமரைப் பதம்
தொழுகவே தினம் தொழுகவே (கல்வி தருவான்)

88. செல்வ கணபதி

செல்வம் யாவும் சேரும் - நம்
பிள்ளை யாரை வேண்டுங்கள்
சீரும் நல்ல பேரும் தருவான் (செல்வம்)

துதிக்கையை தூக்கிடுவான் - அன்பாலே
தொழுபவர் துயர்களைவான்
வேழமுகத்தான் பார்வையி னால்
ஜெயம் ஜெயம் நிச்சயமே (செல்வம்)

கொடுப்பது அவல் பொறியே - என்றாலும்
கிடைப்பது அருள் நிதியே
ஏடெழுதும்கை நம்பிக்கை
எமபயம் இனி இல்லையே (செல்வம்)

குண்டலிக் கனல் அவனே - அதைத்தான்
சுண்டெலி உணர்த்திடுமே
ஓமெனும் நாதம் அவன் வடிவம்
திருவடி சரணம் என்போம் (செல்வம்)

89. கள்ள வாரணப் பிள்ளையார்

அபிராமி ஆலயத்தில் அமர்ந்தவா - தேவ
அமிர்தம் அதை மறைத்ததேன் விநாயகா
உள்ளம் கவர் கள்வனே
உமையாள் செல்வனே
கள்ள வாரணர் என்றே பேர் பெற்றவா
வருவாய் விரைவாய் அருளைப் பொழிவாய் (அபிராமி)

தும்பிக்கரம் தரும் அன்பு வரம் - பெரும்
நம்பிக்கை ஊட்டும்
தொந்தி கணபதி தந்ததோர் மோதகம்
இன்பத்தைக் கூட்டுமே
பாசாங்குசம் பகை துரத்தும் நேசம் காட்டுமே
பத்ம பாதம் பற்றும் போது மேல் ... ஏற்றுமே
வருவாய் விரைவாய் அருளைப் பொழிவாய் (அபிராமி)

முக்கனி சர்க்கரை தித்திக்கும் பண்டாங்கள்
முன்னே வைத்தேன்
எப்பொழுதும் என்னைக் காத்திட வேண்டும்
பிள்ளையா ரப்பா
ஓமென்னும் முதல் ஒலியே யானை முகத்தோய்
தேனாகும் கவிதருவாய் ஞானம் கொடுப்பாய்
வருவாய் விரைவாய் அருளைப் பொழிவாய் (அபிராமி)

90. கற்பக கணபதி

கற்பகம் நீயே கணபதியே
சித்தி விநாயகா ஜெயம் தருவாயே
விக்ன விநாயகா வினை களைவாயே

(கற்பகம் நீயே)

நர்த்தனம் ஆடும் பொற்பதம் போற்றி
நம்பிக்கை ஊட்டும் தும்பிக்கை போற்றி
நாளும் பொழுதும் நலம் அருள் வாயே

(கற்பகம் நீயே)

ஓம் எனும் நாதம் உன் திரு உருவம்
பேரானந்தம் மோதகம் உணர்த்தும்
ஞானம் நல்கும் மூலமே வாராய்

(கற்பகம் நீயே)

மண்ணும் உன்னால் பொன்னாய் மாறும்
எண்ணும் போதே நன்மைகள் சேரும்
எங்கும் எதிலும் மங்களம் நீயே

(கற்பகம் நீயே)

91. ஸ்ரீ விநாயகர்

விருத்தம்

உலகெலாம் உன்னிடம் சரணம்
ஓம் எனும் நாத சாகரம்
கஜா னனாய நமஸ்காரம்
நீயே ஆதி காரணம்
ஆ....... ஆ ஆ.......ஆ ஆ...........

பாடல்

நாதனே கண நாதனே
நலந்தரும் நாயகா
வினைகள் களைந்திடு விநாயகா (நாதனே)

நாடினேன் உனைத் தேடினேன் - உன்
பாதம் காணவே பாடினேன்
நம்பி வந்தவர் துயரமே - உன்
தும்பிக்கை வாழ்த்த விலகுமே
ஆ.......... ஆ (நாதனே)

அங்குசம் என் ஆணவம் - அதை
அகற்றி ஓடிடும் ஆயுதம்
பாசம் அருகில் இழுத்திடும்...
அ அ ஆ .... ஆ...... ஆ...... ஆ உன்
நேசம் அபயமும் கொடுத்திடும் (நாதனே)

மோதகம் பே ரானந்தம் - பெருங்
காதுகள் அறி வாலயம்
வேழ முகத்திலே மத்தகம்
அ அ ஆ... அ அ ... ஆ ஆ.. அது
ஞான மார்க்க புத்தகம் (நாதனே)

92. மங்கள மூர்த்தி

வித்யா வாரிதி புத்தி நிறைமதி
சித்தி அருள் நதி ஜெயமஹா கணபதி
கோடி சூர்ய ஒளி தேவர்களின் பதி
நாடித் தொழுவோர்க்கு நலந்தரும் நவதிதி
தனம்தரும் பொற்கிழி

(வித்யா வாரிதி)

ஓமெனும் ப்ரணவம் தோன்றிடும் ஊற்று
ஆயகலை கள்அவன் பாடிடும் பாட்டு
மூலம், நடு, முடிவு மூன்றையும் இணைத்து
நாடகம் நடத்துவது நாயகன் கூத்து
விநாயகன் கூத்து

(வித்யா வாரிதி)

அண்ட சராசரம் அவன் தந்த பிச்சை
அன்பரைக் காப்பது அவன் கொண்ட இச்சை
எங்கெங்கும் இருப்பான் மங்கள மூர்த்தி
எல்லாம் அவன் செயல் போற்றி போற்றி

(வித்யா வாரிதி)

93. முதல்வன்

பிள்ளை யாரப்பா அப்பா பெரியப்பா
நல்ல வழியில் நடத்தப்பா

எண்ணுதற்கு முன்னே நான்
நின்னை நினைக்கின்றேன்
எழுதத் தொடங்கு முன்னே
உன்னை அழைக்கின்றேன் (எண்ணுதற்கு)

நெற்றியில் குட்டிக் கொண்டேன்
நின் தாள் பற்றிக் கொண்டேன்
வெற்றி நடை போடுகின்றேன்
வேழ முகத்தைப் பாடுகின்றேன்
பிள்ளை யாரப்பா அப்பா பெரியப்பா
நல்ல வழியில் நடத்தப்பா (எண்ணுதற்கு)

அறுவகை சமயங்களும்
குருவென போற்றிடுமே
முதற்பொருள் நீ என்றே
முன் நிறுத்தி வழிபடுமே
பிள்ளையாரப்பா அப்பா பெரியப்பா
நல்ல வழியில் நடத்தப்பா (எண்ணுதற்கு)

வித்தைகள் காட்டியே வேடிக்கை பார்ப்பவன்
சித்தம் குளிர்ந்தபின் பக்கத்தில் சேர்ப்பவன்
தூக்கும் துதிக்கை வாழ்தத வந்திடும் வாழலாம் - நமைக்
காக்கும் கரங்கள் சேர்க்கும் அக்கரை காணலாம்
தாளிருக்கையில் தயவிருக்கையில் யார் தடுப்பது யார் எதிர்ப்பது
(பிள்ளையார்)

94. ஈடிலான்

தனக்கு மேல் தலைவன் இல்லாதவன்
தாய் தந்தை இருப்பினும் தானே மூலவன்
நினைக்காமல் சென்றாலோ பொல்லாதவன்
உணர்ந்து வணங்கியபின் ஓடோடி வருபவன்

(தனக்கு மேல்)

எழுகோடி மந்திரங்கள் இவனிடம் அடைக்கலம்
ஆதி காரணம் மூலப் பிரணவம்
அனைத்துயிர் வடிவிலும் இவனின் தோற்றமாம்
யானைத்தலை தேவன் உடல் பூத சரீரமாம்

(தனக்கு மேல்)

ஒரு கொம்பு ஆண்மை ஒடிந்த தந்தம் பெண்மை
இரண்டும் நிகராக இருந்திடும் இறைமை
சிவசக்தி பாராட்டும் இவனே பிள்ளை
விநாயகனுக்கீடு இணையேதும் இல்லை

(தனக்கு மேல்)

95. பேர் சொல்லும் பிள்ளை

பிள்ளை - யார்? பிள்ளையார் பேர் சொல்லும் பிள்ளையார்
பிள்ளை - யார் பிள்ளையார் யார் அவரை வெல்லுவார்?
ஆதி சக்தி சிவனை நோக்கும் ஆசை வந்ததே
அருமையான பிள்ளை ஒன்று தவழ்ந்து வந்ததே
ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம்!

(பிள்ளை - யார்?)

சக்தி மடியினில் தத்தும் கிளி அவன்
முத்துக் குமரனின் மூத்த சகோதரன்
வெற்றிக் கொடிகட்டும் வித்தகன் உத்தமன்
சித்தர் கணத்தவர் மத்தியில் வாழ்பவன்
பற்றிடும் பக்தரைக் கட்டிப் பிடிப்பவன்
எட்டுத்தி சையையும் கட்டியே ஆள்பவன்
சித்தியும் புத்தியும் பக்கத் திருப்பினும்
முற்றத் துறந்தவன் மோகன மானவன்
முக்கனி சர்க்கரை மோதகம் பாயஸம்
அப்பம் அதிரசம் உண்டு மகிழ்பவன்
தூக்கும் துதிக்கை வாழ்த்த வந்திடும் வாழலாம் - நமைக்
காக்கும் கரங்கள் சேர்க்கும் அக்கரை காணலாம்
தானிருக்கையில் தயவிருக்கையில் யார் தடுப்பது? யார் எதிர்ப்பது?

(பிள்ளை - யார்)

கங்கையும் திங்களும் கொண்ட சடையினன்
எங்கும் இருப்பவன் ஏகாந்த மானவன்
ஐங்கரன் ஐந்தொழில் ஆற்றிட வந்தவன்
சங்கரன் தோளினில் தாண்டவம் ஆடுவான்

விந்துவும் நாதமும் சேர்ந்த சுழியினன்
தந்தையைப் போலவே நெற்றி விழியினன்
அங்குச பாசத்தால் அண்டங்கள் ஆள்பவன்
நம்பிக்கை கொண்டவர் நெஞ்சினில் வாழ்பவன்

96. அவதாரம்

நினைத்திருந்த காரியங்கள் கூடிவரும் நேரம்
நீண்டநாள் முயற்சி எல்லாம் செயலாகும் காலம்

இது ஆவணி மாதம் - நல்ல
வளர் பிளைக் காலம் - கண
நாயகன் அவனின் -
அவதாரம் பொற்காலம் (நினைத்திருந்த)

ஆயிரங்கண் போதாதே அவனழகைப் பார்கக
யானைமுகம் ஐங்கரங்கள் அகிலமெல்லாம் காக்க
பார்வதியின் பாலன் அவன் பரமசிவன் மைந்தன்
நாடி இங்கு வந்தானே நல்லதெல்லாம் தந்தானே
சிம்ம லக்னம் சிங்கம் பிறந்தது
சிந்தை குளிர்ந்தது சித்திரம் பேசுது
அவன் தான் ....
முகம் மலர்ந்தான்
நலந்தான் ....
இனி சுகந்தான் (நினைத்திருந்த)

மூலமாய் முழுமுதலாய் முக்கனியாய் தமிழாய்
மோகம் ஏந்துகின்றான் சீர்பாடி மகிழ்வோம்
ஆஹா அவன் நினைத்தால் ஆகாத தும்உண்டோ
அவன்திரு நாமம் அது அமுதமோ கற்கண்டோ
விசாக விண்மீன் வினை தவிர்த்தது
சதுர்த்தி திதியும் சஞ்சலம் தீர்த்தது
அவன் தான் ....
முகம் மலர்ந்தான்
நலந்தான்
இனி சுகந்தான் (நினைத்திருந்த)

97. வாசல் தேடி

ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் - ஜெய
ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம்

வாசல் தேடி வள்ளல் வந்தான் பாருங்கள் - நல்
வாழ்த்துச் சொல்லி வரவேற்றிடவே வாருங்கள்
வாருங்கள் வந்து பாருங்கள்
பாடுங்கள் அவன் புகழ் பாடுங்கள்

பால கணபதி தருண கணபதி பக்த கணபதியே
வீர கணபதி சக்தி கணபதி த்விஜ கணபதியே
ஸித்தி கணபதி உச்சிஷ்ட கணபதி விக்ன கணபதியே
க்ஷிப்ர கணபதி ஹேரம்ப கணபதி லக்ஷ்மி கணபதியே
(வாசல் தேடி)

ஆயிரம் ஆயிரம் உருவம் எடுத்தே கணபதி வருகின்றான்
அவரவர் மனதில் உள்ளதை அறிந்தே அள்ளித் தருகின்றான்
கோடி கோடி ஜனங்களின் நடுவில் தேவன் வருகின்றான்
தேரில் ஏறி ஊர்வலம் வந்தே தரிசனம் தருகின்றான்
மஹா கணபதி விஜய கணபதி நிருத்த கணபதியே
ஏகாக்ஷர கணபதி ஊர்த்வ கணபதி வரகணபதியே
ஹரித்ரா கணபதி த்ர்யக்ஷர கணபதி ஸ்ருஷ்டி கணபதியே
ஏகதந்த க்ஷிப்ரப்ரஸாத உத்தண்ட கணபதியே
(வாசல் தேடி)

ஆண்டு தோறும் வி' நாயக சதுர்த்தி உற்சவம் உற்சாகம்
வாழ்வு தந்திடும் வேழ முகத்தோன் வருகை உல்லாசம்
மூன்று நாட்கள் வேண்டியிருந்தோம் இல்லத்தில் சந்தோஷம்
முடிவில் லாத கடலில் இறங்கும் காட்சி ஆனந்தம்

துண்டி, கணபதி த்விமுக கணபதி, ருணமோ சனனே
த்ரிமுக கணபதி, ஸிம்ம கணபதி, சங்கட ஹரனே
ஸித்தி புத்தி, த்ரைலோக்ய மோகன், ஸ்வர்ணா கர்ஷணனே
யோக கணபதி, துர்கா கணபதி, வல்லப கணபதியே

(வாசல் தேடி)



98. தோப்புக் கரணம்

தோப்புக் கரணம் போடுகிறேன் பிள்ளையாரே - என்னை
காக்க வேணும் கை கொடுப்பாய் - பிள்ளையாரே
ஆதி முதல் தெய்வம் நீ அல்லவா - என்னை
ஆதரிக்கும் அன்புத் தாயல்லவா
ஒன்னெ நம்பித் தானே நானிருக்கேன் - கொஞ்சம்
கண்ணெத் தொற சாமி பொழச்சுக்குவேன்
வா வா கணபதி வல்லப கணபதி
ஜெய் ஜெய் கணபதி செல்வக் கணபதி (தோப்புக் கரணம்)

ஆத்தோரம் பாத்து நல்ல அரசமர நெழலினிலே
காத்தாட அமர்ந்திருப்பாய் கணபதியே
தேரோடும் வீதியிலும் நீ தான் முன்னே - சின்ன
சின்ன தொரு சந்தினிலும் ஒன்னெக் கண்டேன்
மாடத்தில் கூடத்தில்
சாணத்தில் சந்தனத்தில்
மாளிகை வாசலில் ஏழைக் குடிசையில்
கோபுர உச்சியில் குளத்தங் கரையினில்
எங்கும் எதிலும் தங்கியிருப்பவன் நீ (தோப்புக் கரணம்)

வேண்டாம போனாக்க வெனை தானே - ஐயா உன
வெளெயாட்டு தெரியாதா எங்களுக்கு
மீண்டும் வந்து பாக்க வேணும் அப்பத்தானே - நாங்க
மீண்டு வர முடியும் அய்யா சரிதானே
எப்போதும் தப்பாது
நம்பிக்கை தும்பிக்கை
இரவிலும் பகலிலும் கனவிலும் நெனவிலும்
வரவிலும் செலவிலும் வாழ்விலும் தாழ்விலும்
இன்றும் என்றுமே அஞ்சேல் என்பவன் நீ (தோப்புக் கரணம்)

99. நவ சக்தி

நவசக்தி நாயகனே
நலம் யாவும் தருவோனே
நல்லோர்க்கு நல்லோனே
நவக்ரஹ நாயகனே (நவ சக்தி)

வேழ முகம் வெற்றிதரும்
கோலவிழி வாழ்வு தரும்
நீள் செவிகள் விசிறி விடும்
சோர்வுகளை நீக்கி விடும்
பாசமும் அங்குசமும்
பகையெல்லாம் முறித்து விடும்
மோதகம் இன்பம் தரும்
தந்தமோ சாந்தி தரும் (நவசக்தி)

பிள்ளையார் பட்டியிலே
பேசுகின்ற தெய்வம் நீயே
வெள்ளியிலே குடங்கள் செய்து
அபிஷேகம் அலங்காரம்
வலம்புரி தும்பிக்கைதான்
வருவோர்க்கு நம்பிக்கைதான்
நலம்புரி கற்பகமே
நாள்தோறும் அற்புதமே (நவ சக்தி)

100. நர்த்தன விநாயகா

வெற்றி விநாயகனே - நலந்தரும்
வேழ முகத்தவனே
பாதம் தூக்கும் விதம்
ராக பாவ நயம்
தாள மோடு லயம்
மோக மாகும் மனம்
தேர் வரும் ஊர்வலம் காண்பது போல் அழகே - உன்
ஆனந்த நாட்டியம் அற்புதமே சுகமே (வெற்றி விநாயகனே)

தாயவள் அபிநயம் தந்தையின் தாண்டவம்
சேர்ந்து கலந்தது நூதன மானது
நந்தியின் மேளம் நாரத கானம்
அரம்பையர் ஆடல் சலங்கைகள் கூடல்
தோளினில் நாகங்கள் நீளுது ஆடுது
பால்விழி ஆடிடுதே - அவன்
பார்வைகள் ஆயிரம் பாவனை கூறுது
காவியம் பாடிடுதே (வெற்றி விநாயகனே)

பார்வதி வந்தனள் பரமனும் வந்தனன்
வேலனும் வந்தனன் தேவர்கள் வந்தனர்
கணபதி நடனம் பாற்கடல் அமுதம்
அபயம் வரதம் நளினம் குலவும்
வானமும் வையமும் கோள்களும் யாவுமே
ஆடிடும் ஆடிடுமே - அவள்
தூக்கிய துதிக்கையும் வாழ்த்துக்கள் அளித்திடும்
காண்பது நம் தவமே (வெற்றி விநாயகனே)

101. என் கண்ணில் நீ

கண்ணில் வைத்துப் போற்றிடுவேன் - உந்தன்
காலில் வைத்து ஏற்றிடுவாய்
பண்ணில் வைத்து பாட்டிசைப்பேன் - எந்தன்
பாட்டைச் சற்றுக் கேட்டிடுவாய்
யானை வரும் முன்னேமணி ஓசை வருமே
தானாய் ஒரு பாடல் எழும் சந்தம் தருமே
பிள்ளை உந்தன் உள்ளந்தன்னில் கள்ளம் இல்லையே
கொள்ளை கொள்ளும் அன்புக் கொரு எல்லை இல்லையே
(கண்ணில் வைத்து)

மோதகம் தருவேன் பாயஸம் தருவேன்
கேள் என்ன வேண்டும் ஐயா
அவல் பொறி கடலை அப்பம் அதிரஸம்
வேறென்ன வேண்டும் ஐயா
நானொன்று கேட்பேன் தருவாயா
நீதான் வேண்டும் வருவாயா
என்றும் எந்தன் நெஞ்சில் வந்து கொஞ்ச வேண்டும் நீ தானே
தும்பிக்கையை தலைமேல் வைத்து வாழ்த்தவேண்டும் சரிதானே
(கண்ணில் வைத்து)

மாங்கனி பெறவே மயில்மேல் முருகன்
உலகம் சுற்றி வந்தான்
தாயை தந்தையை சுற்றிய நீயோ
வெற்றியை பெற்று விட்டாய்
யாவும் உணர்ந்த முழுமுதலே
ஞானம் உணர்த்தும் கணபதியே
நானும் நீயும் தேனும் பாலும் வானும் நிலவும் என்றிடவா
நாளும் உன்னைப் பாடிப்பாடி வையம் தன்னை வென்றிடவா
(கண்ணில் வைத்து)

102. கவசம்

சித்தி கணபதி சிரசினைக் காக்க
கஜகர்ண கணபதி செவியினைக் காக்க
ஞானேச கணபதி நாசியைக் காக்க
வல்லபை கணபதி வாயைக் காக்க

ஏக தந்தன் பல்லினைக் காக்க
மந்த்ர கணபதி உள்நா காக்க
ஆக்ஞா கணபதி அண்ணம் காக்க
நவநீத கணபதி நாவினைக் காக்க

சத்ய கணபதி உதடுகள் காக்க
சந்தன கணபதி மோவாய் காக்க
ஹரித்ரா கணபதி கன்னங்கள் காக்க
லக்ஷ்மி கணபதி நெற்றியைக் காக்க

வீர கணபதி விழியினைக் காக்க
பாலச் சந்திரன் புருவம் காக்க
வல்லால கணபதி இமைகளைக் காக்க
மந்தார கணபதி பின்புறம் காக்க

சாரதா கணபதி கழுத்தைக் காக்க
துர்கா கணபதி தோள்களைக் காக்க
யோகேஸ கணபதி மார்பினைக் காக்க
லம்போ தரனார் வயிற்றினைக் காக்க

கற்பக கணபதி கரங்களைக் காக்க
நர்த்தன கணபதி கால்களைக் காக்க
சண்டீஸ கணபதி இடையினைக் காக்க
துண்தி கணபதி தொடைகளைக் காக்க

புத்தீஸ் கணபதி புஜங்கள் காக்க
விக்ன காரகன் முழங்கை காக்க
க்ருஷ்ண கணபதி முன்கை காக்க
சக்தி கணபதி உள்ளங்கை காக்க

மோதவி நாயகன் முழங்கால் காக்க
கபிலவி நாயகன் கணுக்கால் காக்க
மஹா கணபதி குதிக்கால் காக்க
ஹேரம்ப கணபதி பாதங்கள் காக்க
வரதவி நாயகன் விரல்கள் காக்க
சுவேதவி நாயகன் குறிகளைக் காக்க
க்ஷிப்ரப்ர ஸாதனன் சித்தம் காக்க
பூரணா னந்தன் ஆவியைக் காக்க

சிந்தா மணியான் நந்தாமல் காக்க
தீவினை பிணிகள் கொந்தாமல் காக்க
போரும் பகையும் அண்டாமல் காக்க
சீரும் சிறப்பும் சிந்தாமல் காக்க

காக்க காக்க காக்க காக்க
கணபதிப் பெருமான் காக்க காக்க
காக்க காக்க காக்க காக்க
காக்க காக்க கவசமாய்க் காக்க



103. கணபதி மந்திரம் விநாயகா - வேலய்யா

ஓம்......... ஓம் .... ஓம்

கணபதி மந்திரம் பிரணவம் .... ஓம்......... ஓம்....... ஓம்....

எந்த

செயலையும் அதைச் சொல்லி தொடங்குவோம் ...... ஓம்.....

(கணபதி)

உயிர்க்குலம் அனைத்துமே ஓர் கணம் - அதை
இயங்கிடச் செய்யுமே விநாயகம்
பேருடல் யானைக்கு பெருமனம் - அது
யாரையும் தூக்கிடும் ஒரு கணம் - ஓம் (கணபதி)

சிவன், உமை சேர்ந்திட நேர்ந்தது - ஒரு
சித்திர வேழக்குட்டி பிறந்தது
அருள்தரும் தும்பிக்கை நீண்டது - ஓர்
ஆனந்தப் பேரின்பம் தோன்றுது - ஓம் (கணபதி)

ஒரு தரம் நினைத்தாலும் போதுமே - நம்
ஊழ்வினை யாவுமே ஓடுமே
கழலடி கை தொழ வரம் தரும் - அவன்
நிழலடி நிரந்தரம் சுகம் தரும் - ஓம் (கணபதி)

வலம் புரி கரத்தொடு அமர்ந்தவன்
வளம்தர நலம்தர வருகிறான்
பிள்ளையார் பட்டியில் தரிசனம்
அல்லல்கள் அகன்றன அதிசயம் - ஓம் (கணபதி)

104. அருட்பாதம்

ஒருகாலை மடித்து - அதை
படியாக்கி மிதித்து - ஏறி
உட்காரு மேலே என உணர்த்தும் - அன்பு
உறவாலே நம் உள்ளம் உருக்கும்
பெருயானை அதுபோலே
உருக்காட்டும் கணநாதா
திருவடிகள் காண வழிகாட்டு - என்
தீவினைகள் யாவையும் நீ ஓட்டு
ஒருகாலைத் தொடுத்து - என்னை
உயரத்தில் அமர்த்து

தினந்தோறும் துதித்து உன்
திருநாமம் ஜபித்து - என்
மனமாயை அது ஓய விடுத்து - நான்
குணமாக அறிவுதந்து திருத்து
கலைஞானம் மெய்ஞ்ஞானம்
சிவஞானம் எப்போதும்
நிறைவாகக் கொண்டுவந்து கொடுத்து - உன்
நினைவான சுகத்தினிலே இருத்து
ஒருகாலைத் தொடுத்து - என்னை
உயரத்தில் அமர்த்து

துதிக்கையை வளைத்து - சற்று
தூக்கியே அணைத்து - எனை
மதியாதார் தலைகுனிய வைத்து - உன்
அருகினிலே நானிருக்க அழைத்து
அறிவானந்தம் தந்து

அன்பு மோதகம் ஈந்து
சரியாமல் எனைத்தாங்கி நிறுத்து - உன்
சந்நிதியில் சேர்ப்ப துன்றன் பொறுப்பு
ஒருகாலைத் தொடுத்து - என்னை
உயரத்தில் அமர்த்து

105. விநாயக சதுர்த்தி விழா

விக்ன விநாயகன் பிறந்தநாள் கொண்டாட்டம்
எல்லோரும் வாருங்கள் - அந்த
வேழ முகத்தவன் தாள்மலர் போற்றியே
ஆடுங்கள் பாடுங்கள்
சக்தி கணபதி வாழ்க / நவ
சக்தி கணபதி வாழ்க

அக்ரமம் செய்கின்ற அரக்கர்கள் தொல்லையை
அகற்றிட வேண்டுமென்ற
அனைவரும் கூடியே சிவனருள் வேண்டிட
உமையவள் தந்த செல்வம்
ஆவணி மாதத்தில் வளர்பிறைக் காலத்தில்
சதுர்த்தி திதியினிலே
அவதாரம் செய்தனன் அல்லல்கள் தீர்த்தனன்
அநுக்ரஹம் தந்தனனே
சக்தி கணபதி வாழ்க - ஜெய
வெற்றி கணபதி வாழ்க

அப்பம் அவல்பொறி அதிரசம் மோதகம்
முக்கனி படைத்திடுவோம்
முத்தினம் இல்லத்தில் பக்தியுடன் வேண்டி
முறையாய் வழிபடுவோம்
மத்தள மேளங்கள் வாண வேடிக்கைகள்
நாதசுரம் முழங்க
சித்திரத் தேரினில் ஐயனை ஏற்றியே
ஊர்வலம் வந்திடுவோம்
மங்கள கணபதி வாழ்க - நம்
சங்கடங்கள் எல்லாம் தீர்க

106. யாவும் கை கூடும்

என்னதான் வந்தாலும் உன்னருள் இருந்தால்
தன்னால் சரியாகும்
முன்னவனே யானை முகத்தவனே என்றால்
எண்ணம் நிறைவாகும்
எதுவும் கை கூடும்
கணேசா...... கணேசா...... கணேசா

அன்னையில் கருப்பைக்குள் சுருண்டு கிடந்தது
உன் உருக் கொண்டல்லவோ
பின்னே இவ் வுலகில் என் பேச்சும் மூச்சும் உன்
பிரணவத் தாலல்லவா
கணேசா.......... கணேசா... கணேசா

(என்னதான்)

சின்னக் கருவிழி சிங்காரப் பார்வையால்
என்னை அருகழைப்பாய்
வண்ணப் பொற்பாதத்தை மடக்கி வழி காட்டி
உன்னோடு சேர்த்திடுவாய்
பண்ணிய பாவங்கள் பறந்தோட இருசெவியால்
புடைத்து துரத்திடுவாய்
அண்ணாந்த துதிக்கையால் ஆசிகள் கூறிடுவாய்
கண்ணாகக் காத்திடுவாய்
கணேசா...... கணேசா .... கணேசா. (என்னதான்)

107. வெற்றி மூர்த்தி

விக்னங்கள் அனைத்தும் சட்டென விலக்கும்
விநாயகன் திருப் பாதம்
நித்தமும் தொழுவோம் பக்தியைப் பொழிவோம்
அவன்தான் ஏழிசை கீதம்

சக்தியின் மைந்தன் சங்கரன் புதல்வன்
சண்முகன் தமையன் வாழ்க
சித்திகள் தருவான் புத்தியில் உறை வான்
நர்த்தன கணபதி வாழ்க

முக்கனி கொடுப்போம் முத்தமிழ் கேட்போம்
வக்ர துண்டனைப் போற்றி
எத்திசைச் செல்லினும் தருவான் கீர்த்தி
வெற்றி கணேச மூர்த்தி



108. யானை பலம்

தடைகள் எல்லாம் உடையச் செய்யும் தயாநிதி
தஞ்சம் என்றால் அஞ்சேல் என்பான் கணபதி

(தடைகள் எல்லாம்)

படையினிலே முன்னிற்பது யானை பலம்
பக்தி செய்வார் முன்னிற்பது வேழமுகம்
இடரெல்லாம் அவன் வந்தால் விலகிவிடும்
எம பயமும் அணுகாது ஓடிவிடும்
நலம் கூடிவிடும்

(தடைகள் எலாம்)

விளையாட்டாய் சிலநேரம் அவன் சிரிப்பான்
விநாயகனே என்றவுடன் அருள் சுரப்பான்
கணநாதன் எப்போதும் துணை இருப்பான்
கவலை எலாம் நீங்குதற்கு கை கொடுப்பான்
துதிக்கை கொடுப்பான்

(தடைகள் எலாம்)

109. வா, வா, கணபதி

கல்வி செல்வம் இரண்டையும் நல்கிடும்
கணபதியை தொழுவோம்
எல்லா உலகையும் வயிற்றினில் அடக்கிடும்
வல்லவனை பணிவோம் (கல்வி)

தீவினை மரத்தை வேரொடு பறிக்கும்
தூயவனின் துதிக்கை
வாழ்த்துக்கள் கூற வந்திடும் அதுவே
நல்லவர் நம்பிக்கை (கல்வி)

பொல்லா உலகம் இரண்டிரண் டானது
ஒன்றை முறி என்றே
நல்லதைக் காட்டிடும் ஒற்றைத் தந்தம்
பாரதக் கதை எழுதும் (கல்வி)

ஆசையின் கொடுமை அகற்றிடும் அங்குசம்
பாசம் அருகழைக்கும்
மோதகம் ஆனந்த சாகரம் ஆகிடும்
ஆசிக்கரம் காக்கும் (கல்வி)

110. கணபதியை எண்ணுக

ஒரு கொம்பு இரு செவிகள் மூன்று கண்கள்
நான்கு தோள் ஐந்து கரம் யானை முகம்
ஆறுபடை வீடு கொண்டோன்
அண்ணனே கணபதியே
எழு பிறவி நீக்க வந்தாய்
எட்டுத்திக்கும் போற்ற நின்றாய்
நவமணிகள் அருள்பவனே
நவசக்தி நாயகனே
விநாயகனே..... விநாயகனே

பூதமெனப் பெருவயிறு
தேவனென திருவடிகள்
வேழ முகம் கொண்டதனால்
விலங்கெனவும் நீ அமைந்தாய்
ஆணாக பெண்ணாக
அவதாரம் செய்தவனே
யாவுமே நானென்று
சொல்லாமல் சொல்பவனே
விநாயகனே .... விநாயகனே

பாசத்தால் எனை இழுத்து
பக்கத்தில் அழைக்கின்றாய்
அங்குசத்தால் என்னுடைய
ஆணவத்தை அழிக்கின்றாய்
நேசத் துதிக்கையால்
ஆசிகள் தருகின்றாய்
தந்தத்தால் என்னுடைய
தலை எழுத்தை மாற்றுகின்றாய்
விநாயகனே... விநாயகனே

111. அருங்கனி பெற்றவன்

அம்மையையும் அப்பனையும்
மும்முறைகள் சுற்றி வந்து
அருங்கனி பெற்றபிள்ளை - தலைப்பிள்ளை
அண்ட சராசரங்கள்
அத்தனையும் அவர்களுக்குள்
அடக்கம் என்ற பிள்ளை - நல்ல பிள்ளை
மூத்த பிள்ளை நம்மை காக்கும் பிள்ளை
முருகனுக்கு வாழ்வு தந்த அரிய பிள்ளை (அம்மை)

ராவணனை குட்ட வைத்து கோகர்ண சிவலிங்க
கோயில் அமைத்த பிள்ளை - குட்டிப்பிள்ளை
யானை குட்டிப் பிள்ளை
தோப்புக் கரணம் போட வைத்து
கஜா சூரனை வதைத்து
பேரெலி வாஹனத்தில் அமர்ந்த பிள்ளை -
பெரிய சுட்டிப் பிள்ளை (அம்மை)

கமண்டலம் கவிழவிட்டு காவிரி பெருக வைத்து
காக்கைபோல் வடிவு கொண்ட - கருணைப் பிள்ளை
கௌரி செல்லப் பிள்ளை
அகத்தியர்க்கு அருள்புரிந்து ஔவையை தெளியவைத்து
பாரதம் எழுத வந்த ஞானப் பிள்ளை -
ஓம் நாதப் பிள்ளை (அம்மை)

112. திருநாம மந்திரம்

பதினாறு திருநாமம் தினந்தோறும் அதிகாலை
பாராயணம் செய்வோம்
கணநாதன் புகழ்பாடி திருப்பாதம் மலர்தூவி
வினைதீர வழிகாணுவோம் - நம்
வினைதீர வேண்டி நிற்போம்
(பதினாறு)

எழு கோடி பெரு மந்த்ரம் பெருவயிற் றிலே அடக்கம்
எச்செயலை செய்தாலும் இவனை நினைந் தே தொடக்கம்
தவறாக மறந்தாலோ வருவது தானே முடக்கம்
தயை செய்து மன்னி என்றால் கேட்டதெல்லாம் கிடைக்கும்
(பதினாறு)

ஒரு கொம்பு இரு செவிகள் முக் கண்ணன் நால்வாயன்
ஐங்கரத்தால் அண்டமெல்லாம் ஆட்டிவைக்கும் அசகாயன்
அறுமுகனின் அண்ணனிவன் எழு பிறப்பும் களைந்திடுவான்
சரண் என்றால் எட்டிடுவான் துதிக்கையால் தொட்டிடுவான்
(பதினாறு)

113. உழவர் தோழன்

ஆற்றங்கரையினில்
அரச மரத்தடி
அமர்ந்த பிள்ளை யாரோ
வாட்டத்தைப் போக்கிட
கேட்டதைக் கொடுத்திட
வந்த பிள்ளை யாரோ?
அன்புப் பிள்ளை யாரோ....? நம்
ஆசைப் பிள்ளை யாரோ.....?
பிள்ளையார்? பிள்ளையார்? பிள்ளையார்! (ஆற்றங்கரையினில்)

நாற்று நடு முன்னே நல்ல விளைச்சலை
கேட்பது யாரிடமோ - எதிர்
பார்ப்பது யாரிடமோ
காற்று மழையிலும் கழநிக் கதிர்களை
காத்திட யார் வருமோ - களம்
சேர்த்திட யார் வருமோ
பிள்ளையார்! பிள்ளையார்! பிள்ளையார்! (ஆற்றங்கரையினில்)

காட்டு வெளியினில் கள்ளர் பயம் அதை
ஓட்டிட யார் வருவார்? - வழி
காட்டிட யார் வருவார்?
வீட்டிலும் நாட்டிலும் வேண்டியதைத் தந்து
வெற்றி விளைப்பது யார் - நம்மைப்
பற்றி அணைப்பது யார்?
பிள்ளையார்! பிள்ளையார்! பிள்ளையார்! (ஆற்றங்கரையினில்)

114. உயர்வு தாழ்வு பாராதவர்

பிடிச்சு வச்ச பச்சை மண்ணிலும்
பிள்ளையார் வந்து அமர்வார்
குழைத்துவைத்த மஞ்சள் சாணத்தில்
கொள்ளைப் புன்னகை புரிவார்

(பிடித்து வச்ச)

எடுத்துக் கோத்த நவமணி மாலையை
ஏற்றுக் கொண்டு வீற் றிருப்பார்
எருக்கம் பூவையும் அருகம் புல்லையும்
மாட்டிக் கொண்டு அவர் சிரிப்பார்

(பிடித்துவச்ச)

முக்கனி சர்க்கரை மோதகம் பாயஸம்
அப்பமொ டவல்பொறி உண்பார்
கொத்துக்கடலை வெறும் சுண்டலே எனினும்
கொடுத்திடும் அப்பனே என்பார்

(பிடித்து வச்ச)

கோயில் கட்டியே கும்பிடு வோர்க்கெல்லாம்
வாரி வழங்கிட வருவார்
ஏழை வேண்டினால் வெட்ட வெளியிலும்
இருந்திட சம்மதம் தருவார்

(பிடித்த வச்ச)

115. முழுமுதற் பொருள்

மூவரும்.............
தேவரும்..............
யாவரும் போற்றும்
முழுமுதற் கடவுள் கணபதி
ஓம் எனும் ப்ரணவ ஒலியே வடிவாய்
வாழ்த்த வருகின்ற குணநிதி
(மூவரும்)

யானை முகம் ஓர் ஐந்துகரம்
ஆவணி சதுர்த்தியில் அவர் தோற்றம்
பார்வதியின் வேல் விழிப் பார்வை
பட்டதுமே அவர் அவதாரம்
(மூவரும்)

எம்மதமும் அவர்க்கு சம்மதமே
எல்லா உலகும் அவர் இருப்பிடமே
எக்கணமும் உடன் எழுந்தருளும்
பக்திக்கு ஆட்படும் பரவசமே (மூவரும்)

116. அன்பு முகம்

அன்பு முகம் அது யானை முகம் - அந்த
ஆறுமுகன் அவன் அண்ணன் எனும்
சங்கரனார் பெற்ற தங்கமகன் - சுப
மங்களம் தந்திட வந்தமகன்
(அன்பு முகம்)

தும்பிக்கையில் ஒரு நம்பிக்கையை - நெஞ்சில்
தூவிடும் ஆசிகள் கூறிடுமே
எந்தத் தொழில் அதைச் செய்திடினும் - தன்னை
எண்ணிடும் அன்பரைக் காத்திடுமே
(அன்பு முகம்)

தந்தையும் தாயுமே உலகம் என - தன்
தம்பிக்கும் யாவர்க்கும் ஓதினனே
சுந்தர மாம்பழம் ஏந்தினனே - நம்
சோதனைக் காலத்தில் தாங்கினனே
நாயகனே - வி
நாயகனே - கண
நாயகனே - வி
நாயகனே (அன்பு முகம்)

117. பிள்ளையார் பெருமைகள்

சிவன் எனும் இன்பமும் சக்தியாம் அன்பும்
சேர்ந்து கலந்த முகம்
ப்ரணவ ஓம் வடிவம் துதிக்கையால் உணர்த்தும்
அருள் மயம் விநா...... யகம்

(சிவன் எனும்)

அமுத கலையாம் வரம்பிலா ஆனந்தம்
பிறை நிலா.......... குறிக்கும்
ஒளிஉரு என்பதை சந்திரன், கதிர், தீ
முக்கண்கள் உரைக்கும்

(சிவன் எனும்)

அடங்கா ஆணவம் அங்குசம் அடக்கும்
பாசம் அரவணைக்கும்
அரவம் கச்சு மாயையை கட்டும்
இருளெனும் எலி அடங்கும்

(சிவன் எனும்)

குழந்தையின் குறுங்கால் பூத வயிறு
விலங்கின் பெருவதனம்
தேவனின் கரங்கள் கூடிய மேனி
யாவும் தான் என்னும்

(சிவன் எனும்)

118. கேசாதி பாத வருணனை

அடி பணியும் அடியவரை
முடியதனின் மேல் வைத்து
ஆதரிக்கும் யானை முகம்
சடை முடியும் பிறை நிலவும்
சங்கரனை நினைவுறுத்தும்
சச்சிதானந்தமயம் - ஓம் சச்சிதானந்தமயம்

(அடி பணியும்)

ஞானமெனும் மதம் ஒழுகும் மாபெரிய கன்னமொடு
தீ, நிலவு, கதிர்க்கண்களும்
பாழ்வினையை அகற்றுகின்ற தாழ்செவியும், ஏடெழுதும்
தந்தமும் கொண்ட வதனம் - அது
சாந்தமெனும் பூங்காவனம்

(அடி பணியும்)

படைப்பது பாசம் அதை அழிப்பது அங்குசம்
பயம் நீக்கும் அபயக்கரம்
அருளின்பம் தரும் கரமோ, மோதகம் ஏந்திவரும்
தும்பிக்கை மறைக்கும் திறம்
குண்டலி தரிசனம் சர்ப்பங்கள் ஆபரணம்
தொந்தியில் அண்டம் அடங்கும்
தண்டை ஒலி திருவடிகள் தொண்டர்களின் மனம் குளிர
தன்பக்கம் சேர்த்துக் கொளும் - மோட்ச
சாம்ராஜ்யம் அதனைத் தரும்

(அடி பணியும்)

119. கணபதி வடிவங்கள்

கந்தனுக்கு முன் பிறந்த கற்பத்தின் பொற்பதம்
சிந்தை தன்னில் வைத்தவர்க்கு என்றும் இல்லை ஒரு பயம்
கங்கை கொஞ்ச வந்து நிற்கும் கணபதியின் திருமுகம்
கண்டு கொண்ட அன்பருக்கு மங்களங்கள் பொங்கிடும்

(கந்தனுக்கு)

கரங்கள் ஐந்தும் பழங்கள் ஏந்தும் குழந்தை பால கணபதி
கதிரும் கரும்பும் தாங்கி நிற்கும் இளைஞன் தருண கணபதி
வசந்த கால நிலவின் வண்ணம் வழங்கும் பக்த கணபதி
கிளியின் மழலை அருகில் தேவி கல்ப சக்தி கணபதி

(கந்தனுக்கு)

உச்சிஷ்ட துவிஜ ஊர்த்வ ப்ரஸன்ன சித்தி மஹா கணபதி
ந்ருத்த ஹேரம்ப ஷிப்ர ஹரித்ர ஏக தந்த கணபதி
சிம்ம யோக க்ஷிப்ரப்ரஸாத ரணமோசன கணபதி
சங்கட ஹர, ஏகாட்சர துண்டி த்விமுக கணபதி

(கந்தனுக்கு)

வீரம் மும்முகம் புவனேஸ்வரம் லக்ஷ்மி, துர்கா, கணபதி
த்ரியாட்சரம் உன்மத்தம்பிங்களம் வரம்தருகின்ற கணபதி
சித்தி புத்தி வல்லபையோடு சேர்ந்து களிக்கும் கணபதி
முப்பத்திரண்டு வடிவம் காட்டும் மோஹன மதுர கணபதி

(கந்தனுக்கு)

120. விநாயக சதுர்த்தி விழா

மேளங்கள் தாளங்கள் நாதசுரம் நாட்டியங்கள்
கோலாட்டம் கொண்டாட்டமே - ஐயா
நீ பிறந்த நாளினிலே ஊர்கோலம் உல்லாசம்
தேர்முன்னே சிலம்பாட்டமே
சந்தோஷம் சதிராடுதே - பிள்ளையார்
சதுர்த்தி திருநாளிதே
(மேளங்கள்)

விதம் விதமாய் புத்தாடை வெள்ளமென கூட்டம் - உனை
வேடிக்கை பார்ப்பதிலே எல்லோர்க்கும் நாட்டம்
சின்ன விழியதில் மின்னும் சுடரொளி தீபங்களைவெல்லும் - உந்தன்
வண்ணப் பெருஞ்செவி ஆடும் அழகது உள்ளம் கொள்ளை கொள்ளும்
தும்பிக்கை தூக்கிடுவாய்
அன்போடு வாழ்த்திடுவாய்
நம்பிக்கை ஊட்டிடுவாய்
நலம் யாவும் சேர்த்திடுவாய்
நீ அசைந்தசைந்து வருகையிலே ஆனந்தம் ஆனந்தமே
(மேளங்கள்)

தலைவாழை இலைபோட்டு அறு சுவையில் விருந்து - நீ
தலையாட்டி மோதகங்கள் கொழுக்கட்டை அருந்து
வெல்லம் அவல் பொறி அப்பம் அதிரசம் வெண் பொங்கலும்
உண்டு - நல்ல
வீணையின் இன்னிசை வேய்ங் குழல் பண்ணிசை ஆடல்
பாடல் கண்டு

மூன்றாம் நாள் சென்றிடுவாய்
ஆண்டாண்டு வந்திடுவாய்
வேண்டிடுவார் வீட்டினிலே
விளக்கேற்றி வைத்திடுவாய்
உன் அருளாசி அதுபோதும் ஆனந்தம் ஆனந்தமே

(மேளங்கள்)

121. ஊர்தொறும் விநாயகர்

சந்திர காந்தக் கல்லில் உந்தன்
விந்தைநிறம் கண்டேன்
வெள்ளை கருப்பாய் மாறும் அதிசய
நாயகனைக் கண்டேன்
விநாயகனைக் கண்டேன்

கேரள புரத்தில் உன்னைத் தொழுது
சுசீந்திரம் வந்தடைந்தேன்
நீல கண்டப் பெரிய பிள்ளையாரை
நேரில் தரிசித்தேன்

கடல் வெள்ளை நுரையால் அமைந்த தேவனை
வலஞ் சுழியில் பார்த்தேன்
மதுரை மீனாட்சி கோயிலில் முக்குறுணி
வடிவத்தில் மெய் மறந்தேன்

பிள்ளையார்ப் பட்டிக் குகையினில் உந்தன்
பேர் சொல்லும் திறம் கேட்டேன்
திருச்சி மலைக்கோட்டை உச்சியில் உந்தன்
சிங்காரக் கோலம் கண்டேன்

சுந்தரர் பொன்னுக்கு மாற்று உரைத்த
கணபதியின் லீலை
திருமுது குன்றிலும் திருவாரூரிலும்
சேர்ந்திருக்கக் கண்டேன்

122. உச்சிஷ்ட கணபதி

உச்சிஷ்ட கணபதி உன் உபாசனை மேற்கொண்டால்
ப்ரத்யட்ச மாகி நிற்பாய்
ஓங்கார ப்ரணவமே ஆனந்த சாகரமே
நீங்காது துணை இருப்பாய் துயர் தடுப்பாய்
(உச்சிஷ்)

இச்சை கொண்ட பொருள் எதுஎனினும் தருவாய்
ஏக்கம் நீக்கிடுவாய் - உன்
எச்சிலும் அமுதமாய் இனித்திடக் கண்டவர்கள்
இதயத்தில் இடம் பிடிப்பாய்

குச்சுக் குடிலையும் மச்சுவீ டாக்குவாய்
கோபுரத்தில் வைப்பாய் - உன்
பிச்சை ஏற்பவர்கள் பெரும் செல்வக் கோமான்கள்
சத்தியம் சொன்னேன் ஐயா - உன்
சக்தியைச் சொன்னேன் ஐயா
(உச்சிஷ்ட)

கருநீலத் திருமேனி பசுநீலப் பட்டாடை
தலையினில் மலர்கிரீடம்
மடியினில் ஒருமாது அவளுடன் சல்லாபம்
துதிக்கை அணைத்திருக்கும்

சிற்றின்பம் சிலநாள்தான் பேரின்பம் பருகுவதற்கு
பற்றுக எனை என்பாய் - நீ
சுற்றிடும் ஜபமாலை சொல்லிடும் ரகசியங்கள்
முக்திக்கு வழி வகுப்பாய்
(உச்சிஷ்ட)

123. கணபதி க்ஷேத்திரங்களும் திருநாமங்களும்

தென்----மதுரையில் சிதிதிவி நாயகர்
திருநள் ளாற்றில் சொர்ண விநாயகர்
திருவை யாற்றில் ஆதி விநாயகர்
திருக்கட வூரில் கள்ள வாரணர்
(தென் மதுரையில்)

காஞ்சி புரத்தில் விகட சக்கரர்
காசி நகரிலே டுண்டி விநாயகர்
திருச்செந்தூரில் தூண்டு கையார்
திருவா வடுதுறை துணை விநாயகர்
(தென் மதுரையில்)

திருமறைக் காடு சிந்தாமணி கணபதி
திருமழ பாடி சுந்தர கணபதி
குமார வயலூர் பொய்யா கணபதி
கும்ப கோணத்தில் காங்கை கணபதி

முருகன் பூண்டியில் கூப்பிடு விநாயகர்
நாட்டியத் தான்குடி கைகாட்டி விநாயகர்
கொட்டை யூரிலே கோடி விநாயகர்
அன்பில் ஆலந்துறை செவிசாய்தத நாயகர்

திருக்கா றாயில் கடுக்காய் விநாயர்
திருக்கச் சூரில் சருக்கடி விநாயகர்
சிதம் பரத்தில் கற்பக விநாயகர்
திருவிடை மருதூர் ஆண்ட விநாயகர்

விருத்தா சலத்தில் ஆழப் பிள்ளையார்
திருச்சிராப் பள்ளியில் உச்சிப் பிள்ளையார்
திருவேதி குடியில் வேதப் பிள்ளையார்
திருவலஞ் சூழியில் வெள்ளைப் பிள்ளையார்

திருவா ரூரில் மாற்று ரைத்தவர்
நாகையி லேஅவர் மாவடிப் பிள்ளையார்
சீர்கா ழியிலே ஆபத்துக் காத்தவர்
திருநாரை யூரில் பொல்லாப் பிள்ளையார்

திருசெங் காட்டங்குடி வாதாபி கணபதி
பிள்ளையார் பட்டியில் வலம்புரி கணபதி
மயிலாப்பூரில் நவசக்தி கணபதி
வல்லம் வந்தால் வரசித்தி கணபதி

திருநல் லூரில் சாளக்ராமம்
திருந்து தேவன்குடி கர்க் கடகம்
மாயூ ரத்தில் மயூரேசம்
காளத் தியிலே மஞ்சஞ்சி விநாயகம்

திருஇன் னம்பர் நர்த்தன விநாயகர்
திருவீழி மிழிலை படிக்காசு விநாயகர்
கதிர்கா மத்தில் மாணிக்க விநாயகர்
கோகர் ணத்தில் மஹா கணபதி

செல்லும் இடமெல்லாம் செல்வ கணபதி
இல்லாத இடமில்லை எங்கும் கணபதி
தொல்லை நீக்கிநமைக் காக்கும் கணபதி
அல்லும் பகலும் நீ அவரையே துதி

124. எங்கும் நிறைந்தவன்

திருவை யாற்றிலே ஆதி விநாயகர்
சீர்காழியிலே ஆபத்துக் காத்தவர்
திருக்கட வூரிலே கள்ள வாரணர்
திருநள் ளாற்றிலே சொர்ண விநாயகர்

காசி நகரிலே டுண்டி விநாயகர்
காஞ்சி புரத்திலே விகட சக்கரர்
மதுரைமா நகரிலே முக்குறுணித்தேவர்
முருகன் பூண்டியில் கூப்பிடு விநாயகர் (திருவை)

விருத்தா சலத்தினில் ஆழத்துப் பிள்ளையார்
திருச்சிராப் பள்ளியில் உச்சிப் பிள்ளையார்
காளையார் கோயிலில் கடுக்காய்ப் பிள்ளையார்
திருமா காளம் படிக்காசுப் பிள்ளையார்

திருவலஞ் சுழியிலே வெள்ளை வாரணர்
திருவா ரூரில் மாற்று ரைத்தவர்
திருநாரை யூரில் பொல்லாப் பிள்ளையார்
நாகையி லேஅவர் மாவடிப் பிள்ளையார்

திருமழ பாடியில் சிந்தூர கணபதி
கீழ்வே ளூரில் சுந்தர கணபதி
திருஇன் னம்பர் நர்த்தன கணபதி
கும்பகோ ணத்திலே கங்கை கணபதி

பிள்ளையார்ப் பட்டியில் கற்பக கணபதி
டிண்டிவா லாவினில் கல்யாண கணபதி
திருந்துதே வன்குடி கற்கட கணபதி
தேனாம் பேட்டையில் சக்கர கணபதி (திருவை)

செங் காட்டாங்குடியிலே வாதாபி கணபதி
திரு மயிலாபுரி நவசக்தி கணபதி
வல்லத்திலே அவர் வரசித்தி கணபதி
செல்லும் வழியெல்லாம் செல்வ கணபதி

கண்கண்ட இடமெல்லாம் கணபதி கணபதி
காணாத இடத்திலும் கணபதி கணபதி
எங்கெங்கும் கணபதி ஏகாந்த கணபதி
நெஞ்சினில் கணபதி நினைவினில் கணபதி

கணபதி கணபதி கணபதி கணபதி
கணபதி கணபதி கணபதி கணபதி

125. எண்ணும் எழுத்தும் நீ

எழுதத் தொடங்கு முன்னே சுழிஒன்று போட்டேன்
நீதான் வடிவெடுத்தாய்
எண்ணங்கள் கவியாக இசையாக பாட்டாக
நீயே சொல் கொடுத்தாய்
வேழமுகத்து விநாயகனே-என்
நாவினில் நடம்புரி நாயகனே - நான்
(எழுதத் தொடங்கு முன்னே)

பழுதின்றிச் செயல்முடிய பதமலர் தொழுது வந்தேன்
எதிலும் வெற்றி ஐயா
முழுமுதலே உன்னை முற்றும் நம்பிய பின்
பயமே இல்லை ஐயா
வேழமுகத்து விநாயகனே-என்
நாவினில் நடம்புரி நாயகனே - நான்
(எழுதத் தொடங்கு முன்னே)

கணபதி பூஜை செய்தால் காரியம் கைகூடும்
அநுபவம் ஆனதய்யா
கால காலம் எங்கள் முன்னோர்கள் கண்டபலன்
கண் கண்ட தெய்வம் ஐயா
வேழமுகத்து விநாயகனே-என்
நாவினில் நடம்புரி நாயகனே - நான்
(எழுதத் தொடங்கு முன்னே)

தும்பிக்கை ஆழ்வாரென வைணவமும் போற்றும்
உலகெங்கும் உன் ஆட்சி
ஐந்து சமயங்களும் அடுத்த மதமும் கூட
வந்தனை செய் மாட்சி
வேழமுகத்து விநாயகனே-என்
நாவினில் நடம்புரி நாயகனே - நான்
(எழுதத் தொடங்கு முன்னே)

126. திரு உருவ கணபதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே

மூல முழுமுதலே மூஷிக வாஹனனே
முக் கண்ணன் மகனே சித்தி விநாயகனே
ஆறுமுகக் கடவுள் அண்ணனே ஐங்கரனே
வேழ முகத்தோனே வினைகள் தீர்ப்பவனே

பால கணபதி தருண கணபதி பக்த கணபதியே
வீர கணபதி விஜய கணபதி சக்தி கணபதியே

பார்வதி பாலகனே பாரதம் படைத்தவனே
தாமரை பீடத்திலே தரிசனம் அளிப்பவனே
ஓம் எனும் ப்ரணவமாய் உரு எடுத்தவனே
மோதகம் உண்பவனே முத்தமிழ் வித்தகனே

சித்தி கணபதி உச்சிஷ்ட கணபதி க்ஷிப்ர கணபதியே
விக்ன கணபதி ஹேரம்ப கணபதி லக்ஷ்மி கணபதியே

கள்ள வாரணனே கங்கை வளர்த்தவனே
பொல்லாப் பிள்ளையென நல்லது செய்பவனே
அள்ளிக் அள்ளிக்கொடுக்கும் செல்வ விநாயகனே
உள்ளம் உருகி நின்றால் எல்லாம் தருபவனே

நிர்த்த கணபதி த்வஜ கணபதி மஹா கணபதியே
ஊர்த்வ கணபதி ஏகாக்ஷர கணபதி த்ரயக்ஷர கணபதியே

தும்பிக்கை கொண்டவனே நம்பிக்கை தந்தவனே
தொந்தி வயிற்றினிலே அண்டம் உண்டவனே
தஞ்சம் எனவந்தால் அஞ்சேல் என்பவனே
மஞ்சளிலே மணக்கும் அன்பு மனத்தோனே

ஹரித்ரா கணபதி வரகணபதி ஸ்ருஷ்டி கணபதியே
ஏகதந்த க்ஷிப்ரப்ரஸாத உத்தண்ட கணபதியே

பிள்ளையார்ப் பட்டியிலே கற்பகப் பெருமானே
திருச்சிராப்பள்ளி உச்சி மலைத் தேனே
உலகம் முழுவதுமே உலா வருபவனே
உள்ளக் குகையினிலும் ஒளியாய்த் திகழ்பவனே

துண்தி கணபதி த்விமுக கணபதி த்ரிமுக கணபதியே
ருண மோசன சிம்ஹ கணபதி யோஹ கணபதியே

கானம் கேட்பவனே கலா... விநோதனே
மானம் காப்பவனே மங்களம் அருள்பவனே
ஞானம் கொடுப்பவனே நற்கதி சேர்ப்பவனே
பாதம் சரணமய்யா நவசக்தி நாயகனே

சங்கடஹர.... ஸித்திபுத்தி வல்லப கணபதியே
ஸ்வர்ணா கர்ஷண த்ரைலோக்ய மோஹன துர்கா கணபதியே
ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி எளியோர்க்கும்

127. எளியோர்க்கும் எளியவர்

(தன்னனானனா தானனானனா மெட்டு)

ஆற்றங் கரையிலே
தோப்புத் துரவிலே
வாட்ட சாட்டமாய் வாராரையா
யாரவர் பாரு பிள்ளை யாரு
அரசமரம் தேடி வாராரையா (ஆற்றங்கரையிலே)
மாட மாளிகை
ஏழைக் குடிசைகள்
எதுஎன்றாலும் சரியென்பார்
கூழும் உண்பார் லட்டும் உண்பார்
கொழுக்கட்டை மோதகம் ஜோர் என்பார்
(ஆற்றங்கரையிலே)

தங்கத் தேரிலே
தங்க கணபதி
அங்கம் அசையவே வாராரையா
சந்தி முனையிலே
வந்து தங்கவும்
சம்மதம் என்பார் வாராரையா (ஆற்றங்கரையிலே)
யானை உருவிலே
பானை வயிற்றொடு
ஞான கணபதி வாராரையா
சாணம் களிமண்ணு
மஞ்சள் சந்தனம்
எதிலும் தங்குவேன் என்பாரையா.
(ஆற்றங்கரையிலே)

எந்த மதத்திலும்
தும்பிக் கையனார்
முந்தி முந்தியே நின்றாரையா
எந்த ஊரிலும்
எந்த நாட்டிலும்
இல்லாத இடமில்லை என்றாரையா
(ஆற்றங்கரையிலே)

சின்னப் பிள்ளையும்
இவரைக் கண்டதும்
சிரித்து மகிழவே வாராரையா
தன்னை வணங்குவார்
என்ன கேட்பினும்
வாரிக் கொடுக்க வாராரையா (ஆற்றங்கரையிலே)
உச்சிப் பிள்ளையார்
ஆழப் பிள்ளையார்
மெச்சும் பிள்ளையார் வாராரையா
அச்சம் நீங்கவே
அன்னை யாகவே
சக்தி மைந்தனார் வாராரையா (ஆற்றங்கரையிலே)

ஆட்டம் ஆடுவார்
பாட்டுப் பாடுவார்
ஆனந்த மயந்தான் பிள்ளையார்
பார்க்கப் பார்க்கவே
பரவச மாகுது
பாதம் காட்டுவார் பிள்ளையார் – திருப்
பாதம் காட்டுவார் பிள்ளையார்!

128. ஹேரம்ப கணபதி

பஞ்சமுக கணபதியை தஞ்சம் அடைந்தேன்
அஞ்சுதல் நீங்கிமன ஆறுதல் பெற்றேன்
தங்கநிறப் பட்டாடை சிங்க வாஹனம்
வெள்ளிப்பனி வண்ணமேனி சுழல் மோஹனம்
(பஞ்சமுக)

பாசக் கயிறு கொண்டு பற்றி இழுத்தான்
பாவப் புதர்களை வெட்டி எறிந்தான்
கோடரி,சுத்தி,அங்குசம் ஏந்தி நின்றான்
தந்தத்தால் தலைஎழுத்தை மாற்ற வந்தான்
(பஞ்சமுக)

ஜபமாலை காட்டுகின்றான் சிந்தனை செய்ய
திருவடி காட்டுகின்றான் வந்தனை செய்ய
ஸ்கந்தகிரி ஹேரம்பன் துன்பம் களைவான்
சாந்திஎன அருளாசி தந்திடுவான்......
(பஞ்சமுக)

129. வீர கணபதி

கண்ணிரண்டும் கனல் தெறிக்கும்
காதுகளில் தீப்பறக்கும்
பன்னிரண்டு கைகளிலும் ஆயுதங்கள் - அவன்
தும்பிக்கையும் தொடுக்கும் போர்ச்சரங்கள்

வீர விநாயகன் சாகஸம் ஆயிரம்
வெற்றி விழாவிற்கு கட்டுக தோரணம்
பாடுக பாடுக வாழ்த்துப் பாயிரம்
ஆனந்தக் கூத்து ஆடுக யாவரும் (கண்ணிரண்டும்)
துக்கங்கள் தீர்வதற்கு சுற்றுகிறான் சக்கரத்தை
தூக்கங்கள் போவதற்கு நீட்டுகிறான் கத்தியினை
வினைகளை நீக்குதற்கு வில்லம்பு பூட்டுகிறான்
வேடிக்கை காட்டுதற்கு பாம்பினை ஆட்டுகிறான்

வீரவிநாயகன் சாகஸம் ஆயிரம்
வெற்றி விழாவிற்கு கட்டுக தோரணம்
பாடுக பாடுக வாழ்த்துப் பாயிரம்
ஆனந்தக் கூத்து ஆடுக யாவரும் (கண்ணிரண்டும்)
சக்தி பேதாளம், சுத்தியும், கோடாரியும்
கலப்பையும், ஈட்டியும், பகையினை ஓட்டிவிடும்
தண்டம், திரிசூலம், கதா--- யுதமும் தோன்றி
எந்தக் குறையும் இன்றி அக்கரையில் சேர்த்துவிடும்

வீரவிநாயகன் சாகஸம் ஆயிரம்
வெற்றி விழாவிற்கு கட்டுக தோரணம்
பாடுக பாடுக வாழ்த்துப் பாயிரம்
ஆனந்தக் கூத்து ஆடுக யாவரும் (கண்ணிரண்டும்)

130. மஹா கணபதி

செக்கச் சிவந்த திருமேனி
செந்தூரப் பூ...... வண்ணம்
கற்பக மரத்தடி பொற்பாத கமலங்கள்
எத்தனை சௌந்தர்யம்
மகா கணபதிநின் சந்நிதானம்
சதா அருள் புரியும் பொன்விதானம் (செக்கச் சிவந்த)
பத்மா சனக்கோலம் ஆனாலும் மடியினில்
சக்தி வீற்றிருப்பாள்
பத்துக் கரங்களிலும் ஆயுதம் தாங்கிய உன்
வெற்றியில் பூரிப்பாள்
நெற்றிப் பிறை தவழ முக்கண் கனல் உமிழ
சுற்றிலும் தேவகணம்
எப்போதும் மலர்முகம் தப்பாது கொடுத்திடும்
முப்போதும் வழிபடுவோம்
மகா கணபதியின் சந்நிதானம்
சதா அருள் புரியும் பொன்விதானம் (செக்கச் சிவந்த)
நெற்கதிர் தானியம் செம்மா துளம்பழம்
கரும்பு சுவை மோதகம்
அப்பமோ டவல்பொறி ஆயிரம் தின்பண்டம்
வைத்தோம் நிவே.....தனம்
ரத்தின கலசம் கதைவில் சூலம்
செவ்வல்லி தாமரை யுடன்
சக்கரம் தந்தம் பாசம் ஏந்திடும்
வித்தகா விநாயகா......
மகா கணபதிநின் சந்நிதானம்
சதா அருள் புரியும் பொன்விதானம் (செக்கச் சிவந்த)

131. க்ஷிப்ர கணபதி

க்ஷிப்ர கணபதி
செல்வ கணபதி
ரத்ன கும்பம் ஏந்தி நிற்கும்
அன்பு கணபதி
(க்ஷிப்ர கணபதி)

சப்தகோடி மந்திரம் அங்கங்கள் ஆகுமே
சாபம் பாபம் யாவும்நின் பார்வையால் தீருமே
நிச்சயம் ஜெயம்எனும் நிலை..... உண்டாகுமே
நிகரிலா பெரும் செல்வம் தன்னால் வந்து சேருமே

ஒற்றைத் தந்தம் கொண்டு நீ
எழுதுவாய் பாரதம்
உன்னைப் போற்றும் மந்திரம்
ஈடேறும் மனோரதம் (க்ஷிப்ர கணபதி)

நீயே தான் பரப்ரம்மம் ப்ரம்மாண்டம் அனைத்துமே
மூலா..... தாரத்தில் மூண்டெழுந்த சர்ப்பமே
யாகமே யோகமே ஞானமே த்யானமே
தேவன்,மனிதன்,விலங்கு சேர்ந்த சித்திர விசித்ரமே

எங்கும் உந்தன் ஆலயம்
இதயத்தில் நீ லயம்
மங்களங்கள் தந்திடும்
சுந்தர மனோகரம்

132. மோனம் அசைந்தது

மோனம் அசைந்தது நாதம் இசைந்தது
ஓம் எனும் சுக ராகம்
ஆதார ஸ்ருதி அது யானை முகத்தொடு
தோன்றிய அவதாரம்
செல்வ கணபதி வாழ்க – முதல்
சித்திரக் கற்பகம் வாழ்க (மோனம்)

குங்கும வண்ணமும் கொடுத்திடும் எண்ணமும்
கொண்ட திருமேனி
மங்கள மதிமுகம் சங்கடம் தீர்த்திடும்
கரை சேர்க்கும் தோணி
அங்குச பாசங்கள் ஆணவம் அழித்திடும்
வரம் அபயம் தரும்
தங்கக் கரத்தினில் மோதகம் சாதகம்
இன்பநிலை வழங்கும்
அன்பு கணபதி வாழ்க – அந்த
ஆதிச் சுடரொளி வாழ்க (மோனம்)

சின்னக் கருவிழி விண்ணை அளந்திடும்
நெற்றிக் கண் ஞானம் தரும்
தீயவை அகற்றிடும் இருசெவி விசிறிகள்
தந்தம் கவி எழுதும்
அண்டங்கள் அனைத்தும் வயிற்றில் அடங்கிடும்
அமுதம் ஏந்தி வரும்
தும்பிக்கை எப்போதும் நம்பிக்கை தந்திடும்
துயரெனும் பனி விலகும்
சக்தி கணபதி வாழ்க – அந்த
சாந்த குணநிதி வாழ்க (மோனம்)

133. ஆதிமுதலே

ஆதி முதலே அன்பின் நிறைவே
ஜோதி வடிவே தூய மறையே
ஓமெனும் ப்ரணவ உருவே திருவே
தாள்மலர் சரணம் உந்தன் தாள்மலர் சரணம்
(ஆதிமுதலே)

ஞானம் என்னும் ஏணியில் ஏற
மோதகம் ஊட்டும் முக்கண் சுடரே
தீ வினை அகற்றும் விசிறிச் செவிகள்
செல்வம் நல்கும் கற்பகக் களிறே (ஆதிமுதலே)

தேகத்தின் மூலம் தேவனைத் தேட
மூஷிக வாகனம் சூட்சுமம் சொல்லும்
சோகம் நீக்கும் தூக்கிய துதிக்கை
சுந்தர ரூபம் மங்களம் நல்கும் (ஆதிமுதலே)

ஏழிசை கீதம் நானுனைப் பாட
எழுத்தும் சொல்லும் நின்புகழ் பேச
நாளும் பொழுதும் உன்னையே நினைக்க
வாழ்வு முழுவதும் வணங்கித் துதிக்க

புத்தி தந்திடு பக்தி தந்திடு
சக்தி தந்திடு சாந்தி தந்திடு
செல்வம் தந்திடு சீர்கள் தந்திடு
நல்லன எல்லாம் தந்திட வந்திடு (ஆதிமுதலே)

பாரதிய பாடிய மணக்குள விநாயகர்
பாண்டிச் சேரிதனிலே
தேவ னூரில் பொய்யா விநாயகனை
தேடிக் கண்டு கொண்டேன்

கல்லுக்கும் உயிருண்டு எனவே காட்டிய
செல்வ விநாயகரை
வேலூரில் கண்டதும் சோறுண்ட பிள்ளையை
நாரையூரிலே கண்டேன்

அம்மை யப்பரை வலம் வந்த விநாயகர்
அருள்வது திருவலத்தில்
ஆயிரம் கரும்பின் சாறு பருகியது
கும்ப கோணத்திலே
வாதாபி கணபதி திருச் செங் காட்டாங்குடி
வீரஹத்தி வேதாரண்யம்
ஆபத்துக் காத்தது ஜெயங்கொண்ட சோழபுரம்
நவசக்தி மயிலையிலே

ஊர்தோறும் உன்புகழ் ஆயிரம் ஆயிரம்
வேழ முகத்தவனே
பார் முழுதும் உந்தன் கோயில்கள் கோடி
பார்வதி புதல்வனே
பைரவி பாலனே

134. எங்கும் நிறைந்தவன்

நதிக்கரை ஓரம் தெருக்களின் மூலை
நாயகன் உன் மாடம்
விநாயகன்அருள் கூடம்
ஐயா உன் சந்நிதானம்

உனைத் தொழுவதற்கென்றொரு
தனி இடமில்லை
அங்கங்கு உன் கோயில்
கணபதி உந்தன் சந்நிதானம் (உனை)

உன்னை நினைக்காமல் ஒரு செயலும் இல்லை
அன்புப் பிள்ளையாரே
உலகம் முழுவதும் உந்தன் திரு நாமம்
போற்றி வணங்கு வாரே
பாட்டாளித் தோழர்கள் சாணத்தால் பிடித்துன்னை
கூப்பிட்டுத் துதிப்பாரே
பத்தினிப் பெண்டீர்கள் மஞ்சளில் சந்தனத்தில்
வரவேற்று மகிழ்வாரே (உனை)

உருவம் இல்லையெனும் தத்துவத் திற்கொரு
ஒப்புதல் தருபவன் நீ
உண்டென்று சொல்வதுபோல் தொந்தி வயிற்றோடு
நன்று தோன்றுபவன் நீ
மிருகமும் தேவனும் கலந்தது வாழ்வென்று
உரைத்திட வருபவன் நீ
உரைகளைத் தீர்ப்பதும் பரகதி சேர்ப்பதும்
விளையாட்டாய்க் கொண்டவன் நீ (உனை)

135. மூத்தவன்

ஐந்து தெய்வங்களும் உன்னில் அடங்கிடும்
ஆதீ நாயகா விநாயகா
ஐங்கரம் ஐந்தொழில் ஆற்றிடும் மோதகம்
ஆனந்தம் அளித்திடும் நாயகா
பேரானந்தம் அளித்திடும் நாயகா

ஜெய ஜெய கணபதி சித்தி கணபதி
ஜெய ஜெய கணபதி வாழ்கவே
ஜெய ஜெய கணபதி புத்தி கணபதி
ஜெய ஜெய கணபதி வாழ்கவே (ஐந்து தெய்வங்களும்)

ப்ரம்ம தேவன் உந்தன் நாபியில் அமர்வான்
திருமால் திருமுகம் ஆவான்
பிறை நெற் றியிலே நடுமுக் கண்ணில்
சுடராய் சிவனும் திகழ்வான்
இடப்புறம் பார்வதி சக்தியின் அம்சம்
வலப்புறம் சூரியன் வளர்வான்
மனிதன் தேவன் விலங்கு பூதம்
இணைந்த தோற்றம் அழகே

ஜெய ஜெய கணபதி சித்தி கணபதி
ஜெய ஜெய கணபதி வாழ்கவே
ஜெய ஜெய கணபதி புத்தி கணபதி
ஜெய ஜெய கணபதி வாழ்கவே (ஐந்து தெய்வங்களும்)

முதல் ஆதாரம் மூலாதாரம் புவியின் கோலம் நீயே
அகரம் உகரம் மகரம் சேர்ந்த ப்ரணவ நாதம் நீயே
உலகம் யாவும் உன்னுள் அடங்கும் எங்கும் எதிலும் நீயே
அறம் பொருள் இன்பம் வீடென நான்கும் அளிக்கும்
வல்லபம் நீயே

ஜெய ஜெய கணபதி சித்தி கணபதி
ஜெய ஜெய கணபதி வாழ்கவே
ஜெய ஜெய கணபதி புத்தி கணபதி
ஜெய ஜெய கணபதி வாழ்கவே

(ஐந்து தெய்வங்களும்)



136. விநாயக சதுர்த்தி

முந்தி முந்தி வந்தாய் எங்கள்
அன்புத் தெய்வம் அல்லவா
தொந்தி நிறைய தந்தோம் கணபதி
தும்பிக்கை தூக்கி ஓடிவா

அப்பம் அதிரசம் கற்கண்டு சீனி
அவல்பொறி கடலை மோதகம்
முக்கனி மாதுளை கரும்புடன் இளநீர்
வைத்தோம் வந்திடு வேண்டினோம்
ஆவது யாவும் ஆவணி மாதம்
விநாயகவா நீ வா

விழா நேரம் வந்தது வந்திடு தேடினோம்.
விநாயகா உன் வருகை நோக்கி கூடினோம்
இதோ உந்தன் பூஜை தொடங்குது பாடினோம்
(முந்தி முந்தி)

சங்கரி மைந்தா வேண்டும வரம் தா
சாமி பிள்ளையாரப்பா
ஐங்கரம் கொண்டு அகிலம் காக்கும்
யானை முகத்தோய் வா அப்பா
மங்களப் பெருநாள் சதுர்த்தித் திருநாள்
தேரில் ஏறி வா
மங்காத செல்வம் மாறாத வாக்கு
சந்தானம் சந்தோஷம் தந்திடப்பா (முந்தி முந்தி)

பாளை வாழை மாவிலை மஞ்சள்
கோலம் யாவும் பாரப்பா
பாட்டு கூத்து நாதஸ் வரங்கள்

மேளம் தாளம் கேளப்பா
மூன்று நாட்கள் விருந்து படைப்போம்
வந்தே தங்கப்பா
முப்போதும் உந்தன் பொற்பாதம் வேண்டும்
எப்போதும் தப்பாது காத்திடப்பா

(முந்தி முந்தி)



137. அற்புதக் கற்பகம்

எந்தச் செயலும் உன்னிடம் தொடக்கம்
எல்லாப் பொருளும் உன்னில் அடக்கம்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்த நேரமும் சிந்தனை நீயே
முன்னை முதலே மூத்தவா போற்றி
என்னை உன்னிடம் சேர்த்தவா போற்றி
கண்ணின் மணியே அன்னையே போற்றி
கந்தப் பெருமான் அண்ணனே போற்றி
தொந்திக் கணபதி பாதங்கள் போற்றி

கணபதி பாதம் சரணடைந் தோமே
காத்திட வேண்டும் பார்த்திட வேண்டும்
தினம் உனை வேண்டும் வரந்தர வேண்டும்
செல்வங்கள் வேண்டும் ஜெயம்தர வேண்டும்
நாவில் சரஸ்வதி ஆடி வேண்டும்
நல்லவர் யாவரும் போற்றிட வேண்டும்
பாரெங்கும் நான் சென்று புகழ் பெற வேண்டும்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்திட வேண்டும்
எல்லோர்க்கும் நல்லோனாய் வாழ்த்திட வேண்டும்

சுக்லாம் பரதரம் என்றேதான் சொல்வோம்
தோப்புக் கரணம் போட்டிடுவோமே
சுழி போட்டு எதனையும் தொடங்கிடுவோமே
தும்பிக்கையினை நம்பிடு வோமே
உன்னை நினைத்தால் வெற்றி உறுதி
நினைக்காமல் சென்றால் வருவது மறதி
கண்ணை மறைப்பது உந்தனின் லீலை

கவனமாய் இருப்பது எந்தனின் வேலை
தவறுகள் நேர்ந்தாலும் பொறுத்திடு அப்பா

அகரம் உகரம் இரண்டும் ஆனாய்
சிவனும் உமையும் ஈன்றவா வா,வா
ஓம் எனும் ஒலியே வேழமாய் மாறும்
ஒளிவடி வாகி நின்றவா வா வா
சித்திர மண்டபம் தன்னில் பிறந்தாய்
சித்திகள் எட்டும் சேர்ந்திடச் செய்தாய்
முத்தமிழ் என்பது மோதகம் என்பாய்
அற்புதக் கற்பகம் ஆனந்தம் தந்தாய்
பக்கத் துணையாய் எப்போதும் இருப்பாய்
(எந்தச் செயலும்)

தந்தையைப் போலே நெற்றியில் முக்கண்
தாயினைப் போலே அங்குசம் பாசம்
உந்தன் வயிற்றில் அண்டம் அடக்கம்
தந்திடு என்றால் கேட்டது கிடைக்கும்
தும்பிக்கை தூக்கி நம்பிக்கை ஊட்டும்
அன்பின் சின்னம் அருள்வது திண்ணம்
ஒற்றைத் தந்தம் பாரதம் எழுதும்
நெற்றியில் முக்கண் வெற்றியை நல்கும்
பற்றினோம் தாமரைப் பாதங்கள் சரணம்

மனிதன் மிருகம் தேவனும் நீயே
உன்திரு உருவினில் அமைத்துக் கொண்டாயே
உயிர்க்குலம் யாவும் நான்தான் என்பாய்
உள்ளத்தின் உள்ளும் வந்தமர் வாயே
அமரர் தொழுவார் அடிபணிவாரே
யாகம் வளர்ப்பார் வா என்றழைப்பார்
ஐயா நீயும் அநுக்ரஹம் தருவாய்
ஆபத்துக் காலத்தில் அடைக்கலம் நீயே
அஞ்சிடு வோர்க்கெலாம் படைக்கலம் நீயே

138. ஸ்ரீ கணபதி

விருத்தம்

ஓம் நீ ஒலி நீ ஒளி நீ உயிர் நீ வா வா......

குழு: வருகவே கணபதி குணநிதி அருள்நதி
வருகவே வருகவே வருகவே வருகவே
ஓம் என்னும் நாதமாகும் மந்திரம் பிரணவம்
நாம் காணும் வேழமாகும் தந்திரம் அதிசயம்
பூமாலை போட வந்தோம்
பாமாலை பாட வந்தோம்
முன்னவனே உன்னை எண்ணி வேண்டுகின்றோம்
இன்னல் எல்லாம் பின்னே தள்ளி தாண்டுகின்றோம்
வருகவே கணபதி குணநிதி அருள்நதி
வருகவே வருகவே வருகவே வருகவே

(ஓம் என்னும்)

நீ யே மூலம்
நீ யே ஞாலம்
யா வும் நீ
உன் தும்பிக்கை எந்தன் நம்பிக்கை - அது
வாழ்த்திடும் என்னைக் காத்திடும்
தந்தம் அது சந்தம் தரும்
அண்டம் எல்லாம் தொந்தியிலே
மோதகம் சாதகம் வாழ்வு தரும்
அபயம் வரதம் அஞ்சேல் என்னும்
வருகவே கணபதி குணநிதி அருள்நதி
வருகவே வருகவே வருகவே வருகவே

(ஓம் என்னும்)

நீயே நாதம்
நீயே கீதம்
வேதம் நீ
உன் செவிகள் வந்தே விசிறும் - என்
வினைகள் எல்லாம் விலகும்
பாசம் அது நேசம் தரும்
அங்கு சத்தால் பகை விலகும்
பாதம் போதம் ஞானம் தரும்
பத்து மலையில் காட்சி தரும்

(ஓம் என்னும்)



139. ஸ்ரீ கணபதி

அருள்தரும் கணபதியே - கொல்லம்
உமா மஹேஸ்வரர் கோயிலின் செல்வா
முருகனின் மூத்தவனே - எங்கள்
குல நலம் காக்கும் சிவனின் புதல்வா
(அருள்தரும்)

ஓம் என்னும் நாதத்தின் உருவமான உந்தன்
வேழ முகம் வாழ்வு தரும் வேறென்ன வேண்டும்
கல்வி வேண்டுமா நவநிதி எனும்
செல்வம் வேண்டுமா சேரும்
வீரம் வேண்டுமா விதியெனும் தடை
தீரம் வேண்டுமா கூடும்
என்ன வேண்டுமோ உன்னை வேண்டினால்
திண்ணமாக ஜெயம் உண்மை சத்தியம்
(அருள்தரும்)

தும்பிக்கை நம்பிக்கை நல் வாழ்த்துக் கூறும்
அஞ்சாதே யாரையும் நீ கெஞ்சாதே என்னும்
மோதகம் தரும் செயல் எதனிலும்
சாதகம் செயும் சரணம்
மானமும தரும் எது சரி எனும்
ஞானமும் தரும் சரணம்
அம்மை யப்பனின் அருமைப் பிள்ளை நீ
உன்னை வேண்டி தினம் ஹோமம் செய்குவோம்
(அருள்தரும்)

140. விநாயகச் சதுர்த்தி விழா

ஓங்க பொறந்த நாளினிலே.....
ஊரெங்கும் கொண்டாட்டம்
வாழை மாவிலைத் தோரணம்
வாண வேடிக்கை ஆர்ப்பாட்டம்
ஆவணி மாசம் வளர்பிறைக் காலம்
நான்காம் நாள் சதுர்த்தி
வானத்து நெலவெ பாத்த பின்னே
எல்லாப் பாவமும் நிவர்த்தி
பிள்ளையாரே வாங்க அள்ளி அள்ளித் தாங்க
(ஓங்க)

சாணியிலே பிடிச்சாலும் சம்மதிச்சு வருவீங்க
சந்தனத்தில் மஞ்சளிலே தரிசனம் தருவீங்க
களிமண்ணெ பெசஞ்சு கைகாலு கண்ணுவச்சோம்
கொழுக்கட்டை தின்பண்டம் பிடிச்சதெல்லாம் படச்சோம்
கணபதியே வாங்க காப்பாற்ற வாங்க
(ஓங்க)

தும்பிக்கை தூக்கிவிட்டா நம்பிக்கை கைகூடும்
துணையாக நீங்கவந்தா பயமெல்லாம் பறந்தோடும்
அண்டங்கள் உருண்டு வந்து ஓங்ககையிலே மோதகம்
யானெமொகம் அசெஞ்சாலே எல்லாமே ...... சாதகம்
விநாயகரே வாங்க வினைதீர்க்க வாங்க
(ஓங்க)

141. சோதனை ஏன்?

கல்தானா நீ கடவுள் இல்லையா?
கணபதியே சோதனைக்கு அளவு இல்லையா? வெறுங்
(கல்தானா)

நான்கொண்ட நம்பிக்கை வீண்போனதா
நலம்செய்யும் தும்பிக்கை பலம் போனதா
யானை முகம் என்ன அசையாததா
ஏழைகுரல் கேட்டும் இசையாததா? வெறுங்
(கல்தானா)

முன்பு செய்த தவறினுக்கு இந்தக் கொடுமையா-நீ
தந்திருக்கும் தண்டனைக்கு மாற்று இல்லையா
நெஞ்சமென்ன கொஞ்சமேனும் இளகவில்லையா-நீ
நேரில் வந்து எந்தனோடு பழகவில்லையா?
பக்தி மனத்தினர் நித்தம் துதித்திடும்
சக்தி சிவன் மகனே
முக்தி எனும் ஒரு வித்து விளைத்திடும்
தத்துவ நாயகனே
சித்தம் களித்தொரு சக்தி கொடுத்திடும்
சித்தி விநாயகனே!

வன்பிணி தீர்த்தருள்வாய்
என்முகம் பார்த்தருள்வாய்
அன்புடன் காத்தருள்வாய்



மலேசியத்து விநாயகர்


श्री

142. போங்திபால்

கீழ்த்திசை நோக்கி வீற்றிருக் கின்றான்
கீர்த்திக்கு அளவில்லை
மலேசியா போங்திபால் நகரில்
மகிழ்ச்சிக்கு குறைவில்லை
ஸ்ரீ சித்தி விநாயகன் திருவடி தொழுதால்
எற்கும் தடையில்லை
தரிசனம் தினம் தினம் பார்க்கின்ற பேறு
பேரின்ப எல்லை அம்மா பேரின்ப எல்லை
(கீழ்த்திசை)

குடிசை இங்கே கோபுரம் ஆனது அதிசயம் அது உண்மை
குழந்தை பாக்கியம் வெள்ளையர் வேண்டுதல் நடந்ததுவே நன்மை
பளிங்குக் கோயிலில் எழுந்தருள் புரிந்தான் பரமனின் மூத்தபிள்ளை
குடமுழுக் காற்றி மண்டபம் இடர் இனி எமக்கில்லை
(கீழ்த்திசை)

மோதகம் தருவோம் சாதகம் செய்வான் தீயவை உடன் விலகும்
முத்துக் குமரனின் அண்ணனின் சக்தி எட்டுத் திக்கும் பரவும்
வேழ முகத்தான் ஆலயம் வருவார் வேண்டியதைப் பெறுவார்
நாளும் நாளும் மேலும் மேலும் நலங்களெல்லாம் பெறுவார்
(கீழ்த்திசை)

143. கோலக்கங்சார்

கோலக்கங்சார் அரச நகரில்

கொலுவிருக்கும் பிள்ளை
யாரதுபிள்ளை பார்வதி பிள்ளை
யானைமுகப் பிள்ளை
(கோலக்கங்சார்)

ஜாலான் இட்ரீஸ் சாலையில் கோயில்
சந்நிதி வாருங்கள்
ஜாதி மதம் இனம் பேதங்கள் மறந்து
கூட்டம் பாருங்கள்
(கோலக்கங்சார்)

வெள்ளத்தில் மீண்டு வெளிவந்த பிள்ளை
உள்ளத்தில் உள்ளாரே
வினைகளை நீக்கி விடிவினைக் காட்ட
துணையாய் வருவாயே
ஆலய மணியின் ஓசை அழைக்குது
அருள்பெற வருவீரே
அரச மரத்தடி நாகரை வணங்கி
இல்லறம் புகுவீரே
(கோலக்கங்சார்)

144. சித்தியவான்

சித்தி தரு வான் - புதிய
சக்தி தரு வான் - நல்ல
புத்தி தரு வான்
சித்தியவான் - ஸ்ரீ- சித்தி விநாயகன்
(சித்தி தரு வான்)

சித்திரா பௌர்ணமியில் பக்தர்களின் கூட்டம்
சிவராத்திரி நேரத்தில் திருவிழா கொண்டாட்டம்
மார்கழிப் பனிக்காலம் கோயிலில் உற்சாகம்
தைப்பூசம் சோமவாரம் பூஜைகள் அலங்காரம்
ஆவணிமாதம் - அவன் அவ தாரம்
காணக்கோடி கண் வேண்டும்
சதுர்த்தித் திருநாள் மகிழ்ச்சி வெள்ளம்
பங்குனி உத்திரம் பரவசமே
(சித்தி தரு வான்)

வெள்ளிக் கிழமை அது எப்போது வரும் என்றே
உள்ளம் துடிக்கும் அன்பர் ஓடோடி வருவார்கள்
நாவாரப் பாடுகின்ற தேவார இசை முழக்கம்
கூட்டு வழிபாடு கேட்டதெல் லாம் கிடைக்கும்
முத்தமிழ் அங்கே தத்தித் தவழும்
சித்தி கணபதி சிரம் அசையும்
வித்தகர்க் கெல்லாம் தித்திக்கும் விருந்து
வினைகளை நீக்கும் அரு மருந்து
(சித்தி தரு வான்)

145. பீடோர்

பீடோர் திருத்தலத்தில்
பீடுமிகு பிள்ளையார்
நாடிவரும் பக்தருக்கு
நல்லதெல்லாம் நல்குவார்
(பீடோர்)

தன்னை வந்து தொழுபவர்க்கு
என்ன வேண்டும் அறிவார்
அன்னைக்குலம் தழைப்பதற்கு
அருள் புரிய வருவார்
ஆவணியில் சதுர்த்தி விழா
ஆரவாரம் பெரிது
அவல் பொறியும் மோதகமும்
அவருக்கே உரிது
பௌர்ணமியில் திருவிளக்கில்
திருமகளின் தோற்றம்
இளைஞர்களின் ஆக்கம்
எல்லோர்க்கும் ஏற்றம்
(பீடோர்)

146. பேராங்உலு-கம்போங்பாரு

செந்தமிழில் பாட்டு
தேவாரப் பாட்டு
தினம் தினம் பாட்டு
தும்பிக்கை ஆட்டு
பேராங் உலுவின் பேர்பெற்ற தெய்வமே
சீரார் கணபதியே நல்வழி காட்டு
(செந்தமிழில்)

கம்போங் பாருவின் கருணா மூர்த்தியே
கும்ப பூஜையிலே வந்தெம்மைக் காக்கவே
புலர்காலைப் பொழுதிலே புனிதம் உன் ஆலயம்
போற்றித் தொழுவார்கள் நெஞ்சினில் நீ லயம்
நெஞ்சினில் நீ லயம் - நெஞ்சினில் நீ - லயம்
(செந்தமிழில்)

எல்லோரும் வழிபடும் ஏகாந்த தரிசனம்
இனம்,மொழி, கடந்த நின் லீலைகள் அற்புதம்
ஓம் எனும் ஒலியதன் ஒளிமிகு வடிவமே
உள்ளத்தில் உலவிடும் ஒப்பிலா தெய்வமே
ஒப்பிலா தெய்வமே - ஒப்பிலா தெய்வமே
(செந்தமிழில்)

147. கோலகுபு பாரு

கோலகுபு பாரு
நீ வந்து பாரு
மூலமுதல் நாயகனின் மகிமை
ஆதிவி நாயகனின் பெருமை- அருள்
ஜோதி கணபதியின் அருமை
(கோலகுபு பாரு)

திருவாரூர்த் தேரில் பவனி வருவாரு
பல உருவம் காட்டி மனது கவர்வாரு
சிவனாரின் பிள்ளை உமையாளின் மடியில்
அடியார்கள் உள்ளம் அவரின் திருவடியில்
(கோலகுபு பாரு)

சந்ததிக ளோடு சகலசம்பத்து
தந்ததது யாரு நம் பிள்ளை யாரு
அண்டமெலாம் அவரின் தொந்தியிலே அடக்கம்
தும்பிக்கை என்றும் நம்பிக்கை கொடுக்கும்
(கோலகுபு பாரு)

148. ஸ்ரீ வீரகத்தி விநாயகர்

அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயம்
வருபவர் வாழ்வினில் சுடர்விடும் ஒளிமயம்
ரவாங் நகரதன் நடுவினில் நாயகன்
நவசக்தி நாதனாம் சித்தி விநாயகன்
(அருள்மிகு)

சீனரும் தேடுவார் அர்ச்சனை செய்குவார்
ஆண்டு முதல் நாளில் ஹோமம் நடத்துவார்
நூற்றெட்டு கலசத்தில் தீர்த்தங்கள் சூழுமே
புனித நதிகளெல்லாம் அதில் வந்து சேருமே
(அருள்மிகு)

மலையகத் தமிழர்கள் மலைமகள் பிள்ளையை
வழிபடும அழகதை வார்த்தைகள் விளக்குமோ
சமயம் காப்பதை கடமையாய்க் கொள்ளுவார்
கணபதி கருணையை உலகிற்குச் சொல்லுவார்
(அருள்மிகு)



149. கோர்ட்டு மலை ஸ்ரீகணேசர்

உருகி உருகி - கண்ணீர் - பெருகி பெருகி - மனம்
உருகி உருகி - கண்ணீர் - பெருகி பெருகி
ஒரு தொழிலாளி உருவாக்கிய சிற்பம்
சிறுக சிறுக வளர்ந்து செழித்து
தெய்வீக மணம் பரப்புது நித்தம்
கோலாலம்பூர் கோர்ட்டு மலை கணபதி
நாலாபுறமும் நலம் வளர்க்கும் குணநிதி
கணபதி - எங்கள் - கணபதி
(உருகி உருகி)

எந்தன் எல்லையில் இந்தக் கோயில் எதற்கு
இடிப்பேன் என்ற வாக்னர் துரைக்கு வலுப்பு
நொந்த போது மருந்தானது நீறு- திருநீறு - அதன்
நன்றிக் கடன் பிள்ளையார் வந்தாரு- எழுந்தாரு
ஆற்றல்மிகு கோர்ட்டுமலை கணபதி
போற்றுவார்கள் பெறுவார்கள் நவநிதி
கணபதி-எங்கள்-கணபதி
(உருகி உருகி)

கணபதிமேல் தர்ப்பைப் புல்லை வைத்து-குரு
ஜபம் செய்யக் காணலாமே கண்முன்
மனம் பொருந்தி நினைப்போர்கள் உணர்வார்
அதிசயந்தான் ஆனாலும் உண்மை
சக்திமிகு கோர்ட்டு மலை கணபதி
பக்தருக்கு உற்றதுணை அருள்நதி
கணபதி - எங்கள் - கணபதி (உருகி உருகி)

150. செந்தூல் கணபதி

நல்லூர் செந்தூல் விநாயகன்
நலம்தரும் நாயகன்-அவனை
சொல்லால் செயலால் வழிபட வருக
தூயவன் - நல்ல
துணைவன் எதிலும் ஜெயம் ஜெயம்

(நல்லூர்)

அல்லும் பகலும் அவன் நினைவே-விழி
ஆனந்தக் கண்ணீர் வடித்திடுதே
கங்கைக் கரையின் செல்வன் அவன் - புனித
காசிநகர் மைந்தன் இங்கு வந்தான்

(நல்லூர்)

ஜாலான் ஈப்போ அன்பரெலாம்-பரஞ்
ஜோதி விநாயகன் பதம் தொழுவார்
தேரில் ஏறி அவன் வருவான் - நம்
தீரா வினையையும் தீர்த்திடுவான்

(நல்லூர்)



151. ஜாலான் புருணை

பாரத தேசத்தின் பவித்ர மணலெடுத்து
மூலஸ்தானம் அமைத்தோமே
கோலா லம்பூர் ஜாலான் புருணையில்
ஞான விநாயகனை அழைத்தோமே
(பாரத தேசத்தின்)

ஆகம முறைப்படி பூஜைகள் நடத்தி
ஆன்மிகம் தழைக்கச் செய்தோமே
தேவார இன்னிசை நாளும் நிகழ்த்தி
செந்தமிழ் மந்திரம் ஜபித்தோம்
(பாரத தேசத்தின்)

சித்தி கணபதி பக்தியில் திளைத்தோம்
சித்திர மண்டபம் கண்டோமே
எத்திக்கும் அவன்புகழ் பாடி மகிழ்ந்தோம்
என்றும் அவன்முன் நின்றோமே
(பாரத தேசத்தின்)

அவல்பொறி கடலை அறுசுவை விருந்து
அருந்துக என்றே தந்தோமே
யானை முகத்தான் பாதங்கள் பற்றி
மேல் நிலைக்கு வந்தோமே
(பாரத தேசத்தின்)

152. மலேசியத் திருக்கோயில்கள்

பிள்ளையா ரப்பா பிள்ளையா ரப்பா-நீ
இல்லாத இடமில்லை பிள்ளையா ரப்பா

(பிள்ளையாரப்பா)

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
அண்டமெல்லாம் நீ எங்கெங்கும் நீதான்
பூ உலகெங்கும் மானிட ஜாதி
போற்றி வழிபடும் தெய்வமும் நீதான்

(பிள்ளையாரப்பா)

மலேசிய நாட்டில் உன்திருத் தலங்கள்
பலப்பல உண்டு பக்தர்கள் தொண்டு
கோலா அம்பாங் மலாக்கா நடுவில்
கற்பகக் களிற்றின் அற்புதம் உண்டு

(பிள்ளையாரப்பா)

ஐயா கணபதி நீ பொய்யா கணபதி
பெட்டாலிங் சிலாங்கூர் சித்தி கணபதி
தம்பின் நகரில் சுந்தர கணபதி
ஜாலான் செலாஸில் தோகையடிப் பிள்ளை
எங்கே இல்லை பார்வதி பிள்ளை
வந்தே தொழுதால் வருமோ தொல்லை
அன்பால் அவனை அடைவோம் வருக
ஐங்கரத் தானின் அருளைப் பெறுக
ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி சரணம்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
   ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஸ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஸ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கர!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி
(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)
19. ஞாலம் போற்றிய ஞானியர்
20. மாதாவே! மரியே...!
21. மாசிலா ஏசு
22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)
23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)
24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)
25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)
26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)
27. காதல்! காதல்!
28. என் இரு விழிகள்
29. எண்ணிப் பார்க்கிறேன்
30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)
31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)
32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)
33. பாத மலர்கள்
34. இசை மாலை
35. சாரல்
36. பொங்க புனல்
37. கங்குள் வெள்ளம்
38. இன்பத் தீ
39. செக்கர் வானம்
40. அன்னையடா அன்னை
41. வளரும் பயிர்
42. பொன்மாரி மொழிகள்
43. மலேசிய திருத்தலங்கள்

குறிப்புகள்

இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக் காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...

தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.